D. L. MOODY'S ADDRESSES

D. L. மூடி பிரசங்கியாரின்

பிரசங்கங்கள்

பதிப்பித்தவர்:-

S. தாமஸ் இரத்தினம்

விலை ரூ. 1-50

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

MOODY'S ADDRESSES

D. L. மூடி என்பவரின்

பிரசங்கங்கள்

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

முதல் பதிப்பு 1884 ௵
இரண்டாம் பதிப்பு 1955 ௵
மூன்றும் பதிப்பு 196[illegible] ௵

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No. 026
BANGALORE-23

பதிப்பித்தவர்:-
S. தாமஸ் இரத்தினம்

விலை ரூ. 1-50

முகவுரை

D. L. மூடி பிரசங்கியார் அமெரிக்காவில் 5-2-1837ல் பிறந்தார். அவரை மகிமையின் பிதா தமது பிள்ளை யாக்கி, அநேகமாயிரம் பேர் இரட்சிக்கப்படுவதற்கும், பரிசுத்த வாழ்க்கை நடத்துவதற்கும் ஏதுவாக உபயோ கித்தார். 22-12-1899ல் தேவ லோகப் பிரவேசமானார். அவர் செய்த இந்தப் பிரசங்கங்கள் அநேகர் இரட்சிக்கப் படுவதற்கும், பரம இராஜ்யத்துக்கடுத்த ஆவிக்குரிய வாழ்க்கை நடத்துவதற்கும், உத்தம தேவ ஊழியம் புரிவ தற்கும் ஏவுகிற அருமையான நூலாய் விளங்குகிறது. "கீழ்ப்படிதல்" என்ற பிரசங்கம் "ஜீவ வழி" என்ற நூலில் சேர்ந்ததாகையாலும், அந்நூலை திரும்பவும் பிரசுரிக்கத் தீர்மானித்திருப்பதாலும் இப்பதிப்பில் அது நீக்கப்பட்டிருக்கிறது.

யாவருக்கும் பயன்படுமாறு இந்நூல் திரும்பவும் பிரசுரிக்கப்படுகிறது.

தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

கீழ ஆம்பூர்
25—10—'62

S. *தாமஸ் இரத்தினம்*

பொருள் அட்டவணை

		பக்கம்
I	"நீ எங்கே இருக்கிறாய்?" (ஆதி. 3:9)	1
II	கிறிஸ்து பாவியைத் தேடுதல் (லூக். 19:10)	27
III	பாவி கிறிஸ்துவைத் தேடுதல் (ஏசாயா 55:6)	56
IV	போக்குச் சொல்லத் தொடங்கினார்கள் (லூக். 14:18-20)	75
V	கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? (மத்தேயு 22:42)	94
VI	மோட்சம் 1-ம் பங்கு	111
VII	மோட்சம் 2-ம் பங்கு	123

MOODY'S ADDRESSES

மூடி என்பவரின்

பிரசங்கங்கள்

I

"நீ எங்கே இருக்கிருய்?"

ஆதியாகமம் 3 : 9

மனுஷன் பாவஞ் செய்தான் என்ற செய்தி மோட்சத்துக்கு எட்டிய பின்பு சம்பவித்த முதல் காரியம். தேவன் கெட்டுப்போன மனிதனைத் தேடிப் பூமிக்கு வந்தார் என்பதே. அவர் பகலில் குளிர்ச்சியான வேளையில் தோட்டத்தில் உலாவுகையில் ஆதாமே, ஆதாமே, நீ எங்கே இருக்கிருய் என்று கூப்பிட்டார். அது கிருபை, இரக்கம், அன்பு ஆகிய இவைகளின் குரல். ஆதாமே தேட வேண்டியவன், அவனே குற்றஞ் செய்தவன், அவனே தோட்டத்தில் அங்கும் இங்கும் ஓடி என் தேவனே, என் தேவனே, நீர் எங்கே இருக்கிறீர் என்று தேட வேண்டியது. அதற்குப் பதிலாக தேவனே மோட்சத்தை விட்டு கெட்டுப்போன கலகக்காரனைத் தேடும்படி ஈன பூமிக்கு வந்தார். பூமியை விட்டு அவனைத் துரத்திப்

போடும்படியாக அல்ல, பாவத்தின் நிர்ப்பந்தத்தில் நின்று அவனை இரட்சிக்கும் வழியை உண்டாக்கவே வந்தார். அவர் அவனைக் கண்டுபிடித்தார். எங்கே? தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே, தன் சிருஷ்டிகருக்கு மறைந்து ஒளித்துக் கொள்ளுகிறவனைக் கண்டார்.

ஒரு மனுஷன் தேவனுடைய பிள்ளை என்னப்பட்டவன் ஆனாலும் சரி, தேவ ஐக்கியத்தை இழந்துபோகும் நிமிஷத்திலே அவருக்கு மறைந்து ஒளித்துக்கொள்ள விரும்புகிறான். தேவன் தோட்டத்திலே ஆதாமை வைத்துப்போன பொழுது, தன் சிருஷ்டிகரோடு ஐக்கியமாய் இருந்தான். தேவன் அவனுடன் பேசினார். அவன் பாவத்தில் விழுந்தபோதோ தேவ ஐக்கியத்தை இழந்து போனான். அவரைக் காணவும் அவரை நினைக்கத்தானும் அவனுக்கு மனம் இல்லை. ஓடி தேவனுக்கு மறைந்து கொள்ளுகிறான். ஆனாலும், அவனுடைய ஒளிப்பிடத்திற்கு அவன் சிருஷ்டிகர் சென்று ஆதாமே, எங்கே இருக்கிறாய், எங்கே இருக்கிறாய் என்று கூப்பிடுகிறார்.

ஆறாயிரம் வருஷங்கள் கடந்துபோயும், இந்த வார்த்தைகள் உருண்டுகொண்டே வருகின்றன. ஆதாமின் புத்திரரில் யாராவது ஒருநாள் இல்லாவிட்டால், பின்னொரு நாள் இவ்வார்த்தைகளைக் கேளாதிருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். நான் எங்கே இருக்கிறேன்? நான் யார்? எங்கே போகிறேன்? இதன் முடிவு என்னமாய் இருக்கும்? என்ற கேள்விகள், இராக்காலத்தில் அர்த்த சாமத்திலாவது அவன் மனதில் வந்திருக்கும். ஒரு மனுஷன் தனித்திருந்து முகவுரையில் இருக்கும் கேள்வியை

தன்னிடத்தில் கேட்பது நலம் என்று எண்ணுகிறேன். வாலிபனே, வாலிப ஸ்திரியே, இக்கேள்வியை நான் உன்னிடத்தில் கேட்கிறேன். மயிர் நரைத்துக் கண்கள் மங்கி பெலன் குறைந்துபோகிற வயோதிபனே, நீ சீக்கிரம் மறு உலகத்துக்குப் போவாய்; உன்னிடத்தில் இக் கேள்வியைக் கேட்கிறேன். உன் அயலாரின் பார்வையில் நீ எங்கே இருக்கிறாய் என்று நான் கேட்கவில்லை. உன் சிநேகிதர் பார்வையில் நீ எங்கே இருக்கிறாய் என்று நான் வினவவில்லை. உன் ஊராரின் பார்வையில் நீ எங்கே இருக்கிறாய் என்று நான் கேட்கவில்லை. நாம் ஒருவர் பார்வைக்கு ஒருவர் எங்கே இருக்கிறோம் என்பது அற்பக் காரியம்.

மனுஷர் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது அற்பக் காரியம். தேவன் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதே விசேஷம். தேவனுடைய பார்வையிலே மனுஷர் எங்கே இருக்கிறார்கள் என்று அறிவது பெரும் காரியம் என்றேன். அதுவே, இப்பொழுது நான் கேட்கும் கேள்வி. நான் தேவனுடன் ஐக்கியமாய் இருக்கிறேனா, அல்லது ஐக்கியமற்றவனாய் இருக்கிறேனா? ஐக்கியமற்றவனேயாகில் சமாதானம் இராது, சந்தோஷம் இராது, மனப்பாக்கியம் இராது. தேவனுடன் ஐக்கியமாய் இருப்போமாகில், நம்மைச்சூழ எல்லாம் ஒளியாய் இருக்கும். ஆகையால், இக்கேள்வியை உங்களிடம் கேளுங்கள்; உங்கள் அயலாருக்குப் பிரசங்கிக்கிறேன் என்று எண்ணாதிருங்கள். நீங்கள் தனியே இவ்விடம் இருந்தால்போல, உங்கள் ஒவ்வொருவருடனும் பேசுகிறேன் என்று நினைத்துக்கொள்ளுங்கள். மனுஷன் பாவத்தில் விழுந்தபின்பு, இது அவனிடம் கேட்கப்பட்ட முதல்

நீ எங்கே இருக்கிறுய்? மோட்சத்துக்குக் கிட்டி வரு கிறுயா? உனக்குள் இருக்கும் நம்பிக்கைக்கு நீ ஒரு நியாயம் சொல்லக்கூடுமோ? உண்மையாய்க் கிறிஸ்தவர் களாய் இருக்கிறவர்கள் எழுந்து நில்லுங்கள் என்று நான் கேட்டால், நீ எழுந்து நிற்க வெட்கப்படுவாயோ? இங்கே இருக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் கேட்கிறேன். இன்று மரணம் உன்னே வெட்டிக் கொல்லுமாகில், இரட் சிக்கப்படுவாய் என்று நீ நம்புவதற்கு நல்ல நியாய முடையவனுய் இருக்கிறுயா? நான் மரணத்தை விட்டு ஜீவனில் பிரவேசித்திருக்கிறேன் என்று நம்பப் போதிய நியாயமுள்ளவனுய் இருக்கிறேன் என்று தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக நின்று நீ சொல்லக்கூடுமோ? அல்லது சொல்லக்கூடாமல் இருக்குமோ? கடந்த வரு ஷங்களே நினைத்துப்பார். நீ ஒரு கிறிஸ்தவன் என்று சொல்வது அவைகளுக்குப் பொருந்துமா? உன் சொல் லுக்கு உன் ஜீவியம் இணங்குமோ? நாம் என்ன சொல்லுகிறேம் என்பதல்ல, நாம் எப்படி ஜீவிக்கிறேம் என்பதே பெரிய கேள்வி. செய்கைகள் சொல்லிலும் உரத்துப்பேசும். உன் நண்பர் நீ கிறிஸ்தவன் என்று அறிவார்களோ? உன் குடும்பத்தார் அறிவார்களோ?

நீ உயிரும் உடலுமாய் முற்றுய் கர்த்தரின் பக்கத்தில் நிற்கிறுய் என்று அவர்கள் அறிவார்களோ? ஒவ்வொரு கிறிஸ்தவனும் விசாரணே செய்வானுக. தேவனுடைய பார்வையில் நான் எங்கே இருக்கிறேன்? பரமண்டலத் தின் ராஜாவுக்கு என் இருதயம் உத்தமமாய் இருக் கிறதா? என்னுடன்கூட இருக்கும் ஜனங்களுக்குள்ளே நான் ஜீவிக்கவேண்டிய விதமாய் என் ஜீவியம் இருக் கிறதா? இந்த இருண்ட உலகத்தில் நான் ஒளியாய்

இருக்கிறேனு? நீங்கள் என் சாட்சிகள் என்று கிறிஸ்து சொன்னுர். கிறிஸ்து உலகத்தின் ஒளியாய் இருந்தார். உண்மையான ஒளியை உலகம் விரும்பவில்லை. என்னைக் குறித்துக் சாட்சி கொடுக்கும்படிக்கு உங்களை இங்கே வைத்துப் போகிறேன், எனக்குச் சாட்சிகளாய் இருக்கும் படிக்கு உங்களை இங்கே விடுகிறேன் என்று கிறிஸ்து சொல்லுகிருர். கிறிஸ்தவர்கள் எல்லா மனுஷராலும் அறியப்பட்டு வாசிக்கப்படுகிற ஜீவனுள்ள நிருபங்களாய் இருக்கிருர்கள் என்று அப்போஸ்தலன் சொல்வதின் கருத்து இதுவே. ஆகையால் இந்த இருள் நிறைந்த உலகத்தில் நான் கிறிஸ்துவுக்காக நிற்கவேண்டிய பிரகாரம் நிற்கிறேனு? ஒருவன் தேவன் பக்கமாய் நின்ருல் அப்படிச் சொல்வானுக. ஒரு மனுஷன் தேவனுக்காக நிற்கில், அவன் வெளியரங்கமாய் வந்து அவர் பக்கத்தில் நிற்பானுக. அவன் உலகத்துக்காக நின்ருல், உலகத்தோடு நிற்பானுக. தேவனுக்கும் உலகத்துக்கும் ஊழியம் செய்வதும், ஒரு வேளையிலே இருபக்கத்திலும் நிற்பதுமாகிய இதுதான் தற்காலத்தில் கிறிஸ்துமார்க்கத்துக்குக் கேடாய் இருப்பது. மற்றெந்தக் காரியத்திலும் பார்க்க அதிகமாய் இதுவே கிறிஸ்துமார்க்கத்தின் வளர்ச்சியைத் தடுக்கிறது. "ஒருவன் என் பின்னே வர விரும்பினுல், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்னப்படுகிறது.

தாங்கள் சபையுடன் சேர்ந்து ஒரு முறை கிறிஸ்துவை அறிக்கைசெய்தால் தங்கள் ஜீவியகாலம் முழுதுக்கும் அது போதும் என்று நினைக்கிற அநேக ஜனங்களைக் குறித்து நான் கேள்விப்பட்டேன். அனுதினமும் சுமக்கவேண்டிய

ஒரு சிலுவை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. தேவனு டைய பிள்ளையே, நீ எங்கே இருக்கிறாய்? தேவன் இந்த இரவு வெளிப்பட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்று கேட் டால் என்ன மறுமொழி சொல்லுவாய்? ஆண்டவரே, என் முழு இருதயத்தோடும், பெலனோடும் உமக்கு ஊழி யம் செய்கிறேன்; என் தாலந்துகளை ஆதாயப் படுத்தி உம்முடைய ராஜ்யத்துக்கு ஆயத்தம்பண்ணுகிறேன் என்று நீ உத்தரவு சொல்லக்கூடுமா? 1867-ம் ஆண்டு நான் இங்கிலாந்தில் இருந்தபொழுது, அங்கே டப்ளின் நகரில் இருந்துவந்த ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் லண்டன் நகரிலுள்ள ஒரு வர்த்தகனுடன் சம்பாஷிக்கையில் நான் அறைக்குள்ளே போனேன். என்னை இன்னார் என்று அவர் டப்ளின் நகரியானுக்குச் சொன்னார். அப்பொழுது டப்ளின் நகரியான் மற்றவரைப் பார்த்து, இவர் உச்சியும் உள்ளங்காலும் முற்றும் கிறிஸ்துவுக்காய் நிற்கிறவரோ என்று கேட்டார்.

அவ்வாக்குகள் என் உள்ளில் கிடந்து எரிந்து கொண்டிருந்தன. கிறிஸ்துவுக்காக உச்சியும் உள்ளங் காலுமாய் நிற்பது பெரிய காரியம். அப்படியே எல் லாக் கிறிஸ்தவர்களும் நிற்கவேண்டியது. கர்த்தரின் பக் கத்தில் நிற்கும் மனுஷர் வெளியே வந்து உறுதியாய் நின்று, காலம் வாய்த்தாலும் வாய்க்காதிருந்தாலும், தங்கள் குரலை உயர்த்துவார்களாகில், சீக்கிரமாய் உலகத் திலே அவர்களுடைய செல்வாக்குப் பெருகும். நான் முன் சொன்னதுபோல சபையிலே பலர் இருக்கிறார்கள், அவர்கள் ஒருமுறை சபையில் சேர்ந்தார்கள். பின் அவர்களைப்பற்றி ஒரு செய்தியும் இல்லை. இவர்கள் மரிக் கும் போது இவர்கள் கிறிஸ்தவர்களோ அல்லவோ என்று அறியும்படி, நீங்கள் போய் பூசணம்பிடித்த சில சபை

டாப்புகளைப் பார்க்கவேண்டும், அல்லது அறியமுடியாது. தேவன் அப்படிப் போய்ப்பாரார். தானியேல் மரித்த பொழுது, பாபிலோனில் உள்ளவர்கள் எல்லாரும் அவர் யாரைச் சேவித்தவர் என்று அறிந்தார்கள். அவர்கள் போய் பழைய புத்தகங்கள் பார்க்க வேண்டியதில்லை. அவருடைய ஜீவியமே அவர் சரித்திரத்தைச் சொன்னது. எங்களுக்குத் தேவையாய் இருப்பது கிறிஸ்துவுக்காக நிற்கத்தக்க தைரியமுள்ள மனுஷரே. கிறிஸ்து மார்க்கம் உயிரடைந்து, கர்த்தருடைய ஒவ்வொரு பிள்ளையும் அவருக்காக நிற்கப் பிரியமும், அவருக்காக வேலை செய்யப் பிரியமும், அவருக்காக மரிக்கப் பிரியமும் உள்ளவன் ஆகும்பொழுது கிறிஸ்து மார்க்கம் முன்னேறிச் செல்லும்; அப்போது கர்த்தரின் கிரியை அனுகூலமடைகிறதைக் காண்போம். மற்றதிலும் பார்க்க ஒன்றைக் குறித்தே அதிகம் பயப்படுகிறேன். அது தேவனுடைய சபையில் மரணத்தை ஒத்த குளிர்ந்த நிலைமையே. நம்மில் எவ்வளவு அநேகர் தூங்குகிறவர்களாயும் நித்திரை கொள்ளுகிறவர்களாயும் இருக்கிறோம். சூழ இருக்கிற ஆத்துமாக்களோ அழிந்து போகின்றன.

அமெரிக்கன் பத்திரிகைகளில் எல்லாம் சுற்றி வந்த ஒரு சிறு செய்தி இருக்கிறது. அது பிதாவுக்குரிய என் மனதில் ஆழமாய்ப் பதிந்தது. ஒரு பிதா, ஒரு ஓய்வு நாளில் தனது சிறு பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வயல் வெளிக்குப் போனான். உஷ்ணமான காலமாய் இருந்தபடியால் அவன் ஒரு அழகிய நிழல் மரத்தின் கீழே படுத்திருந்தான். அந்தப் பிள்ளை அங்கும் இங்கு ஓடி காட்டுப் புஷ்பங்களையும் பிடுங்கிக் கொண்டு தகப்பனிடம் வந்து, மெத்தச் சிறப்பு, மெத்தச் சிறப்பு என்று சொன்

நித்திரை எபேசியர் 5:14

னது. கடைசியாய்ப் பிதா நித்திரை மயக்கமானுன். அவன் நித்திரையாய் இருக்கையில் அந்தச் சிறு பிள்ளை வழிதப் பிப்போய் விட்டது. அவன் எழும்பினபோது என்பிள்ளை எங்கே என்று முதல் விசாரித்தான், சுற்றிப்பார்த்தான்; பிள்ளையைக் காணவில்லை. பெரும் குரலெடுத்துக் கூப் பிட்டான்; அவன் சத்தத்திற்கு எதிரொலி மாத்திரமே கேட்கப்பட்டது. சமீபமான ஒரு குன்றில் ஏறிச் சுற்றிப் பார்த்து திரும்பவும் கூப்பிட்டான்; ஏன் என்பார் இல்லை; கொஞ்சத் தூரத்திலுள்ள ஒரு செங்குத்தான மலைக்குப் போய் குனிந்து பார்த்தான். அங்கே கற்கள் மேலும் முட்செடிகள் மேலும் தன் அன்பான பிள்ளையின் நொறுங் கிய பிரேதத்தைக் கண்டான். அவ்விடத்திற்கு அவன் ஓடி உயிரற்ற உடலைக் தூக்கி தன் மார்பில் அணைத்து, நானே என் பிள்ளைக்குக் கொலைகாரன் என்று அழுதான். அவன் நித்திரையானபொழுது அவன் பிள்ளை செங்குத் தான மலையிலிருந்து விழுந்து இறந்தது. அதை நான் கேட்டபொழுது அதுதான் சரியாய் தேவனுடைய சபை யின் நிலைவரம் என்று நினைத்தேன்.

எத்தனை பிதாக்கள், மாதாக்கள், எத்தனை கிறிஸ்த வர்கள், இப்பொழுது நித்திரையாய் இருக்கிறுர்கள்? அவர்களுடைய பிள்ளைகளோ வழிதப்பிப் பயங்கரமான செங்குத்தான மலையிலிருந்து நரகபாதாளத்துக்குள் விழு கிறுர்கள். பிதாவே, உன் மகன் இன்றைக்கு எங்கே இருக் கிறுன்? மாதாவே, உன் மகள் எங்கே இருக்கிறுள்? பிதாவே, நாற்பது வருஷம் கிறிஸ்தவனுய் இருந்தாயே. இன்று உன் பிள்ளைகள் எங்கே இருக்கிறுர்கள்? நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல என்னைப் பின்பற்

றுங்கள் என்று நீ சொல்லத்தக்கதாய், தேவபக்தியுள்ளவனும் கிறிஸ்துவைப் போன்றவனும் ஜீவித்தாயோ? உன் பிள்ளைகள் ஞான பாதையில் நடக்கிறார்களோ? மகிமைக்குப் போகும் வழியில் செல்லுகிறார்களோ? கிறிஸ்துவின் மந்தைக்குள் சேர்க்கப்பட்டார்களோ? ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் அவர்கள் பெயர் எழுதப்பட்டிருக்கிறதோ? இன்றைக்கு இதற்கு மறுமொழி சொல்லஎத்தனை பிதாவும் மாதாவும் ஆயத்தமாய் இருக்கிறீர்கள்? எப்போதாலது தனித்து நீங்கள் குற்றவாளிகள், உங்கள் பிள்ளைகளுக்கு முன் நேர்மையாய் நடக்கவில்லை என்று எண்ணினீர்களா? இதை நம்புங்கள். சபை இவ்வளவாய் உலகத்தைப்போல ஜீவிக்கும்பொழுது நம்முடைய பிள்ளைகள் மந்தையில் சேர்க்கப்படுவார்கள் என்று காத்திருக்கக் கூடாது. ஆ, கர்த்தாவே வாரும்; ஒவ்வொரு மாதாவையும் எழுப்பிவிடும். பெற்றோராகிய நாங்கள் ஒவ்வொருவரும் தேவன் எங்களுக்குத் தந்த பிள்ளைகளுடைய ஆத்துமாவின் விலையை உணரும்படி செய்யும்.

அவர்கள் எங்கள் நரைமயிரைச் சஞ்சலத்தோடு பிரேதவறைக்குச் செல்லப் பண்ணுதிருப்பார்களாக; அவர்கள் சபைக்கும் உலகத்துக்கும் ஆசீர்வாதமாக இருப்பார்களாக. கொஞ்சக் காலத்துக்கு முன்னே, நான் அறிந்த ஓர் செல்வனின் ஒரேயொரு புத்திரி வியாதிப்பட்டு மரித்தாள். அவளுடைய மரணப்படுக்கைக்கு அருகாக பிதாவும் மாதாவும் நின்றார்கள். அவர்களுக்காகச் செல்வத்தைத் தேடி வைப்பதில் பிதா தன் நேரத்தை எல்லாம் செலவிட்டான். ஆடம்பரமான கூட்டங்களுக்குக்கொண்டு

போகப்பட்டாள். கிறிஸ்துவைப்பற்றியோ அவளுக்கு ஒன்றும் போதிக்கப்படவில்லை. மரண ஆற்றின் கரைக்கு வந்த போது அவள் மெத்த இருட்டாய் இருக்கிறது, எனக்கு உதவி செய்ய மாட்டீர்களோ என்ருள். துக்கத்திஞல் தங்கள் கைகளை உதறிஞர்கள். ஒரு உதவியும் செய்ய முடியவில்லை. அந்த ஏழைப்பெண் அந்தகாரத்தில் நம்பிக்கையற்றவளாய் மரித்துப் போஞள். அப்போழுது அவர்கள் செல்வம் அவர்களுக்கு என்ன உதவி செய்யும்? என்ருலும் இங்கே இருக்கும் பிதாக்களும் மாதாக்களுமாகிய நீங்கள் தேவன் உங்களுக்குத் தந்த வேலையைக் கவனியாமல் இன்றைக்கும் அப்படியே செய்கிறீர்கள். நான் இப்போது உங்களை மன்ருடுகிறேன், நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பிள்ளைகளின் ஆத்துமாவுக்காகப் பிரயாசப்பட இன்றே துவங்குகள்.

சில காலத்துக்கு முன்னே ஒரு வாலிபன் சாகக் கிடந்தான். அவன் ஒரு கிறிஸ்தவன் என்று அவனுடைய மாதா எண்ணிஞள். ஒருநாள் அவனுடைய அறையின் கதவண்டையில் மாதா செல்லும்போது இழந்தேன், இழந்தேன், இழந்தேன் என்ற சத்தம் கேட்கப்பட்டது. மாதா உள்ளே ஓடி என் மகனே, நீ சாகிற இத்தருணம் கிறிஸ்துவிலுள்ள உன் நம்பிக்கையை இழந்து போகக் கூடுமா என்று கேட்டாள். இல்லை மாதாவே, அதல்ல பிரேத அறைக்கு அப்பால் எனக்கு நம்பிக்கை இருக்கிறது; என் ஜீவிய காலத்தை இழந்து போனேன்; நான் இருபத்துநாலு வருடம் ஜீவித்தேன்; தேவ குமாரனுக்காக நான் ஒன்றும் செய்யவில்லை; நான் இப்போழுது சாகிறேன். என் ஜீவியத்தை எனக்காக செலவிட்டேன். இவ்வுலகத்துக்காக வாழ்ந்தேன். இப்பொழுது நான்

சாகிறவேளையில் என்னைக் கிறிஸ்துவுக்கு ஒப்புவித்தேன். என் ஜீவியகாலத்தையோ இழந்துபோனேன்; அதை ஆதாயப்படுத்த வில்லை என்றான். நாங்கள் இன்றைக்கு வெட்டுண்டு போனால், எங்களில் அநேகரைக் குறித்து இப்படிச் சொல்லப்பட மாட்டாதோ? எங்கள் ஜீவியம் ஏறக்குறையச் சேதமாய்ப் போனது, மற்றவர்களைக் கிறிஸ்துவினிடம் நடத்தாததால் எங்கள் ஜீவியம் ஒருவேளை முற்றாய்ச் சேதமாய்ப் போனது என்று சொல்லப் படமாட்டாதா?

வாலிப ஸ்திரீயே, தேவகுமாரனுக்காக கிரியை செய்கிறாயா? கிறிஸ்துவுக்காகச் சில ஆத்துமாவை ஆதாயம் பண்ணப் பிரயாசப் படுகிறாயா? சில சிநேகிதருடைய அல்லது தோழருடைய நாமம் ஜீவ புத்தகத்தில் எழுதப் படும்படி பிரயாசப் பட்டாயா? அல்லது இழந்தேன், இழந்தேன்; நான் தேவனுடைய பிள்ளையாய் வளர்ந்து அநேக வருடங்கள் சென்றன; ஒருஆத்துமாவையாவது கிறிஸ்துவிடம் கொண்டு வருகிற சிலாக்கியம் உடையவளாய் இருக்கவில்லை, அதை இழந்தேன் என்று சொல்லுவாயோ? தேவனுடைய ராஜ்யத்துக்கு ஒரு ஆத்துமாவையாவது கொண்டுவரும் சந்தோஷத்தை ஒருக்காலும் அடையாத ஒரு தேவனுடைய பிள்ளையாவது இங்கே இருந்தால், இப்பொழுதே துவங்குவாளாக. இதிலும் பெரிய சிலாக்கியம் பூமியிலே இல்லை. என் சிநேகிதரே, தற்காலத்தில் கிறிஸ்துவுக்கான வேலை அவசியமாய் இருப்பதுபோல, அதற்கு அவசியமான காலமும் வேறில்லையென்று நம்புகிறேன். தேவனுடைய ஆவியானவர் இப்பொழுது பூமியின் மேல் ஊற்றப்பட்டிருப்பதுபோல, எங்கள் ஜீவியத்தில் பின்னொரு காலம் ஊற்றப்படுமென்று நான்

நம்பவில்லை. கிறிஸ்தவ தேசம் எங்கும் தேவனுடைய கிரியை முன்னேறிச் செல்லுகிறது. சுவிசேஷம் புதிதாய்த் தொடங்குகிறது போலவும் உலகத்தைச் சுற்றி ஓடுகிறது போலவும் காணப்படுகிறது. தேவனுடைய சபையானது விழித்து, ஒரே மொழியாய்க் கர்த்தருக்குச் சாட்சி பகரக் காலமாயிற்று நாம் புறப்பட்டுப்போய், தேவ குமாரனின் ராஜ்யத்திற்காக வேலை செய்யக்கடவோம்.

இரண்டாவது:- உலகத்தை நோக்கிப் பின் வாங்கிப் போனவர்களுடன் நான் பேசும்படி இடம் கொடுங்கள். ஒரு வேளை சில வருஷங்களுக்கு முன்னே, நீ ஒரு கிறிஸ்தவனாய் ஒரு பெரிய பட்டணத்திற்குப் போனாய். நீ முன்னே ஒரு சபையானாய் இருந்தாய்; ஒருவேளை ஓய்வுநாள் பள்ளிக்கூட உபாத்தியானாயும் இருந்தாய்; ஆனால் நீ அந்நியருக்குள் போனபொழுது, கொஞ்சம் பொறுத்திருப்பேன். நான் செல்லட்டும், ஓய்வுநாள் பள்ளியில் ஒரு வகுப்புப் படிப்பிப்பேன் என்று ஒருவேளை எண்ணினாய்; அப்படி முதல் ஓய்வுநாளில் படிப்பிப்பதை விட்டுவிட்டாய். பின்பு கிறிஸ்துவுக்கான எல்லா வேலையையும் விட்டுவிட்டாய்; ஈற்றில் நீ சேர்ந்த புதிய சபையிலே நீ காத்திருந்தபடி அனலாய் ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை, கவனிக்கப்படவும் இல்லை. ஆகையால் ஆலயத்துக்குப் போகிறதையும் விட்டுவிட்டாய். இப்பொழுது அதிகமாய் வழுவிப்போனதால், உன்னைக் கூத்துக்கள் அருகிலும் காணலாம்; ஒருவேளை தூஷணக்காரருக்கும் குடிகாரருக்கும் தோழனாகவும் இருக்கிறாய். ஒருவேளை என் பேச்சைக் கேட்கிற உங்களில் சிலர் தங்கள் பிதாவின்

வீடாகிய ஆலயத்தை விட்டு வெகு நாளாய்ப் பரதேசம் போனவர்களாய் இருக்கலாம். பின்வாங்கிப் போனவனே, வா; நீ சந்தோஷமாய் இருக்கிறுயா? சொல்லு. கிறிஸ்துவை நீ விட்டபின்பு சந்தோஷமான ஒரு மணித்தியாலமாவது உனக்கு இருந்ததோ? உலகமாகிய தூரதேசத்தில் உனக்குக் கிடைத்த தவிடு உன்னைத் திருப்தியாக்குகிறதோ? நான் வெகு தேசம் பார்த்தேன். பின்வாங்கினவர்களில் சந்தோஷமாய் இருக்கும் ஒருவனையாவது நான் கண்டதில்லை. உண்மையாய்த் தேவனுல் பிறந்த ஒரு மனுஷன், பின்பு எப்போதாவது உலகத்தால் திருப்தியடைகிறதாய் நான் ஒருக்காலும் கண்டதில்லை. கெட்ட குமாரன் அந்நிய தேசத்திலே திருப்தியடைந்தான் என்று நினைக்கிறுயா? இங்கே இருக்கும் கெட்ட குமாரர்களைக் கேளுங்கள்; அவர்கள் சந்தோஷமாய் இருக்கவில்லை என்று நீங்களே அறிவீர்கள். "துன்மார்க்கனுக்குச் சமாதானம் இல்லை என்று என் தேவன் சொல்லுகிறுர்".

தன் சிருஷ்டிகருக்கு விரோதமாய்க் கலகம் செய்யும் மனுஷனுக்குச் சந்தோஷம் இல்லை; அவன் பரம ஈவை ருசிபார்த்து, தேவனுடன் ஐக்கியம்கொண்டு, பரம ராஜாவுடன் இனிமையான சிநேகம் பொருந்தி, ஒருமுறை எஜமானுக்காய் சந்தோஷத்தோடு வேலை செய்தவன் என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்போது அவன் சந்தோஷமாய் இருப்பது கூடிய காரியமோ? அவன் சந்தோஷமாய் இருந்தால், அது அவன் ஒருக்காலும் உண்மையாய் மனந்திரும்பவில்லை என்பதற்குப் போதிய அத்தாட்சி. ஒரு மனுஷன் மறுபடி பிறந்து, பரம சுபாவத்தை அடைந்தவனேயாகில் இந்த உலகம் அவன் சுபாவத்தின்

வாஞ்சையை ஒருக்காலும் திருப்தியாக்க மாட்டாது. ஆ! பின்வாங்கின மனுஷனே, உன்னைப்பற்றிப் பரிதபிக்கிறேன். எவன் பரிதபிக்கக்கூடியதிலும் அதிகமாய்க் கர்த்தராகிய இயேசு உன்னைக் குறித்துப் பரிதபிக்கிறார் என்று நான் உனக்குச் சொல்லுகிறேன். உன் ஜீவியம் எவ்வளவு கசப்பென்று அவர் அறிவார். உன் ஜீவியம் எவ்வளவு இருண்டதென்று அவருக்குத் தெரியும். வீட்டுக்குத் திரும்பி வரும்படிக்கு அவர் உனக்குக் சொல்லுகிறார். ஆ! பின்வாங்கினவனே, இப்போது திரும்பி வீட்டுக்கு வா. உன் பிதா உனக்குச் சொல்லி அனுப்பும் நேச செய்தி ஒன்று கேள். கர்த்தர் உன்னை வரச் சொல்லுகிறார்: இப் போது உன்னை அழைக்கிறார். அவர் சொல்வது; பரதேசம் போனவனே, இப்போது வீட்டுக்குத் திரும்பி வா; கரிய பாவ மலைகளை விட்டுத் திரும்பு என்றார். திரும்பி வா, உன் பிதா உன்னை நேசத்தோடு ஏற்றுக்கொள்ளுவார்.

நீ பரதேசம் போனபடியால் தேவன் உன்னை அணுகவொட்டார் என்று பிசாசு உனக்குச் சொல்லுகிறான் என்று அறிவேன். அது உண்மையாகில் மோட்சத்தில் மிகச் சொற்ப மனுஷர் மாத்திரம் இருப்பார்கள். தாவீது பாவத்தில் விழுந்தார். ஆபிரகாமும் யாக்கோபும் தேவனை விட்டுப் பின்வாங்கினார்கள் தன் ஜீவியத்தில் ஒருக்காலமாவது தேவனைவிட்டுப் பின்வாங்கிப் போகாத ஒரு சுத்தவாளி மோட்சத்தில் இருக்கிறான் என்று நான் நம்பவில்லை. ஒருவேளை ஜீவியத்தில் பின்வாங்காவிட்டால் இருதயத்தில் பின்வாங்கி இருப்பான். கெட்ட குமாரனின் சரீரம் தூர தேசத்துக்குப் போகுமுன்னே அவனுடைய இருதயம் போனது. பின்வாங்கினவனே இப்போது பிதா

வின் வீட்டுக்கு வா. நீ வெளியே தங்குவது உன் பிதாவுக்குப் பிரியம் இல்லை. கெட்ட குமாரன் பரதேசம் போய் இருந்த அநேக வருஷங்களாய், அவன் வீட்டுகுத் திரும்பிவிட வேண்டும் என்று அவன் பிதா ஆசிக்கவில்லை என்று நினைக்கிறாயா? ஒவ்வொரு வருஷமும் அவனைப் பார்த்துக்கொண்டே அவன் வீட்டுக்குத் திரும்பிவரவேண்மென்று ஆவலாய் இருந்தான். அப்படியே தேவனும் நீ வீடுவர விரும்புகிறார். நீ எவ்வளவு தூரம் போயிருந்தாலும் என்ன? மகா மேய்ப்பன் இப்போது உன்னைத் தன் மந்தையில் சேர்த்துக்கொள்வார். பின்வாங்கினவன் திரும்பி தேவனிடத்திற்கு வரும்போது தேவன் அவனை ஏற்றுக்கொள்ள மனதாய் இருக்கவில்லை என்று எப்போதாவது கேள்விப்பட்டாயோ? பிள்ளைகள் திரும்பி வந்தபோது அவர்களை ஏற்றுக்கொள்ள மனமில்லாத உலக பிதா மாதாக்களைக் குறித்துக் கேள்விப்பட்டேன். பின்வாங்கிப்போனவன் உண்மையாய் மனந்திரும்பினபோது தேவன் அவனை ஏற்றுக்கொள்ள மனமில்லாதிருக்கக் கண்டேன் என்று யாராவது சொல்லக்கூடுமோ?

பல வருஷங்களுக்கு முன்னே, சிக்காகோ நகருக்கு இருப்புவீதி வரும் முன்னதாய், மேற்கு மைதானங்களில் நின்று தானியத்தைக் குதிரை வண்டிகளில் ஏற்றி நூற்றுக்கணக்கான மைலுக்குக் கொண்டுவந்து துறைமுகத்திலுள்ள கப்பல்களில் ஏற்றுவார்கள். அங்கே பெரிய விளைநிலங்களையுடைய ஒரு பிதா இருந்தான். அவன் நிலங்களைச் செய்வதுபோலவே சுவிசேஷத்தையும் பிரசங்கித்து வந்தான். ஒருநாள் தான் சபை அலுவலாய் இருந்தபோது, தானியத்தோடு சிக்காகோவுக்குத் தன் மகனை

அனுப்பினுன். தன் மகன் திரும்பி வருவான், வருவான் என்று காத்திருந்தான். அவன் வீட்டுக்குத் திரும்பிவர வில்லே. கடைசியாய், இனிக் காத்திருக்கக் கூடாதென்று கண்டு, தன் குதிரையில் ஏறித் தன் மகன் தானியம் விற்ற இடத்துக்குப் போனுன். அங்கே அவன் மகன் போனதாகவும், தானியம் விற்றுப் பணம் வாங்கினதாக வும் அறிந்தான்; அப்போது,தன் மகனே யாரோ கொன்று பணத்தைத் திருடிக்கொண்டார்கள் என்ற பயம் உண் டானது.

ஈற்றில் ஒரு போலீஸ் மனுஷனின் உதவியைக் கொண்டு உளவு பிடித்துப்போய், சூதுகாரரின் அந்தரங்க அறை ஒன்றில் அவன் வந்ததாகக் கண்டுபிடித்தார்கள். பணம் முழுவதையும் சூதில் தோற்றுப்போனுன். அதை வெல்ல வேண்டும் என்றெண்ணி வண்டியையும் குதிரை யையும் விற்ருன். அதையும் தோற்ருன். எரிகோவுக்குப் போன மனுஷனேப்போல், கள்ளர் கையில் அகப்பட, அவர்கள் உள்ளதைப் பறித்துக்கொண்டு அவனேத் தள்ளி விட்டார்கள். அவன் என்ன செய்வான்? வீட்டுக்குப் போய் தன் பிதாவைச் சந்திக்க வெட்கப்பட்டு அவருக்கு விலகி ஓடிவிட்டான். பிதாவுக்கு அதெல்லாம் தெரிந்தது; பிதா மிகவும் கோபிக்கக்கூடும் என்று மகன் எண்ணு வான் என்று பிதாவுக்குத் தெரியும். தன்னேக் குறித்து மகன் அப்படி எண்ணுவான் என்று நினேத்து பிதா துக்கப்பட்டான். இது சரியாய்ப் பாவியின் நிலேவரம் போல் இருக்கிறது; தான் பாவம் செய்தபடியால், தேவன் தன்னே அணுகவொட்டார் என்று நினேக்கிருன். அந்தப் பிதாவோ என்ன செய்தான்? பிள்ளே கெட்டுப்போகட் டும் என்று சொன்னுனே? இல்லேயே; தேடிப்போனுன்.

தன் வேலைகளுக்கெல்லாம் ஒழுங்கு பண்ணிக் கொண்டு மகனைத் தேடப் புறப்பட்டான். கிராமம் கிராமமாயும் பட்டணம் பட்டணமாயும் தேடினான். அங்கங்கு குருமாருடன் உத்தரவு கேட்டு தானே பிரசங்கம் பண்ணி ஈற்றிலே தன் சரித்திரத்தைச் சொல்லி வந்தான். என் மகன் ஒருவன் பூமியின் முகத்தில் எங்கேயோ அலைந்து திரிகிறான் என்பான். பின்பு தனது மகனின் சாயலை விவரித்துச் சொல்லி அவனைக் குறித்து நீங்கள் கேள்விப் பட்டால், அல்லது கண்டால் தயவாய் எனக்கு எழுதுங்கள் என்பான். கடைசியாய், ஆயிரம் ஆயிரம் மைலுக் கப்பால் கலிபோர்னியா நாட்டிற்குப் போய்விட்டான் என்று அறியவந்தான். அவன் போய்விடட்டும் என்று பிதா சொன்னானோ? இல்லையே; மகனைத்தேடி கலிபோர்னியாவுக்குப்போனான். பிரான்சிஸ்கோ நகருக்குச் சென்று தான் இன்னநாள் இன்ன கோவிலில் பிரசங்கம் பண்ணுவேன் என்று வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரம் பண்ணினான்.

அப்படியே பிரசங்கம் பண்ணின்பின்பு தன் சரித்திரத்தைச் சொன்னான். தன் மகன் தன் விளம்பரத்தைக் கண்டு கோவிலுக்கு வந்திருக்கக்கூடும் என்ற நம்பிக்கை மனதிலே இருந்தது. எல்லாம் முடிந்தபின்பு ஜனங்கள் போகுமட்டும் காத்துக்கொண்டு நின்ற ஒரு வாலிபன் ஓர் மூலையிலே காணப்பட்டான். அவன் சங்கபீடத்துக்குச் சமீபிக்கிறதைப் பிதா பார்த்தபோது, அவன் தன் மகன் என்று விளங்கினது. உடனே எழுந்தோடி அவனைத் தன் மார்போடணைத்து முத்தமிட்டான். தான் செய்த குற்றத்தை அறிக்கையிட மகன் விரும்பியும், பிதாவோ அதொன்றையும் கேட்க விரும்பவில்லை.

எல்லாவற்றையும் முற்றாய் மன்னித்து உடனே கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போனான்.

ஆ, கெட்டகுமாரனே, நீ பாவத்தின் இருண்ட பாதைகளில் அலைந்து திரிகிறவனாய் இருக்கலாம். தேவன் உன்னை வீட்டுக்கு வரச்சொல்லுகிறார். பிசாசு உனக்கு தேவனைக் குறித்துப் பொய் சொல்லிக் கொண்டு வருகிறது. அவர் உன்னை ஏற்றுக்கொள்ளார் என்று நினைக்கிறாய். நீ வருவாயாகில், இந்த நிமிஷம் அவர் உன்னைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வார் என்று நான் உனக்குச் சொல்லுகிறேன். ''நான் எழுந்து என் பிதாவினிடத்திற்குப் போவேன்'' என்று சொல்லு. இப்படிச் செய்யும்படி தேவன் உன் மனதைச் சாய்ப்பாராக. அந்தப் பிதா தேடிய காலத்திலும் அதிக காலமாய் இயேசு தொடாத பாவி ஒருவனும் இல்லை. நீ அவரை விட்டுப் போனநாள் தொடுத்து, ஒவ்வொருநாளும் அவர் உன்னைத் தேடி வந்தார். உன் சென்ற காலம் எப்படிப்பட்டதாய் இருந்தது, உன் ஜீவியம் எவ்வளவு கெட்டதாய் இருந்தது என்று பாராதே. அவர் உன்னை ஏற்றுக்கொள்வார். பின் வாங்கினவனே எழுந்திரு, உன் பிதாவின் வீட்டிற்கு மறுபடியும் வா.

கிறிஸ்துவுக்காக வாஞ்சையாய் ஊழியம் செய்யும் ஒரு அம்மா கொஞ்சக் காலத்துக்கு முன்னே எடின்புரி நகரில் ஒரு வாலிப ஸ்திரீயைக் கண்டாள். அவள் வேசியின் சவக்குழிக்குத் தீவிரிக்கிறவளாய் இருந்தாள். அம்மா, அவளை வா, வீட்டுக்குத் திரும்பிப்போ என்று மன்றாடின போது வரமாட்டேன், என் பெற்றோர்கள்

என்னை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளார்கள் என்றாள். மாதாவின் மனம் எப்படிப்பட்டதென்பது அந்த அம்மாளுக்குத் தெரியும். ஆகையால் அவள் உட்கார்ந்து, மாதாவுக்கு ஒரு சீட்டெழுதி, தான் அவளுடைய புத்திரியை எப்படிச் சந்தித்ததென்றும், அவள் எப்படித் துக்கப்பட்டுத் திரும்பிவர விரும்புகிறாள் என்றும் அறிவித்தாள். அடுத்த நாள் உத்தரவு வந்தது. காகிதத்தின் மேலே "உடனே, உடனே" என்று எழுதியிருந்தது. அதுதான் மாதாவின் மனம் காகிதத்தைத் திறந்தார்கள். மன்னித்துக் கொண்டோம், திரும்பி வா, உடனே திரும்பி வருகிறதற்குப் பணமும் இத்துடன் வருகிறது என்று எழுதி இருந்தது. பாவியே, உடனே வா என்பதுதான் கர்த்தரின் பிரசித்தம். அதுதான் வழிவிலகிப்போன ஒவ்வொரு பாவிக்கும் அன்புள்ள மகத்துவ தேவன் சொல்வது:- "உடனே வா" ஆம், பின்வாங்கிப் போனவனே இப்போது வீடு வந்து சேர். அவர் உன்னைச் சந்தோஷமாய் அங்கீகரிப்பார். நீ திரும்புவதைக் குறித்து மோட்சத்திலே சந்தோஷம் உண்டாகும். எல்லாம் ஆயத்தமாய் இருக்கிறது இப்போது திரும்பிவா.

இப்பொழுது, மூன்றும் வகுப்பானவர்களுடன் பேச விரும்புகிறேன். "நீதிமான் இரட்சிக்கப்படுவது அரிதானால் பாவியும் துன்மார்க்கனும் எங்கே நிற்பார்கள்? பாவியே, உனக்கு என்ன நேரிடப்போகிறது? எப்படித் தப்பப்போகிறாய்? நீ எங்கே இருக்கிறாய்? நீ உலகத்திலே தேவனற்றவனும், நம்பிக்கையற்றவனுமாய் இருப்பது உண்மையோ? நீ சடுதியாய் வியாதி கொண்டு மரித்துப்போனால், உன் ஆத்துமாவுக்கு என்ன நேரிடும்

என்று எப்போதாவது நினைத்துப்பார்த்தாயா? பாவிக்கு தேவன் இல்லை, நம்பிக்கை இல்லை, சாக்கில்லை என்று வேதத்தில் வாசிக்கிறேன். நீ இரட்சிக்கப்படாவிட்டால் என்ன நியாயம் சொல்லுவாய்? அது தேவனுடைய குற்றம் என்று சொல்லுவாயோ? அவர் உன்னை இரட்சிக்க மிக வாஞ்சையாய் இருக்கிறார். நீ இரட்சிக்கப்பட விரும்பினால் இரட்சிக்கப்படக்கூடும் என்று இன்று உனக்குச் சொல்லுகிறேன். மரணத்தை விட்டு ஜீவனில் பிரவேசிக்க நீ உண்மையாய் விரும்பினால், நித்திய ஜீவனுக்குச் சுதந்தரவாளியாய் வர விரும்பினால், அல்லது நீ தேவனுடைய பிள்ளையாய் வர விரும்பினால் தேவனுடைய இராஜ்யத்தைத் தேடும்படி இந்த நிமிஷத்தில் தீர்மானம் செய். நீ தேவனுடைய இராஜ்யத்தைத் தேடினால் நீ அதைக் கண்டு பிடிப்பாய் என்று இந்த வேதத்தின் சத்தியத்தைக் கொண்டு உனக்குச் சொல்லுகிறேன். தன் முழு இருதயத்தோடு கிறிஸ்துவைத் தேடின ஒருவனாவது அவரைக் கண்டுபிடியாதிருந்ததில்லை. ஒருவன் இந்தக் காரியத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி தீர்மானித்தபோது, அதைச் சீக்கிரம் தீராதிருந்ததாய் நான் ஒரு போதும் கேள்விப்பட்டதில்லை.

இவ்வருஷத்திலே ஒரு பயபக்தியான உணர்ச்சி உன் மனதில் வந்தது. மனுஷர் சொல்லுகிறபடி நடு வயதிற்கு வந்துவிட்டேன். ஒரு மலையின் உச்சிக்கு ஏறி மறு பக்கமாக இறங்கிப்போகிற ஒரு மனுஷனைப் போல என் ஜீவியத்தைப் பார்க்கிறேன். எழுபது வயது எனது ஜீவியமலையாய் இருக்கப்போகிறதாகில், இப்போது அதின் உச்சியிலிருந்து மறுபக்கமாய் இறங்கிப் போகிறேன் என்று இப்படி நீ எண்ணக்கூடியதில்லையோ? வேறு சிலர் இப்

பொழுதுதான் மலையின் உச்சியில் அடிவைக்கிறவர்களாய் இருக்கலாம். உங்களிடத்தில் கேட்கிறேன். நீங்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதிருந்தால், சற்று தரித்து நின்று. நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று விசாரியுங்கள். நீங்கள் ஏறிவந்த மலையைத் திரும்பிப் பாருங்கள். என்ன காண்கிறீர்கள்? அப்பாலே ஒரு தொட்டில் தெரிகிறது. வெகு தூரத்தில் அல்ல, ஜீவியம் எவ்வளவு சுருக்கம். எல்லாம் முந்தின நாள் நடந்ததுபோல் காணப்படுகிறதே. அதற்குச் சற்று மேலாய்ப் பாருங்கள். ஒரு பிரேதக் கல் தெரிகிறது. ஒரு அன்பான மாதா கிடக்கும் இடத்தைக் காட்டுகிறது.

அந்த மாதா மரித்தபொழுது நான் உம்மைச் சேவிப்பேன் என்று நீ கர்த்தருக்கு வாக்குத்தத்தம் பண்ணவில்லையா? என் மாதாவின் தேவனை என் தேவனாய்க் கொள்ளுகிறேன் என்று நீ சொல்லவில்லையா? சாகிற வேளையில் அவள் கையை உன் கையில் பிடித்து ஆம், மாதாவே, நான் உம்மை மோட்சத்தில் சந்திப்பேன் என்று நீ சொல்லவில்லையா? அந்த வாக்குத்தத்தத்தை நீ நிறைவேற்றினாயோ? அதை நிறைவேற்றப் பிரயாசப்படுகிறாயோ? பத்து வருஷங்கள் கடந்துபோயின. ஒரு வேளை பதினைந்திருக்கும் தேவனுக்குக் கிட்டிவிட்டாயோ? உனது வாக்குத்தத்தம் எவ்வளவேனும் உன்னைச் சீர்திருத்தினதோ? இல்லையே.

உன் இருதயம் வரவரக் கடினமாகிறது. இரவு வர வர இருளாகிறது. சில நாளில் மரண நிழல் உன்னைச் சூழ்ந்துகொள்ளும். என் சிநேகிதனே, எங்கே இருக்கிறாய்? திரும்பவும் பார். அதற்குச் சற்று மேலே வேறொரு பிரேதக்கல் இருக்கிறது. அது ஒரு சிறு

பிள்ளையின் பிரேதக்குழி. அது ஒருவேளை நீ மெய்யாய் ஆசைப்பட்டு நேசிக்கும் ஒரு பெண் பிள்ளை; அல்லது ஆண்பிள்ளை. அந்தப் பிள்ளை மரித்தபோது, என் அன்பான பிள்ளையை மோட்சத்தில் சந்திப்பேன் என்று நீ தேவனுக்கு வாக்குப் பண்ணவில்லையா? வாக்கை நிறைவேற்றினுயா? நினைத்துப்பார். இன்னும் தேவனுக்கு விரோதமாய்ப் போராடுகிருயா? உன் இருதயத்தைப் பின்னும் கடினப்படுத்துகிருயா? ஐந்து வருஷத்துக்குமுன் உன்னை எழுப்பிவிடத்தக்க பிரசங்கங்கள் இப்பொழுது உன்னை உணர்த்துகிறதா? இல்லையே?

இன்னும் ஒருமுறை மலைச்சாரலைப் பார். மறுபக்கத்தில் ஒரு பிரேத அறை காணப்படுகிறது. அது எவ்வளவு நாள், கிழமை, அல்லது வருஷம் தூரம் என்று நீ சொல்லமாட்டாய். அந்தக் கல்லறைக்குத்தான் நீ போகிருய். மனுஷனின் முழு ஜீவியத்துக்குத்தான் நீங்கள் ஜீவித்தாலும், உங்களில் அநேகர் உங்கள் முடிவுக்குக் கிட்டிவிட்டீர்களே. நீங்கள் மிகவும் தளர்ந்தவர்கள் ஆகிறீர்கள். மயிர்ச் சுருள்கள் வெண்நிறம் ஆகிறது. ஒருவேளை கட்டிலையும் புறப்பட்டிருக்கலாம். முகம் மூடும் பிரேதச்சீலை ஆயத்தமாகலாம். என் சிநேகிதனே இரட்சிப்பை இன்னும் பின் போடுவது பெரிய பைத்தியம் அல்லவா? ஐயமில்லாமல் நான் பேசுகிறதைக் கேட்கிற உங்களில் சிலர் ஒரு கிழமையில் நித்தியத்தில் இருப்பீர்கள். இப்படியான பெரும் கூட்டத்தில் இருக்கும் திரளான ஜனங்களில் சிலரை மரணமானது வருகிற கிழமையிலும் சந்திக்கும் என்பது நிச்சயம். பேசுகிற என்னையாய் இருக்கலாம், அல்லது கேட்கிற உங்களில் சிலரையாய் இருக்கலாம். இரட்சிப்பை ஏன் தாமதம் பண்ணு

கிறீர்கள்? ''இப்பொழுது நீர் போகலாம்; எனக்குச் சமயமானபோது உம்மை அழைப்பிப்பேன்'' என்று கர்த்தராகிய இயேசுவுக்கு இன்று ஏன் சொல்லுகிறாய்? இன்று ஏன் அவரை உள்ளே ஏற்றுக்கொள்ளாய்? உன் இருதயத்தைத் திறந்து மகிமையின் ராஜனே, உள்ளே பிரவேசியும் என்று சொல்லு.

இதிலும் திறமான சமயம் வருமோ? தேவனைச் சேவிப்பாய் என்று நீ பத்து, பதினைந்து, இருபது, முப்பது வருஷங்களுக்கு முன்னே வாக்குத்தத்தம் பண்ணவில்லையோ? விவாகம் செய்துகொண்டபின் அப்படிச் செய்வோம் என்று உங்களில் சிலர் வாக்குத்தத்தம் பண்ணவில்லையோ? உங்களுக்கு நீங்களே எஜமான்கள் ஆனபின்பு அப்படிச் செய்வோம் என்று உங்களில் சிலர் சொன்னதில்லையோ? அப்படிச் செய்தீர்களா?

பாதாளத்துக்குப் போகிறதற்கு மூன்று படிகள் இருக்கின்றன. அவைகளின் பெயரைச் சொல்லுவேன். முதலாம் படி நிர்விசாரம். ஒரு மனுஷன் தன் இரட்சிப்பை அசட்டை செய்தால், அது மாத்திரம் போதும். அது அவனைப் பாதாளத்தில் கொண்டுபோய்விடும். நான் என்ன தப்பிதம் செய்கிறேன் என்று சிலர் கேட்கிறார்கள். ஏன்? நீ உன் இரட்சிப்பை அசட்டை செய்தால் மாத்திரம் போதும். நீ கெட்டுப் போவாய். நான் வேகமாய் ஓடும் ஒரு ஆற்றிலே என் சிறு வள்ளத்துக்குள் படுத்திருக்கிறேன். பத்து மைலுக்கப்பால் ஆறு குதிக்கும் பயங்கரமான இடம் வருகிறது. அவ்விடத்துக்குப் போகிற ஒவ்வொருவனும் மாண்டு போகிறான். நான் தண்டு வலிக்க வேண்டியதில்லை. தண்டுகளைக் கழற்றி வைத்து

கைகட்டிக்கொண்டு அசட்டை செய்வதும் மாத்திரம் போதும். அப்படியே ஜீவிய நீரோட்டத்தில் ஒரு மனுஷன் கைகட்டிக்கொண்டு நிற்பது மாத்திரம் போதும். தள் ளுண்டு மாண்டு போவான்.

இரண்டாம்படி பின்போடுதல். உங்கள் வீட்டு வாசலில் நான் உங்களைச் சந்தித்து, இக்காரியத்தைத் தீர்மானம் செய்யுங்கள் என்று நெருக்கினுல் இன்றைக்கு அல்ல இன்றைக்கு அல்ல என்கிறீர்கள். இல்லை, இப்பொழுதே தேவனுடைய ராஜ்யத்திற்குள் செல்லுங்கள் என்று நான் திரும்பவும் கேட்டால், நீங்கள் மரியாதையாய் இன்று கிறிஸ்தவர்கள் ஆகமாட்டோம். உமது புத்திக்காய் உபகாரம் சொல்லுகிறோம். கிறிஸ்தவன் ஆகவேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும், ஆனுலும் இன்றைக்கு அல்ல என்கிறீர்கள் இதுதான் பின்போடுதல்.

மூன்றும்படி இகழுதல். உங்களில் சிலர் ஏணியின் கீழ்ப்படிகளில் இறங்கி வந்திருக்கலாம். இப்போது கிறிஸ்துவை இகழுகிறீர்கள்; கிறிஸ்துவைப் பகைக்கிறீர்கள்; கிறிஸ்துமார்க்கத்தை வெறுக்கிறீர்கள்; பூமியிலுள்ள உத்தம மனுஷரையும் உங்கள் உத்தம சிநேகிதரையும் பகைக்கிறீர்கள். நான் உங்களுக்கு வேத புஸ்தகத்தைத் தந்தால் நீங்கள் அதைக் கிழித்து காலின் கீழ் மிதிப்பீர்கள். ஆ, இகழுகிறவர்களே, நீங்கள் சீக்கிரம் மறுமையில் இருப்பீர்கள். தீவிரித்து மனந்திரும்பி தேவனிடத்தில் வாருங்கள். சிநேகிதனே, நீ இப்பொழுது நிர்விசாரம், பின்போடுதல், இகழுதலாகிய படிகளில் எந்தப் படியின்மேல் நிற்கிறுய்? நினைத்துக்கொள். அநேகர் முதலாம் படியில் நின்று வாரிக்கொள்ளப்படுகிறுர்கள். அவர்கள் அசட்டையிலே சாகிறுர்கள். வேறநேகர் பின்போட்டு சாகிறுர்கள்.

இன்னும் அநேகர் கடைசிப்படியிலே நின்று இரட்சிப்பை இகழுகிறார்கள்.

சில வருஷங்களுக்கு முன்னே இரட்சிப்பை அசட்டை செய்தார்கள்; பின்பு காலம் செல்லப் பார்ப்போம் என்கிறார்கள். இப்பொழுது கிறிஸ்துவையும் கிறிஸ்து மார்க்கத்தையும் இகழுகிறார்கள்; கோவில் மணியின் சத்தத்தையும் வெறுக்கிறார்கள்; வேதத்தையும் கிறிஸ்தவர்களையும் பகைக்கிறார்கள்; நாம் நடக்கும் நிலத்தைத்தானும் சபிக்கிறார்கள். இன்னும் ஒருஅடி வைக்க அவர்கள் போய் விட்டார்கள். இகழுகிறவர்களே, நான் உங்களுக்கு முன்பாக ஜீவனையும் மரணத்தையும் வைக்கிறேன். நீங்கள் எதைத் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்? கிறிஸ்து பிலாத்துவின் கையிலிருந்தபொழுது அவன், கிறிஸ்துவை நான் என்ன செய்யவேண்டும் என்று இருக்கிறீர்கள் என்றான். “இவனை அகற்றும், இவனைச் சிலுவையில் அறையும்” என்றார்கள். வாலிபரே, இன்று நீங்களும் அப்படித்தான் சொல்லுகிறீர்களோ? இந்தச் சுவிசேஷத்தைத் தள்ளும் என்று சொல்லுகிறீர்களோ? உங்கள் ஜெபங்களையும் பிரசங்கங்களையும் உங்கள் சுவிசேஷ சத்தத்தையும் தூரத்தள்ளும், கிறிஸ்து எனக்கு வேண்டாம் என்கிறீர்களோ? அல்லது நீங்கள் புத்தியுள்ளவர்களாய் கர்த்தராகிய இயேசுவே உம்மை விரும்புகிறேன், உம்மைத் தேவையாய் இருக்கிறேன், உம்மையே ஏற்றுக் கொள்ளுவேன் என்று சொல்லுவீர்களோ? இந்தத் தீர்மானத்துக்குக் கர்த்தர் உங்களைக் கொண்டு வருவாராக.

II

கிறிஸ்து பாவியைத் தேடுதல்

லூக்கா 19 : 10

"இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்"

இது எனக்கு வேத வசனங்கள் எல்லாவற்றுள்ளும் அதிக மதுரமான ஒரு வசனம். இந்தச் சிறு வசனத்திலே கிறிஸ்துவானவர் உலகத்துக்கு ஏன் வந்தார் என்று சொல்லப்படுகிறது. ஒரு நோக்கத்தோடு வந்தார். ஒரு வேலையைச் செய்ய வந்தார். இச் சிறு வசனத்திலே அந்த நோக்கமும் வேலையும் சொல்லப்படுகிறது. உலகத்துக்குத் தண்டனை தீர்ப்பு செய்ய அல்ல. உலகத்தை இரட்சிக்கும்படிக்கே வந்தார்.

சில வருஷங்களுக்கு முன்னே உவேல்ஸ் இளவரசர் அமெரிக்காவுக்கு வந்தார். அமெரிக்காவாகிய எங்கள் தேசத்தில் உங்கள் இளவரசர் வந்தார் என்பதைப்பற்றி பெரிய ஆரவாரம் உண்டாயிற்று. பத்திரிகைகள் அதைப் பற்றிப் பேசின. அநேகர் ஏன் வந்தார் என்பதைப்பற்றி அதிசயித்தார்கள். பிரசாதிபத்திய அரசாட்சி எவ்வகையானது என்று பார்க்க வந்தாரோ? தமது சுக சௌக்கியத்திற்காக வந்தாரோ? எங்கள் கலாசாலைகளைப்

பார்க்க வந்தாரோ? இந்த முகாந்தரத்திற்காக வந்தாரோ? அல்லது அந்த முகாந்தரத்திற்காக வந்தாரோ? என்று வினவினர்கள். அவர் வந்தார்; திரும்பிப் போனர். ஆனல் ஏன் வந்தார் என்று அவர் எங்களுக்குச் சொல்லவில்லை.

பரம இளவரசர் இந்த உலகத்துக்கு வந்தபோதோ நான் ஏன் வந்தேன் என்று எங்களுக்குச் சொன்னர் தேவன் என்னை அனுப்பினர், என் பிதாவின் சித்தத்தைச் செய்ய வந்தேன் என்ருர். அந்த சித்தம் என்ன? கெட்டுப் போனதைத் தேடி இரட்சிப்பதே. வேதத்திலே ஒரு வேலையைச் செய்யும்படி தேவன் ஒருவனை அனுப்பும்போது அவன் அதில் அனுகூலம் அடையாமல் இருந்ததாக ஒரு இடத்திலும் காண மாட்டீர்கள். முப்பது லட்சம் பேரை எகிப்திய சிறைவீட்டிலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு அழைத்து வரும்படி தேவன் மோசேயை எகிப்துக்கு அனுப்பினர். அவன் அப்படியே செய்யாமற்போனனே? அப்படிப் போவதுபோல முதல் காணப்பட்டது. "நான் கர்த்தரின் வார்த்தையை கேட்கிறதற்கு அவர் யார்?" என்று பார்வோன் சொல்லுகிறதையும் அரண்மனையைவிட்டு மோசையை வெளியே துரத்துகிறதையும் காண்போமானல், அனுகூலமில்லாமல் தான் என்று எண்ணுவோம். அப்படி அனுகூலமில்லாதிருந்ததோ? தேவன் எலியாவை ஆகாப் இடம் அனுப்ப அவன் போய் மழையாவது பனியாவது பெய்யாதென்று ஆகாபுக்குச் சொன்னன். அது அரிய காரியம். ஆனலும் மூன்று வருஷமும் ஆறு மாதமும் வானம் அடைபட்டிருக்கவில்லையோ? இப்போது தேவன் தமது நேச

குமாரனை தமது சமுகத்தையும் சிங்காசனத்தையும் விட்டு இந்தத் தாழ்ந்த உலகத்துக்கு அனுப்புகிறார். அனுகூலம் அடையாமற் போவார் என்று எண்ணுகிறீர்களா? தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர் முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார். இவ்விடத்தில் இருக்கிற எந்த ஒரு மனுஷனாவது இரட்சிக்கப்பட மனதாய் இருந்தால், அவன் இரட்சிக்கப்படலாம் என்று காண்பான்.

ஒரு வாக்கியத்தை எடுத்து நன்றாய் தியானித்து, அதைச் சொல்ல வந்த காரணம் என்னவென்று பார்ப்பது எனக்குத்தானே பெரிய ஆசீர்வாதமாய் இருக்கக் காண்கிறேன். பதினெட்டாம் அதிகாரத்தின் கடைசியை நீங்கள் பார்ப்பீர்களாகில், கர்த்தர் எரிகோ நகருக்கு வருகிறதைக் காண்பீர்கள். வழியருகே ஒரு எளிய குருடன் உட்கார்ந்திருந்தான். ஒருவேளை அப்படி இருப்பது அநேக வருஷங்களாக அவன் வழக்கம். அவனுடைய பிள்ளைகள் அவனை நடத்திக்கொண்டு வந்திருப்பார்கள். அங்கே அவன் வருஷா வருஷங்களாய் இருந்து, ஏழைக் குருடனுக்கு இரங்கி ஒரு காசு கொடுங்கள் என்று கூப்பிடுவான். ஒருநாள் அவன் இப்படி உட்கார்ந்திருக்கையில் எருசலேமிலிருந்து ஒரு மனுஷன் வந்து ஏழைக் குருடனைக்கண்டு, அவன் அருகே உட்கார்ந்து பர்திமேயுவே! உனக்கொரு நற்செய்தி சொல்லப் போகிறேன் என்றான். குருடன் அது என்ன என்றான். உனக்குப் பார்வை தரக்கூடிய ஒருவர் இஸ்ரவேலருக்குள் இருக்கிறார் என்றான். அதற்கு அவன்: அப்படி இருக்க மாட்டாது; நான் ஒருக்காலும் பார்வை அடைய மாட்டேன்; நான் பிறவியிலே குருடன், இவ்வுலகத்திலே எனக்குப் பார்வை கிடையாது, மறுமையிலே

கிடைக்கக்கூடும்; இவ்வுலகத்திலே எல்லா நாளும் நான் குருடனாய்த்தான் இருக்க வேண்டும் என்றான். அதற்கு மற்றவன்: நான் சொல்வதைக் கேள். அன்றைக்கு நான் எருசலேமுக்கு போனேன். கலிலேயாவில் அந்த பெரிய தீர்க்கதரிசி இருந்தார் அவர் ஒரு பிறவிக் குருடனுக்கு பார்வை கொடுக்கிறதைக் கண்ணாரக் கண்டேன்; அவனுக்குக் கிடைத்த கண்களிலும் உத்தமமான கண்களுள்ள ஒருவனை நான் ஒருக்காலும் கண்டதே இல்லை என்றான்.

அப்பொழுது ஏழைக் குருடனின் மனதில் முதல் முதல் நம்பிக்கை வரத் துவங்கி அது எப்படியானதென்று கேட்டான். மற்றவன்: நல்லது, சொல்லுகிறேன். அவர் நிலத்தில் துப்பிச் சேறுண்டாக்கி அவன் கண்களின்மேல் பூசி, சீலோவாம் குளத்திலே போய்க் கழுவு என்றார். அவன் போய்க் கழுவினபோது, நல்ல இரண்டு கண்கள் உண்டாயின. இது மெய்; நான் அவனுடன் பேசினேன். அவனைப் பார்க்கிலும் நல்ல கண்களையுடைய ஒருவனை நான் எருசலேமில் எங்கும் கண்டதில்லை என்றான். இதற்கெல்லாம் என்ன செலவு கேட்டார் என்று பர்திமேயு விசாரித்த பொழுது, ஒரு செலவும் இல்லை என்றான். செலவு ஒன்றுமில்லாமல் பார்வை அடைந்தான். உனக்கு வேண்டியதை நீயே அவருக்குச் சொல்லு, பின்னொரு விசேஷ மனுஷன் உனக்காகப் பேச வேண்டியதும் இல்லை அவருக்குச் செல்வரும், வறிஞரும் சரி என்றான். அப்போது அவருடைய திருநாமம் என்ன என்று பர்திமேயு கேட்டான். அவர் பெயர் நசரேயனாகிய இயேசு. அவர் எப்போதாவது இவ்வழியாய் வந்தால் உன் காரியத்தை

அவருக்குச் சொல்லாதபடி விட்டுவிடாதே என்று அவன் சொன்னான். அவர் இவ்வழியே வந்தால் அவரிடம் போகாமல் விடவே மாட்டேன் என்பதை நிச்சயமாய் நம்பு என்றான். இரண்டொரு நாளுக்குப் பின்பு ஒரு நாள் கைலாகு கொடுத்துக் குருடனைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவன் வழக்கமான இடத்திலே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். சடுதியாய் திரளான ஜனங்கள் நடக்கிற சத்தத்தைக் கேட்டு, இது யார்? இது யார்? சொல்லுங்கள் என்று விசாரித்தான். நாசரேத்தூர் இயேசு போகிறார் என்று சிலர் சொன்னார்கள். அதைக் கேட்டவுடனே குருடருக்குப் பார்வை கொடுக்கிற மனுஷன் அவர் அல்லவோ என்று தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டு பெருங் குரலாய் தாவீதின் குமாரனாகிய இயேசுவே! என்மேல் இரங்கும் என்று கூப்பிட்டான்.

யார் என்று தெரியவில்லை, (ஒருவேளை பேதுருவாக்கும்); அமைதியாய் இரு, பேசாதே என்று சொன்னான். கர்த்தர் ராஜாவாய் முடிதரிக்க எருசலேமுக்குப் போகிறார். ஏழை யாசகக் குருடன் தமக்கு தொல்லை செய்ய விரும்பார் என்று அவன் எண்ணினான். ஆ! தேவ குமாரன் இங்கே இருந்தபொழுது ஜனங்கள் அவரை அறியவில்லை. அவர் மோட்சத்தின் சகல வீணை ஓசையையும் தடுத்துப் பாவியின் பிரார்த்தனையைக் கேட்கிறவர். அதைப்போல் எந்த இராகமும் அவருக்குப் பிரியம் இல்லை. பர்திமேயுவோ இன்னும் அதிக சத்தமாய் தாவீதின் குமாரனே! என்மேல் இரங்கும் என்று கூப்பிட்டான். அவனுடைய விண்ணப்பம் தேவனுடைய குமாரனின் காதுக்கு எட்டினது. ஜெபம் எப்பொழுதும்

அவர் காதுக்கு எட்டுகிறது. அவர் கால்கள் தரித்தன. அந்த மனுஷனை என்னிடத்தில் அழைத்து வாருங்கள் என்றார். பர்திமேயுவே! திடன்கொள், எழுந்திரு! உன்னை அழைக்கிறார் என்றார்கள். கர்த்தர் யாரை அழைத்தாரோ, அவர்களுக்குக் கொடுக்க நல்ல ஈவையும் வைத்திருக்கிறார். பாவியே! இப்போதே அதை நினைப்பாயாக. குருடனை இயேசுவிடத்தில் கொண்டு வந்தார்கள். நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று இருக்கிறாய் என்றார். அவன் கர்த்தாவே! நான் பார்வை அடைய வேண்டும் என்றான். கர்த்தர் அப்படி ஆகக்கடவது என்றார். உடனே அவன் கண்கள் திறக்கப்பட்டன.

இந்த ஆச்சரியமான காட்சியைக் காணும்படி நான் அங்கே இருந்தாலோ என்றெண்ணுகிறேன். அவன் முதல் கண்ட ஆள் தேவனுடைய குமாரன்தாமே. ஆர்ப்பரிக்கிற ஜனத்திரளுக்குள் பார்வை அடைந்த குருடனைப் போல் வேறொருவரும் ஆர்ப்பரித்ததில்லை. அவன் தேவனைப் புகழ்ந்து தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று பாடினான்.

என் யோசனைக்குச் சற்றே இடங்கொடுங்கள். பர்திமேயு எரிகோவுக்குத் திரும்பினான், நான் போய் என் மனைவியைக் கண்டு இதை அவளுக்குச் சொல்லுவேன் என்று சிந்தித்தான். புதிதாய் மனந்திரும்பின எவனும் இரட்சிப்பைக் குறித்து தன் சிநேகிதருடன் பேச விரும்புகிறான். பர்திமேயு தெருவிலே நடந்துபோகையில் ஒருவன் எதிரே நடந்து வந்து, இவனைக் கடந்துபோய் திரும்பி: ஓ! பர்திமேயுவே! இது நீயோ? அப்படித்தான் என்று

நினைத்தேன். ஆனாலும் நம்புகிறது வருத்தமாய் இருந்தது. உனக்குப் பார்வை எப்படி உண்டாயிற்று என்று கேட்டான் நான் சற்று முன்னே நாசரேத்து இயேசுவை பட்டணத்துக்கருகே சந்தித்து என்மேல் இரங்கும் என்று கேட்டேன் என்று சொன்னவுடனே, நாசரேத்து இயேசுவோ, அவர் இவ்விடங்களில் நிற்கிருரோ என்று விசாரித்தான். ஆம், அவர் இங்கே எரிகோவில் நின்ருர்; இப்போதுதான் மேற்கு வாசலுக்குப் போகிருர் என்ருன்.

நான் அவரைக் காண விரும்புகிறேன் என்று சொல்லித் தெரு வழியே ஓடினுன். அவரை அவன் கொஞ்சமும் காணக்கூடாதிருந்தது. திரளான ஜனங்கள் அவரை சூழ்ந்திருந்தபடியாலும் தான் ஒரு குள்ளனுய் இருந்தபடியினுலும் எவ்வளவு எட்டிப்பார்த்தாலும் அவரைச் சற்றும் காணக்கூடியதாய் இருக்கவில்லை. நல்லது, பார்ப்பேன் என்று சொல்லி தீவிரித்து முன்னே ஓடி ஒரு காட்டத்தி மரத்தின் மேல் ஏறி தெருவுக்கு மேலாக தொங்குகிற அந்த கிளையில் இருந்தால் நான் நன்ருய் அவரைப் பார்த்துக் கொள்ளுவேன் என்றுதனக்குள்ளே சொல்லிக் கொண்டான். வழியில் போகிற ஒரு அந்நியனைப் பார்க்கும்படி ஒரு பெரிய செல்வன் சிறு பையனைப்போல மரத்தில் ஏறுகிறதும் தன்னை ஒருவரும் காணமாட்டார்கள் என்று இலைகளுக்குள்ளே ஒளிக்கிறதும் நல்ல வேடிக்கையாய் இருக்கிறது. திரள் ஜனங்கள் கிட்டிவருகிருர்கள். யார் இயேசு என்று பார்க்கிருன். பேதுருவைப் பார்க்கிருன்; அவர் அல்ல. யோவானைப் பார்க்கிருன்; அவர் அல்ல. கடைசியாய் மனுஷகுமாரரிலும் சௌந்தரியமுள்ள ஒருவர் மேல் அவன் கண்கள் நோக்கு

கின்றன. இவர்தான் அவர் என்று சிந்திக்கிறான். சகேயு இலைகளுக்கு ஊடாகத் தலையை நீட்டி அதிசயமான தேவ மனுஷனைப் பிரமிப்போடு பார்க்கிறான். கடைசியில் திரள் ஜனங்கள் மரத்தின் கீழாக வருகிறார்கள். என்னைக் கவனியாமல் கிறிஸ்து போய்விடுவார் என்று சகேயு எண்ணிக் கொண்டிருக்கிறான். கிறிஸ்துவோ மரத்தின் கீழே வந்த உடனே நின்று அண்ணாந்து பார்த்து: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா என்றார். என்னுடைய பெயரை அவருக்குச் சொன்னது யார்? நான் அவருக்கு அறிமுகமானவன் அல்லவே என்பது அவன் மனதின் முதல் எண்ணம். ஏன்? கிறிஸ்து அறிவார்; பாவி, உன்னைப் பற்றி முழுவதும் கி றி ஸ் து அறிவார். உன் பெயரும் உன் வீடும் அவருக்குத் தெரியும். அவருக்கு மறைய எண்ணாதே. நீ எங்கே இருக்கிறாய் என்பதையும் உன்னைப்பற்றிய மற்றெல்லாவற்றையும் அவர் அறிவார்.

சடுதியான மனந்திரும்புதலைச் சிலர் நம்புகிறதில்லை. அவர்கள் எனக்கு ஒரு மறுமொழி சொல்லட்டும். சகேயு எப்பொழுது மனந்திரும்பினான்? நிச்சயமாய் அ வ ன் மரத்தில் ஏறினபொழுது ஒரு பாவி; அவன் இறங்கின பொழுது மனந்திரும்பி விட்டான். மரக்கிளைக்கும் நிலத்துக்கும் இ டை யே மனந்திரும்பி இருக்கவேண்டும். அந்த ஆயக்காரனை மனந்திருப்ப வெகுகாலம் செ ல் ல வில்லை. சீக்கிரமாய் இறங்கிவா, ந ா ன் இவ்வழியாய் இனிமேல் ஒருக்காலும் வரேன்; இவ்விடத்திற்கு இது என் கடைசிப் பிரயாணம் என்றார். அவன் சீக்கிரமாய் இறங்கிச்சந்தோஷத்தோடே அவரைஅழைத்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான். பின்னொரு விதமாய் யாரா

வது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள் என்று எப்போதாவது கேள்விப்பட்டீர்களோ? கிறிஸ்து வரும் பொழுது சந்தோஷமும் வரும்; பாவம் குருடு சஞ்சலம் ஓடிவிடும்; ஒளி சமாதனம் சந்தோஷம் இவைகள் ஆத்துமாவுக்குள் பிரவேசிக்கும். இப்போது தங்கள் உயர்வான இடங்களிலிருந்து தாழ வந்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் அநேகராய் இருப்பார்களாக.

அவன் மனந்திரும்பினது உமக்கு எப்படித் தெரியும் என்று சிலர் கேட்கக்கூடும். அதற்கு அவன் நல்ல அத்தாட்சி காண்பித்தான் என்று நினைக்கிறேன். இப்போதும் அப்படிப்பட்ட சாட்சிகளைக் காண விரும்புகிறேன்; செல்வரான உங்களில் சிலர் மனந்திரும்பி தங்கள் செல்வத்தில் அரைவாசியைத் தரித்திரருக்குக் கொடுக்கட்டும்; மெய்யான மனந்திரும்புதல் என்று ஜனங்கள் உடனே நம்புவார்கள். அதிலும் உத்தமமான சாட்சியும் இருக்கிறது. ''நான் ஒருவனிடத்தில் எதையாகிலும அநியாயமாய் வாங்கினதுண்டானல் நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்துகிறேன் என்ருன்''. அது நல்ல சாட்சி. ஜனங்கள் சடுதியாய் மனந்திரும்பினல் நிலைநிற்கமாட்டார்கள் என்று சொல்லுகிறீர்கள். சகேயு நிலைநின்று நாலத்தனை செலுத்தினுன். பணப்பைக்குச் சமீபித்து வருகிற மனந்திரும்புதலையே விரும்புகிருேம். நான் நினைக்கிறது என்னவெனில், மறுநாள் காலமே சகேயுவின் வேலைக்காரன் ஒரு அயலானிடம் போய் நூறு பவுண் உண்டியலை நீட்டுகிருன். இது என்னத்திற்கென்று அவன் வினுவுகிருன். என் எஜமான் சில வருஷங்களுச்கு முன்னே உம்மிடத்திலிருந்து இருபத்தைந்து பவுண் அநியாயமாய் எடுத்துக்

கொண்டார். இது அவர் பதில் கொடுக்கும் பணம் என்றான். அது சகேயுவின் மனந்திரும்புதலை மனுஷரை நம்பப் பண்ணும். இங்கேயும் அப்படியான சம்பவங்கள் நடக்கிறதை நான் காண விரும்புகிறேன். அப்போது மனுஷர் சடுதியான மனந்திரும்புதலுக்கு விரோதம் பேசுவதை விட்டுவிடுவார்கள்.

ஆண்டவர் ஆயக்காரனுடன் விருந்துக்குப் போனார். அவர் அங்கே இருக்கிறபொழுது பரிசேயர் முறுமுறுத்துக் குற்றம் சொன்னார்கள். இந்த மனுஷன் பாவிகளை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார்கள். இப்படிப் பரிசேயர் குறை சொல்லுகிறபொழுதுதான் நான் இப்பொழுது வாசித்த முகவுரை வாக்கியத்தை நமது ஆண்டவர் சொன்னார். அவர் சொன்னது எப்படி இருக்கிறதானால், நான் சகேயுவினிடத்தில் வந்தது அவனுக்கு வருத்தத்தை அல்லது கிலேசத்தை உண்டுபண்ண அல்ல, அவனை இரட்சித்து ஆசீர்வதிக்கவே வந்தேன். "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்" என்றார்.

நான் கெட்டுப்போனேன் என்று எண்ணுகிற ஒரு மனுஷனாவது மனுஷியாவது இங்கே இருந்தால் அவர்களுக்கு ஒரு நற்செய்தி சொல்லுகிறேன். கிறிஸ்து உன்னைத் தேடி வந்திருக்கிறார். அநேக வருஷங்களுக்கு முன்னே ஒரு சனிக்கிழமை இரவு நியுயார்க் நகரத்து புல்டன் தெரு ஜெபக்கூட்டத்துக்குப் போனேன். கூட்டம் முடிந்தபின் ஒரு மனுஷன் என்னிடத்தில் வந்து நாளைக்கு ஜெயிலுக்குப் போய் மறியல்காரருக்குப் பிரசங்

கம் பண்ணுவீரோ என்று கேட்டான். நான் சந்தோஷ மாய் அப்படிச் செய்வேன் என்றேன். அந்த மறியல் வீட்டில் ஒரு ஜெப ஆலயமும் இல்லை. மரியல்காரர் குகையிலே நான் பிரசங்கம் பண்ண வேண்டும். ஒரு சிறு இரும்புக் கிராதியிலே நின்று ஒரு பெரிய நீண்ட இருபுறமும் சுவருள்ள வழிப்பாதையான இடத்திலே பிரசங்கித்தேன். பிரசங்கம் கேட்டவர்கள் முந்நூறு நானூறு பேர் என்று நினைக்கிறேன். ஒருவரையாவது நான் காணக்கூடியதாய் இருக்கவில்லை. பிரசங்கிப்பதும் மிகவும் வருத்தமாய் இருந்தது. இதற்கு முன் வெறும் சுவர்களுக்கு நான் ஒருக்காலும் பிரசங்கம் பண்ணின தில்லை. முடிந்தபின்பு நான் யாருக்குப் பிரசங்கம் பண்ணி னேன்; அவர்கள் சுவிசேஷத்தை எப்படி ஏற்றுக்கொண் டார்கள் என்று அறிய விரும்பினேன். முதல் கதவுக்குப் போனேன். அங்கிருப்பவர்கள்தான் என் பிரசங்கத்தை நன்ருய்க் கேட்கக்கூடும். ஒரு சிறு ஜன்னலுக்கு ஊடாகப் பார்த்தபோது அங்கே சில மனுஷர் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். பிரசங்க வேளையிலும் விளையாடிக் கொண்டிருந்தார்கள் என்று நினைக்கிறேன். உங்கள் நிலைமை என்ன? என்று விசாரித்தேன்.

அந்நியனே! எங்களைக் குறித்துக் கெட்ட எண்ணம் கொள்ளாதேயும்; சாட்சிகள் சத்தியம் பண்ணிப் பொய் சொன்னார்கள்; அதனால் நாங்கள் இங்கே வந்தோம் என்ருர்கள். கிறிஸ்து இவ்வறையிலுள்ள ஒருவரையும் இரட்சிக்கமாட்டாரா? கெட்டுப்போனவர்கள் ஒருவரும் இல்லை என்றேன். மற்ற சிற்றறைக்குப் போய், சிநேகி தனே, உனது காரியம் எப்படி என்றேன். குற்றம் செய்த வன் என் சாயலுள்ளவன், அவர்கள் என்னை அவன் என்று பிடித்துக்கொண்டார்கள். ஆகையால் நான் இவ்விடத்

திற்கு வந்தேன் என்ருன். அவனும் குற்றமற்றவன். மற்றச் சிற்றறைக்குப் போய் உங்கள் நிலைமை என்ன என்றேன். நாங்கள் கெட்ட கூட்டத்தில் சேர்ந்தோம். குற்றம் செய்தவன் சுத்தவாளியாய் விட்டான். நாங்கள் அகப்பட்டுக்கொண்டோம், நாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்ருர்கள். அடுத்த சிற்றறைக்குப் போய் உங்கள் காரியம் என்ன என்றேன். நமது விசாரணை மற்றக் கிழமை வருகிறது, எங்களுக்கு விரோதமாய் அவர்களிடம் ஒன்றும் இல்லை, நாங்கள் விலகிவிடுவோம் என்று சொன்ஞர்கள். ஏறக்குறைய ஒவ்வொரு சிற்றறைக்கும் போனேன். ஒரே மறுமொழியே சொன்னுர்கள்; தங்களில் குற்றம் இல்லை என்ருர்கள்.

ஆ! இவ்வளவு கூட்டமான சுத்தவாளரை நான் ஒருக்காலும் கண்டதில்லை; அவர்கள் சொன்னபடி குற்றமெல்லாம் நியாயாதிபதிகள் பேரில் இருந்தது. இம் மனுஷர் சுய நீதியாகிய அழுக்கான கந்தைகளால் தங்களைப் போர்த்துக்கொண்டார்சள். ஆறுயிரம் வருஷங்களாய் இப்படியே நடந்துவருகிறது. ஒன்றன்பின் ஒன்ருய் ஒவ்வொரு சிற்றறைக்கும் நடந்து போகையில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு போக்குச் சாக்குச் சொல்லக் கண்ட போது, அதைரியம் அடைந்தேன்; போக்குச் சாக்கு இல்லாதவனுக்குப் பிசாசு ஒரு போக்குச்சாக்கு உண்டுபண்ணிக் கொடுத்தது. மறியல் கூட்டத்தின் கடைசியான அறைக்குப் போனபொழுது முழங்காலிலே முழங்கையை ஊன்றிக் கையிலே தலையை வைத்துக்கொண்டிருக்கிற ஒரு மனிதனைக் கண்டேன். அவன் கண்களில் சொட்டுச் சொட்டாய் அல்ல, இரண்டு சிறு நீரோட்டமாய் கண்ணீர்கள் ஓடின.

என்ன சஞ்சலம் என்று கேட்டேன்; அவன் வியாகுலமும் துக்கமும் நிறைந்தவனாய்க் காணப்பட்டான். என் பாவங்கள் நான் சுமக்கப்படாத அளவாய் இருக்கின்றனவே என்றான். அதற்காக நான் தேவனைத் துதிக்கிறேன் என்றேன். என்ன சொல்லுகிறீர், இப்பொழுது பிரசங்கம் பண்ணினவர் நீர் அல்லவோ என்றான். ஆம் என்றேன். என் பாவங்கள் நான் சுமக்கக்கூடாதவைகளாய் இருப்பது எப்படி உமக்குச் சந்தோஷம் ஆகும் என்றான்.

சொல்லுகிறேன், கேள். உன் பாவங்கள் நீ சுமக்கக் கூடாதவைகளாய் இருந்தால் உனக்காகச் சுமக்கக்கூடிய ஒருவர்மேல் அவைகளை வை என்றேன். யார் அப்படிச் சுமக்கக்கூடியவர் என்றான். கர்த்தராகிய இயேசு என்றேன். அவர் என் பாவங்களைச் சுமக்கமாட்டார் என்றான். ஏன் என்றதற்கு: என் ஜீவிய காலமெல்லாம் அவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தேன் என்றான். அப்படி நீ பாவஞ் செய்திருந்தாலும் தேவ குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் என்றேன். இழந்து போனதைத் தேடி இரட்சிக்கவும் மறியல் கதவுகளைத் திறந்து சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கவும் கிறிஸ்து வந்தார் என்பதை அவனுக்குச் சொன்னேன். கெட்டுப்போனேன் என்று நம்பின ஒரு மனிதனைக் காண்பது ஒரு கலசம் குளிர்ந்த ஜலத்தை குடிப்பதுபோல் இருந்தது. ஆகையால் நான் அவ்விடம் நின்று சிலுவையில் அறையுண்ட இரட்சகரை அவனுக்கு அறிவித்து, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நமது பாவங்களுக்காக மரித்தும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்

பட்டும் இருக்கிறார் என்றேன். தன்னைப்போன்ற நிர்ப் பந்தமான பாவி இரட்சிக்கப்படக்கூடும் என்பதை அவன் நம்பமாட்டாதவனாய் நெடுநேரம் நின்றான்; தன் பாவங் களை ஒவ்வொன்றாய்ச் சொன்னான். கிறிஸ்துவின் ரத்தம் அவைகள் எல்லாவற்றையும் மூடும் என்றேன். பேசி முடிந்தபின்பு இப்போது ஜெபம் பண்ணுவோம் என்றேன். அவன் சிறு அறையின் உள்ளே முழங்கால்படியிட்டான். நான் வெளியே முழங்கால்படியிட்டு நீ ஜெபம்பண்ணு என்றேன்.

ஆ! நான் தேவனைக் கூப்பிடுவது தேவ தூஷணமாய் இருக்கும் என்றான். தேவனை நோக்கிக் கூப்பிடு என்றேன். முழங்காலில் நின்றபடி ஆயக்காரன் செய்ததுபோல் தேவனே, கெட்ட பாவியாகிய என்மேல் இரங்கும் என்று பிரார்த்தித்தான். ஜன்னலுக்கு ஊடாக என் கையை நீட்டி அவனுடன் கையாட்டினபொழுது ஒரு சொட்டுக் கண்ணீர் என் கைமேல் விழுந்தது. அது என் உள்ளத் திலே வெகு நேரம் எரிந்துகொண்டிருந்தது. அது மனந் திரும்புதலின் கண்ணீர். தான் நரகத்துக்குள்ளானவன் என்று நம்பினான். அவனை இரட்சிக்கக் கிறிஸ்து வந்தார் என்பதை அவன் நம்பப்பண்ணப் பிரயாசப்பட்டேன். நான் அவனை விட்டுப் போகையிலும் அவன் இருதயம் இருளாய் இருந்தது. நான் என் வீட்டில் ஒன்பது மணிக் கும் பத்து மணிக்கும் இடையே உனக்காகப் பிரார்த்திப் பேன் என்றேன். மறுநாள் காலையில் அவன்மீது எனக்கு அதிக கரிசனை உண்டானதால், திரும்ப அவனிடம் போனேன். அவனைப் பார்த்தவுடன் பாவத்தின் வியா குலமும் அவநம்பிக்கையும் அவனைவிட்டு புறப்பட்ட

தென்று கண்டேன். அவனுடைய முகத்தில் பரம ஒளி பிரகாசித்தது: ஆனந்தக் கண்ணீர் கண்களில் உண்டானது; துக்கக் கண்ணீர்கள் ஒளிந்துபோயிற்று; அவன் பாதையிலே நீதியின் சூரியன் உதயமானர்; அவன் ஆத்துமா அவனுக்குள்ளே சந்தோஷத்தினுல் குதித்தது; சகேயுவைப் போல் அவன் கிறிஸ்துவைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டான். அதைப்பற்றிச் சொல்லு என்றேன் என்ன நேரம் என்று நான் சொல்லமாட்டேன், ஏறக் குறைய நடுச்சாமம் என்று நான் நம்புகிறேன். அப்போது நெடு நேரமாய்ச் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த எனது பாரம் சடுதியாய்விழுந்துபோயிற்று. இப்போது நியுயார்க் நகரில் என்னிலும் மனப்பாக்கியமுள்ள வேறெருவன் இல்லை என்று நம்புகிறேன் என்றுன்.

நான் சிக்காகோ நகரைவிட்ட நாள் முதல் திரும்பி அவ்வூருக்குப் போகுமுன்னே, நான் கண்ட எல்லாருக்குள்ளும் அவனே அதிக மனப் பாக்கியமுள்ளவன் என்று நினைக்கிறேன். அவனுடைய முகம் பரலோகத்திலிருந்து வரும் ஒளியால் பிரகாசித்தது. நான் அவனிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு புறப்பட்டு வந்தேன்; மறுமையிலே அவனைச் சந்திக்கக் காத்திருக்கிறேன்.

தேவ குமாரன் அந்த இரவு மறியல்அறை ஒவ்வொன்றையும் கடந்து அந்த அறைக்குப்போய், அந்தப்பாவச் சிறையை ஏன் விடுவித்தார் என்று நீங்கள் சொல்லக் கூடுமா? நான் கெட்டுப்போனேன் என்று நம்பினபடியினுலேதான்.

நான் அதை உணரவில்லை என்று உங்களில் சிலர் ஒரு வேளை சொல்வீர்கள். உணர்ச்சியைப்பற்றி கவனியாதேயுங்கள்; கிறிஸ்துவை நம்புங்கள். நான் இரட்சிக்கப்பட்டேனே கெட்டுப்போனேனே என்று உங்களைத்தானே விசாரியுங்கள்; இரண்டில் ஒன்ருய்த்தான் இருக்கவேண்டும். இடையானது ஒன்றில்லை. மனுஷன் ஒரே நேரத்திலே இரட்சிக்கப்பட்டவனும் கெட்டுப்போனவனுமாய் இருக்கக்கூடாது. அதுஇயலாத காரியம். வேதம் உண்மையானுல் இந்தக் கூட்டத்தில் இருக்கும் ஒவ்வொரு மனுஷனும் ஸ்திரீயும் ஒன்றில் இரட்சிக்கப்பட வேண்டும். அல்லது கெட்டுப் போக வேண்டும். வேதம் உண்மை அல்ல என்று நான் எண்ணினுல் நான் இப்போது பிரசங்கம் பண்ணமாட்டேன். வேதம் உண்மையால் இந்த அறையிலேயிருக்கிற ஒவ்வொரு மனுஷனும் ஒவ்வொரு ஸ்திரீயும் ஒன்றில் பேழைக்குள் இருக்கவேண்டும் அல்லது வெளியே இருக்க வேண்டும்; இரட்சிக்கப்பட வேண்டும் அல்லது கெட்டுப்போக வேண்டும்.

இப்போது ஜனங்கள் கெட்டுப்போவது என்ன என்பதை சரியாய் உணருவார்களானுல், அவர்களில் ஒவ்வொருவனுடைய கண்களிலும் கண்ணீர்வரும் என்று நான் நம்புகிறேன். பிசாசானவன் அங்கங்கு போய், கெட்டுப்போவது என்பதில் ஒன்றும் இல்லை என்று மனுஷனுக்குச்சொல்லி தொட்டிலை ஆட்டி அவர்களை நித்திரைக்குப் போக்கிவிடுகிருன். பயங்கரமான நரகத்தில் நின்று நம்மை இரட்சிக்கக் கிறிஸ்து வந்தார் என்று வேதம் சொல்லுகிறதை நான் நம்புகிறேன்.

சுகத்தை இழந்துபோன ஒருவனைப்பற்றி கேள்விப் படும்போது அவனில் பரிதாபம் கொள்ளுகிறோம்; அது துக்கமான காரியம் என்கிறோம். நம்முடைய இருதயம் அவனை நினைத்துப் பரிதபிக்கின்றது. வேறொரு மனுஷன் தன் செல்வத்தை இழந்துபோகிறான்; அது பெரிய துக்கம் என்கிறோம். இன்னும் ஒரு மனுஷன் நாலுபேருக்கு முன் தன்பேரை இழந்து போகிறான்; இது மெத்த அதிகச் சஞ்சலமென்று நீங்கள் சொல்லுவீர்கள். சுகத்தையும் செல்வத்தையும் பெயரையும் இழந்துபோவது என்ன என்று நமக்குத் தெரியும். ஆத்துமாவை இழப்பதோடு ஒப்பிட்டால் இவைகள் ஒன்றும் அல்லவே.

சிக்காகோ நகரத்தில் ஒருவிசை பெரிய தீ உண்டாகி எரிந்ததே, அதற்குமுன் அவ்விடத்திலுள்ள ஒரு கண் ஆஸ்பத்திரிக்குப் போனேன். அங்கே ஒரு மாதா ஒரு சிறு குழந்தையை வைத்தியரிடம் கொண்டு வந்து, இந்தப் பிள்ளையின் கண்களைப் பாரும் என்றாள். அவர் பார்த்து, அது குருடு; ஜீவகாலமெல்லாம் குருடாய்த்தான் இருக்கும்; அது ஒருக்காலும் பார்க்கமாட்டாது என்றார். அப்படி அவர் சொன்னவுடனே மாதா பிள்ளையை மார்போடு அணைத்து பயங்கரப்படத்தக்க விதமாய் சத்தமிட்டு அழுதாள். குருடு என்ற எண்ணம் அவள் இருதயத்தை ஊடுருவினது. அவள் அழுகையைப் பார்த்த நானும் அழுதேன். அந்த மாதாவுக்கு அது எவ்வளவு பயங்கரமான சிந்தனை. ஐயோ! என் அருமையான செல்வமே! உன்னைப்பற்றி உன்மாதாவை ஒருக்காலும் பார்க்கமாட்டாயோ? வைத்தியரே! என்னால் இது தாங்கக்கூடாதிருக்கிறதே! என்

பிள்ளையே! என் பிள்ளையே! என்று அலறி அழுதாள். எந்த மனதையும் அசைக்கத்தக்கக் காட்சியாய் இருந்தது. ஆனால் ஆத்துமாவை இழந்துபோவதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், பார்வையை இழந்துபோவது எம்மாத்திரம்! நான் என் ஆத்துமாவை இழந்துபோவதைப் பார்க்கிலும் என் முகத்தில் இருந்து இந்தக் கண்கள் எடுபட்டுக் குருடனாகச் சவக்குழிக்குப் போவதையே நான் ஆயிரம்தரம் தெரிந்துகொள்வேன். எனக்கு ஒரு மகன் இருக்கிறான்; நான் அவனை எவ்வளவாய் நேசிக்கிறேன் என்பதை தேவனன்றி வேறொருவரும் அறியார்கள். ஆனால் அவன் வளர்ந்து கிறிஸ்துவில் நம்பிக்கை அற்றவனாய் சவக்குழிக்குப் போவதைப் பார்க்கிலும் அவன் கண் பிடுங்கப்படுவதையே அதிகமாய் விரும்புவேன். ஆத்துமாவை இழந்துபோவது என்ன என்று கிறிஸ்து அறிந்தார். அதுதான் பிதாவின் மடியைவிட்டு அவரை இங்கே கொண்டுவந்தது; அதுதான் அவரைக் கல்வாரிக்குக் கொண்டுபோனது. தேவகுமாரன் நம்மை இரட்சிக்க வாஞ்சையாய் இருந்தார். மனுஷனே! கெட்டுப்போன உலகத்தை இரட்சிக்க கல்வாரியில் அவர் மரித்தபோது உன் ஆத்துமாவையும் என் ஆத்துமாவையும் இரட்சிக்கத்தான் அவர் மரித்தார்.

ஐயோ! ஆத்துமாவை இழந்து போதல் எவ்வளவு பயங்கரமான காரியம். நீ கெட்டுப் போனவன் என்று இப்போது உணருவாயானால் கிறிஸ்துவின் சமாதானம் உனக்கு உண்டாகுமட்டும் ஆறுதலாய் இராதிரு என்று உன்னை மன்றாடுகிறேன். பிதாக்களே! மாதாக்களே! உங்கள் பிள்ளைகள் இன்னும் பேழைக்குட்படாதவர்களாய்

இருந்தால் அவர்கள் உட்படுமுன்னே ஆறுதலடையா திருங்கள். உங்கள் பிள்ளைகள் கிறிஸ்துவிடம் வர அதைரியப் படுத்தாதிருங்கள். அந்தச் சிறு ஆண்பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் இங்கே காண்பது எனக்குச் சந்தோஷம். அன்பான பிள்ளைகளே! உங்களுக்கே பிரசங்கிக்கிறேன் என்று நினைத்துக்கொள்ளுங்கள். நரைத்த வயோதிபனுக்காக மனுஷகுமாரன் வந்ததுபோல உங்களுக்காகவும் வந்தார். செல்வர், வறிஞர், இளைஞர், முதியோர் எல்லோருக்காகவும் வந்தார். வாலிபனே! நீ கெட்டுபோனவனுகில் தேவன் அதை உனக்குக் காண்பிப்பாராக. நீயும் பரம ராஜ்யத்தில் பிரவேசிப்பாயாக. உன்னைத் தேடி இரட்சிக்கும்படி மனுஷ குமாரன் வந்திருக்கிறுர்.

ரோலண்டில் என்னும் போதகரைப் பற்றி ஒரு கதை சொல்லுவார்கள். அவர் ஒரு முறை ஒரு வெளியிலே பெருங்கூட்டமான ஜனத்துக்குப் பிரசங்கம் பண்ணிக் கொண்டு நின்றுர். எர்ஸ்கின் என்னும் பெருமாட்டி அவருக்கு அருகே சவாரி போகையில் திரளான ஜனங்களுக்கு பிரசங்கிக்கிற இவர் யார் என்று கேட்டாள். பெயர் பெற்ற ரோலண்டில் என்று சொன்னுர்கள். அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அவர் சொல்வதை நானும் கேட்கும்படி பிரசங்கப்பீடத்திற்குச் சமீபமாய் வண்டியை செலுத்து என்றுள். ரோலண்டில் அந்த வண்டியைக் கவனித்து, அவள் பிரபுக்கள் வரிசையைச் சேர்ந்தவள் என்று எண்ணி அருகே நின்ற சிலரிடம் இது யார் என்று விசாரித்து அறிந்து கொண்டார். கொஞ்சநேரம் பிரசங்கித்து பின்பு இறங்கி என் சிநே

கிதரே, விற்கிறதற்குச் சில பொருள் என்னிடம் இருக்கிறது என்றார். ஒரு போதகர் பிரசங்க நடுவிலே ஏதோ விற்கப்போகிறார் என்று எண்ணி, ஒவ்வொருவரும் அதிசயத்தோடு விழித்துப் பார்த்தார்கள். நான் அதை ஏலம் கூறி விற்கப்போகிறேன். அதன் விலை ஐரோப்பாவிலுள்ள சகல கிரீடங்களிலும் விலையுள்ளது. அது ஏர்ஸ்கின் பெருமாட்டியின் ஆத்துமா என்றார். யாராவது விலைக்கு கேட்கிறீர்களோ என்றார். அடுத்தாற்போல் இங்கே ஒரு கேள்வி வருகிறதென்று எண்ணுகிறேன். கேள்விக்காரன் யார்? சாத்தானே கேள்விக்காரன். சாத்தானே, நீ என்ன கொடுப்பாய் என்றார். நான் செல்வமும், கனமும், சந்தோஷமும் கொடுப்பேன். ஆம், அவள் ஆத்துமாவுக்கு முழு உலகமும் கொடுப்பேன், பொறுங்கள். இந்த ஆத்துமாவுக்கு இன்னும் ஒரு கேள்வி வருகிறதை கேட்கிறேன்.

கேட்கிறவர் யார்? கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இயேசுவே, இந்த ஆத்துமாவுக்கு என்ன தருவீர்? நான் சமாதானம் சந்தோஷமும் இந்த உலகம் அறியாத ஆறுதலும் தருவேன்; ஆம், அவள் ஆத்துமாவுக்கு நித்ய ஜீவனும் கொடுப்பேன். பின்பு அவர் ஏர்ஸ்கின் பெருமாட்டியைத் திரும்பிப் பார்த்து, அம்மா நீர் இப்பொழுது உமது ஆத்துமாவை வாங்க விலை கேடகிற இரண்டு பேருடைய கேள்வியையும் பார்த்தீரே! அதை யாருக்குக் கொடுக்கப்போகிறீர் என்றார். அவள், வண்டியின் கதவை குதிரைக்காரனைக் கொண்டு திறப்பித்து ஜனத்திரளுக்கு ஊடாகச் சென்று இயேசுவுக்கே என் ஆத்துமாவைக் கொடுக்கிறேன் என்றாள். என்சிநேகிதரே!

இரண்டு பேர் உங்கள் ஆத்துமாவை விலைக்குக் கேட்கிறார்கள். யாருக்குக் கொடுப்பீர்களென்று நீங்களே தீர்மானியுங்கள். சாத்தான் தான் தரக்கூடாதவைகளை தருவோமென்று சொல்லுகிறான். அவன் பொய்யன். உலக தோற்றமுதல் பொய்யன். பிசாசின் வாக்கை நம்புகிற மனிதனைப்பற்றிப் பரிதபிக்கிறேன். அவன் ஆதாமுக்குப் பொய்சொல்லி ஏமாற்றி அவனிடத்திலுள்ளதெல்லாவற்றையும் அபகரித்து, அவனை நிர்ப்பந்தன் ஆக்கிவிட்டான். ஆதாமின் காலம் முதல்கொண்டு அவனுடைய பொய்யைச் சார்ந்து அவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பினவர்கள் எல்லாரும் மோசம் போனார்கள்; எப்பொழுதும் மோசம் போவார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ, தாம் சொல்வதெல்லாவற்றையும் கொடுக்க இயன்றவராய் இருக்கிறார். கெட்டுப்போனோம் என்று உணருகிறவர்களாய் இங்கே இருக்கிற ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் நித்திய ஜீவனைக் கொடுப்போம் என்று அவர் வாக்குத்தத்தம் பண்ணுகிறார். ''தேவனுடைய வரமோ நித்திய ஜீவன்'' யார் வேண்டும் என்கிறீர்கள்? நீங்கள் யாராவது இரட்சிப்பை விரும்புகிறீர்கள் என்னும் செய்தியை தேவ சிம்மாசனத்தண்டை தெரிவிப்பீர்களோ? சிங்காசனத்தைச் சூழ உண்டாகும் ஆர்ப்பரிப்பைப்பற்றி நாம் சற்று முன்னே பாடினபோது என் உள்ளம் தேவனிடம் சென்றது. மோட்சத்தில் பெரிய ஆர்ப்பரிப்பு உண்டாகும்படி அநேக ஆத்துமாக்கள் அவரிடம் திரும்ப வேண்டும் என்றும் ஆவலோடு பிரார்த்தித்தேன்.

நான் இரட்சிக்கப்பட விருப்பமாய் இருக்கிறேன்; ஆனாலும் கிறிஸ்து என்னை ஒரு போதும் தேடவில்லை என்று இன்றைக்கு ஒரு மனுஷன் எனக்குச் சொன்னான்.

நீ ஏன் தாமதமாய் இருக்கிறுய் என்று கேட்டேன். கிறிஸ்து என்னை அழைக்குமட்டும் தாமதித்திருக்கிறேன், அவர் அழைத்தவுடனே வருவேன் என்றுன். இப்படிப் பட்ட கருத்துள்ள வேறு சிலர் இங்கே இருக்கக்கூடும். தேவனுடைய ஆவியானவரால் ஒருக்காலும் வருந்தி அழைக்கப்படாதவனுய் இத்தேசத்தில் ஒரு மனுஷனுவது இருக்கிறுன் என்று நான் நம்பவில்லை. தேடுகிறவர் அவரே என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த ஆறுயிரம் வருஷங்களிலும் இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு வரையும் தேவனே முதல் தேடினவர். ஆதாம் கெட்டுப் போனவுடனே தேவன் அவனைத் தேடினுர்; அவனே பயந்து ஓடி தோட்டத்தின் செடிகளுக்குள்ளே ஒளித்துக் கொண்டான். தேவனே தேடினவராஞர். அந்த நாள் தொடுத்து இந்த நாள் வரைக்கும் அவரே தேடுகிறுர். இந்தச் சபையில் எந்த மனுஷன் அல்லது எந்த மனுஷி இரட்சிக்கப்பட்டவர்களாய் இருக்கிறுர்களோ, அவர்களை அவரே முதல் தேடினுர்.

லூக்கா 15-ம் அதிகாரத்தில் என்ன வாசிக்கிறேம்? ஒரு மேய்ப்பன் தனது ஆட்டைப் பட்டிக்குக் கொண்டு வருகிறுன். அவைகள் உள்ளே செல்லும்பொழுது கிட்ட நின்று அவைகளை எண்ணுகிறுன். அவன் ஒன்று, இரண்டு, மூன்று என்று தொண்ணூற்றென்பது வரைக் கும் எண்ணுகிறதாய்க் காண்கிறேன். என்ன, நூறு அல்லவோ இருக்க வேண்டும்? நான் எண்ணுகிறது மோசம் என்று தன் உள்ளத்தில் சொல்லி திரும்பவும் எண்ணுகிறுன். ஆகத் தொண்ணூற்றென்பதுதான் இருக் கிறது, பின்னை ஒன்றை இழந்துபோனேன் என்கிறுன்.

நல்லது, தப்பிப்போன ஆடு திரும்பி வரட்டும் என்று அவன் சொல்லுகிறனே? இல்லை. தானே தேடத்துவக்கி மலைக்குப்போய் அங்கிங்கெல்லாம் பார்த்துக் கண்டு பிடித்துத் தோள்மேல் ஏற்றி வீட்டுக்குக் கொண்டுவருகிறன். ஆடா மேய்ப்பனைக் கண்டுபிடித்தது? இல்லை மேய்ப்பனே ஆட்டைக் கண்டுபிடித்துக் கொண்டுவருகிறன். அவனே கண்டுபிடித்துச் சந்தோஷப்பட்டான். நிசமாய்ப் பட்டிக்குத் திரும்பிவர ஆடும் பிரியப்படும். ஆனல் மேய்ப்பனே சந்தோஷப்பட்டு என்னுடன் சந்தோஷப்படுங்கள் என்று தன் சிநேகிதரையும் அழைத்தவன்.

தன் காசை இழந்துபோன ஸ்திரீயைப்பற்றிச் சொல்லப்படுகிறதே. யாரோ அன்றைக்குக் கணக்கைத் தீர்த்து அவளிடம் பத்து வெள்ளிக்காசைக் கொடுத்தார்கள். இரவு படுக்கைக்குப் போகிறபொழுது காசைச் சட்டைச் சாக்கில் இருந்து எடுத்து எண்ணினள். என்ன, ஒன்பது காசுதான் இருக்கிறது; பத்து இருக்கவேண்டுமே என்கிறள். திரும்ப எண்ணுகிறள். ஒன்பதுதான் இருக்கிறது. அந்தக் காசு வாங்கினபின் நான் எங்கே போனேன், நான் நிச்சமாய் வீட்டை விட்டுப்போகவில்லையே என்று சொல்லி தன் சட்டைச் சாக்கை உள்வெளியாய்ப் புரட்டிப்பார்க்கிறள். இதோ ஒரு சிறு துவாரம் இருக்கிறது. போன காசு என் சட்டைச்சாக்குக்கு வரட்டும் என்று காத்துக்கொண்டு இருக்கிறளோ? இல்லை. அவள் விளக்கைக் கொழுத்தி ஒரு விளக்குமாற்றை எடுத்து முயற்சியாய் பெருக்குகிறள் அவள் கட்டிலையும் மேசைகளையும் நாற்காலிகளையும் மற்றும் தளவாடங்களையும் எடுத்து வைத்து ஒவ்வொரு மூலையையும் கூட்டிப்பார்க்கிறள்.

கண்டு பிடித்தபோது சந்தோஷப்படுகிறது யார்? காசு சந்தோஷப்படுகிறதோ? இல்லே. கண்டுபிடித்த ஸ்திரீயே சந்தோஷப்படுகிருள். தேவனே, தேடுகிறவர் என்கிற பெரிய சத்தியத்தை கிறிஸ்து இந்த உவமைகளினுல் வெளிப்படுத்தினுர். கிறிஸ்துவைக் கண்டு பிடித்தோம் என்று ஜனங்கள் பேசிக்கொள்ளுகிருர்கள். அவர்களே முதல் தேடிக் கண்டுபிடிக்கிறவர் கிறிஸ்துவே.

வேருெரு மனுஷன் தான் இரட்சிக்கப்படக் கூடாத பெரும் பாவி என்று எனக்குச் சொன்னுன். அப்படிப் பட்டவனேத்தான் கிறிஸ்து தேடிவந்தார். ''இந்த மனுஷன் பாவிகளே ஏற்றுக்கொண்டு, அவர்களுடன் போஜனம் பண்ணுகிருர்'' என்ருர்களே! கிறிஸ்துவுக்கு விரோதமாய் அவர்கள் கொண்டுவரக்கூடிய குற்றம் அவர் பாவிகளே ஏற்றுக்கொள்ளுகிருர் என்பதே. அவ்வகையான மனுஷரையே அவர் ஏற்றுக்கொள்ள விருப்பமாய் இருக்கிருர். நீ பாவி என்பது உண்மையானுல் உனக்கு ஒரு இரட்சகர் இருக்கிருர் என்பதும் உண்மை. நீ எவ்வளவு பெரும் பாவியோ, அவ்வளவு உனக்கு ஒரு இரட்சகர் இருக்க வேண்டிய அவசியமும் பெரிது. உன் இருதயம் கடினமாய் இருக்கிறதென்று ஒருவேளே சொல்வாய். அப்படியாகில் அதை மெதுவாக்கக் கிறிதுவே உனக்கு வேண்டும். நீயாய் அப்படிச் செய்யமாட்டாய். இருதய கடினம் பெரிதானுல் கிறிஸ்துவின் அவசியமும் பெரிது. உன் பாவ இருள் பெரிதானுல் ஒரு இரட்சகர் உனக்கு வேண்டியதும் அவ்வளவு பெரிய அவசியம். உன் பாவம் உனக்குமுன் ஒரு இருண்ட மலேபோல் எழும்புகிறதாகில், இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களும் அற

உன்னை சுத்திகரிக்கும் என்பதை நினைத்துக்கொள். கிறிஸ்துவின் இரத்தம் நீக்கக்கூடாத பெரிய பாவம் இல்லவே இல்லை. எல்லாவற்றையும் அவர் நீக்கக்கூடும். 'இழந்துபோனதைத் தேடி இரட்சிக்கவே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்'' என்கிற பழைய சுவிசேஷத்தையே நான் பிரசங்கிக்கிறேன்.

ஆதாமின் விழுதலும் அவன் கேடுமே தேவனின் அன்பை வெளிப்படுத்தினது. ஆதாமைத் தேவன் ஏதேனில் வைத்தபோது தாம் அவனை நேசிக்கிறதாக அவனுக்குச் சொன்னதில்லை. அவனுடைய விழுதலும் பாவமுமே அதை வெளிப்படுத்தினது.

மான்செஸ்டர் நகரிலுள்ள என் சிநேகிதன் ஒருவர் சில வருஷங்களுக்கு முன்னே சிக்காகோ நகருக்குப் போய் அதைப்பார்த்து அதிக ஆச்சரியப்பட்டார். அது ஒரு பெரிய பட்டணம்; மூன்று லட்சம் அல்லது நாலு லட்சம் ஜனம் வாசம் பண்ணக்கூடியது; அநேக இருப்புப் பாதைகளுக்கு மையம்; மரம் தானியம் முதலியவைகளின் வர்த்தக வளமுள்ள நகரமாயிருந்தது. அவர் மான்செஸ்டருக்குப்போய் சிக்காகோவைப்பற்றிச் சொன்னாராம். அதைக் குறித்து ஒருவரும் கவனிக்கவில்லை. அது தூரமான இடம்; அதைப்பற்றிக் கேட்கவும் ஜனங்கள் விரும்பவில்லை. ஆனால் ஒரு நாள் அது தீப்பற்றி எரிகிறது என்கிற துக்கசெய்தி மின்தபாலில் வந்தது. அப்பொழுது சடுதியாய் மான்செஸ்டர் நகரத்தார் சிக்காகோ நகரத்தைப்பற்றிக் கவலைகொண்டார்கள்; வந்த ஒவ்வொரு பத்திரிகையையும் வாசித்தார்கள்; பத்திரிகைகளை விலைக்கு

வாங்கினார்கள்; சிக்காகோ எரிகிறது; ஒரு லட்சம் ஜனம் வீடும் ஒதுக்கிடமும் அற்றவர்கள் ஆனார்கள் என்ற செய்தி வந்தபொழுதுதான் ஒவ்வொருவரும் கரிசனை கொண்டு அழுதார்கள்; முன்னேறி வந்து தங்கள் பணத்தையும் கொடுத்தார்கள். வருந்துபவர்களுக்காக தங்கள் காசை நூற்றுக்கணக்கான பவுண்களாகக் கொடுத்தார்கள். சிக்காகோவின் வருத்தமே மான்செஸ்டரிலும், லொந்தோனிலும், லிவர்ப்பூலிலும் நேசத்தை உண்டாக்கினது.

அந்தப் பயங்கரமான அக்கினி காலத்தில் நானும் அங்கே இருந்தேன். செல்வர் உள்ளதெல்லாவற்றையும் இழந்து போகக் கண்டேன். ஒரு ஞாயிற்றுக்கிழமை இரவு அவர்கள் நித்திரைக்குப் போனபொழுது அவர்கள் சிக்காகோவில் முதல்தர ஐசுவரியவான்கள்; மறுநாள் காலையிலே அவர்கள் யாசகர். ஆனாலும் ஒருவரும் அதை யிட்டு அழ நான் காணவில்லை. லிவர்ப்பூல் ஆயிரம் பவுண் கொடுக்கிறது. மான்செஸ்டர் ஆயிரம் பவுண் கொடுக்கிறது; லொந்தோன் பணம் அனுப்புகிறது. உதவி வருகிறதென்ற செய்திகள் அறிவிக்கப்பட்ட பொழுது, அப்பட்டணத்தாரின் இருதயம் கரைந்தது. அப்பொழுதுதான் மனுஷர் அழக்கண்டேன். எங்கள்மேல் காட்டப்பட்ட அன்புதான் எங்கள் இருதயத்தை நொறுக் கியது. அப்படிப்பட்ட தேவ அன்பு இத்தேசத்திலுள்ள ஒவ்வொரு இருதயத்தையும் நொறுக்க வேண்டியது. அன்பே இயேசுவை நமக்காக மரிக்கும்படி இங்கே கொண்டு வந்தது. பிதாவின் சிங்காசனத்தைவிட்டு இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும், அன்பே அவரைப் பூமிக்குக் கொண்டுவந்தது.

கிறிஸ்து தங்களைத் தேடவில்லை என்று நினைக்கிறவர்களுக்கு அவர் எப்படி அவர்களைத் தேடுகிறார் என்று சொல்வது ஒரு வேளை நலமாய் இருக்கும். அவர் தேடுகிறவகைகள் அநேகம். விசாரணைக்காரரின் அறையிலே ஒரு மனுஷனைக் கண்டேன். அவனைக் கிறிஸ்து வெகு நாளைக்கு முன் மரித்துப்போன ஒரு தேவ பக்தியுள்ள சகோதரியின் ஜெபத்தின் வழியாய்த் தேடினார். அவள் ஜெபங்களுக்கு உத்தரவு கிடைத்தது அவன் முழுதும் நடுநடுங்கிக் கொண்டு விசாரணைக்காரரின் அறைக்கு வந்தான். இரட்சிப்பின் வழியைக் குறித்துப் பேசினேன்; கண்ணீர் அவன் கன்னங்களில் வடிந்தது; கிறிஸ்துவை தனது இரட்சகராகப் பற்றிக்கொண்டான். அந்தச் சகோதரியின் ஜெபத்தின் வழியாயும் மரணத்தின் வழியாயும் மனுஷகுமாரன் அந்த வாலிபனைத் தேடினார்.

உங்களில் சிலருக்கு பக்தியுள்ள மாதாக்கள் இருந்தார்கள். இரவு முழுவதும் அவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக ஜெபம் பண்ணினார்கள். அவர்கள் இப்பொழுது மோட்சத்திற்குப் போயிருக்கிறார்கள். நீங்கள் அவர்கள் கைகளைப் பிடித்து உங்களை மோட்சத்தில் சந்திப்போம் என்று அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யவில்லையோ? தேவ குமாரனே உங்கள் மாதாக்களின் ஜெபத்தின் வழியாயும் மரணத்தின் வழியாயும் உங்களைத் தேடினவர். உங்களில் சிலர் உண்மையும் தேவ பக்தியுமுள்ள போதகன்மாரையுடையவர்களாய் இருந்தீர்கள், அவர்கள் பிரசங்கபீடத்தில் நின்று உங்களுக்காகக் கண்ணீர்விட்டு கிறிஸ்துவிடம் வரும்படி உங்களை வேண்டிக் கொண்டார்கள். இருதயங்களை உணர்த்தும் அவர்கள்

பிரசங்கங்களைக் கேட்டீர்கள். சத்தியம் உங்கள் இருத யங்களில் பதிந்தன; உங்கள் கன்னங்களில் கண்ணீர் வடிந்தன. அப்படியும் உங்களைத் தேடினது தேவ குமா ரனே. உங்களில் சிலருக்கு தெய்வபக்தியும் ஜெப வாஞ் சையுமுள்ள ஓய்வு நாள் உபாத்திமாரும் விசாரணைக் காரருமிருந்தார்கள்; கிறிஸ்துவிடம் வரும்படி அவர்கள் உங்களை நெருக்கி ஏவினார்கள். உங்களில் மனந்திரும்பின சில வாலிபர் உங்களுடன் பேசிக் கிறிஸ்துவிடம் வாருங் கள் என்று வாதாடினார்கள். தேவகுமாரனே அப்படியும் உங்கள் ஆத்துமாவைத் தேடி வந்தவர். ''நித்தியம்'' என்ற பயங்கர முகவுரையையுடைய சிறு புஸ்தகம் உங் களில் சிலருடைய கையில் கொடுக்கப்பட்டிருக்கலாம். அதை எங்கே செலவிடப் போகிறீர்கள்! அம்பு உங்கள் உள்ளத்தில் பாய்ந்துமிருக்கலாம்.

அதுவும் தேவகுமாரன் உங்களைத்தேடிவந்த ஒரு வகை. உங்களில் அநேகர் துன்பப்படுக்கையில் வைக்கப் பட்டீர்கள்; அப்போது நினைவுக்கும் தியானத்துக்கும் காலம் இருந்தது. இரவின் அமைதியான ஜாமங்களில் எல்லாரும் நித்திரை மயக்கமானபோது தேவ ஆவியான வர் உங்கள் அறைக்கு வந்தார், உங்கள் படுக்கையை சமீபித்தார். நீங்கள் தேவனுடைய பிள்ளைகளும் மோட்ச சுதந்தரரும் ஆகவேண்டும் என்கிற சிந்தனை உங்கள் மனதில் பிரவேசித்தது. அப்போதும் கெட்டுப்போன உங்கள் ஆத்துமாவைத் தேடி தேவ குமாரன் வந்தார். உங்களில் சிலருக்கு சிறு பிள்ளைகள் இருந்தார்கள்: அவர் களை அப்பால் இருக்கும் கல்லறைத் தோட்டத்திலே புதைத்துப்போட்டீர்கள். அது செத்தபொழுது தேவனை

நேசிப்போம், அவருக்கு ஊழியம் செய்வோம் என்று வாக்குப்பண்ணினீர்கள். வாக்கை நிறைவேற்றினீர்களா? அதுவும் தேவகுமாரன் உங்களைத் தேடிவந்த வேறொரு வகை. அந்தப்பிள்ளையை தம்மிடத்திற்கு எடுத்துக்கொண்டார். உங்கள் இருதயத்தையும் தம்மிடத்திற்கு இழுத்துக்கொள்ளும் பொருட்டாகத்தான்.

கர்த்தர் தேடும் ஒவ்வொரு விதத்தையும் நான் சொன்னால் இரவு முழுதும் செல்லும். இப்போது நீங்கள் இந்த அறையிலே எழுந்து நின்று தேவ குமாரன் எங்களைத் தேடவில்லை என்று சொல்லக்கூடுமோ? இந்தக் கூட்டத்திலாவது இந்த முழுப் பட்டணத்திலாவது ஒருவனாகிலும் அப்படிச் சொல்லக்கூடும் என்று நான் நம்பவில்லை. என் சிநேகிதனே உன் இளம்பிராயம் தொடுத்து அவர் உன்னை அழைக்கிறார். இந்த அறைக்கு உங்கள் எல்லாரையும் அழைத்து வரும்படிக்கு தேவன் தமதுஜனங்களின் உள்ளத்திலே யோசனையை உண்டாக்கினார். உங்களுக்காக உலகமெங்கும் பிரார்த்தனை பண்ணுகிறார்கள். ஒரு வேளை இப்பொழுதும் உங்களுக்காக ஜெபம் பண்ணுகிறதுபோல அத்தனை திரளானவர்கள் முன் ஒருக்காலும் உங்களுக்காக ஜெபம்பண்ணினதில்லை. அப்படியும் சபையாரின் ஜெபத்தைக்கொண்டும், குருமாரின் ஜெபத்தைக் கொண்டும், பரிசுத்தரின் ஜெபத்தைக் கொண்டும், தேவ குமாரனே உங்கள் ஆத்துமாவைத் தேடுகிறவர். "இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத்திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" என்கிறார்.

ஆ! சிநேகிதரே! இப்போது உங்கள் கதவைத் திறந்து, வந்து நிற்கும் தேவனை ஏற்றுக் கொள்ளுங்கள்; அவரை உங்களைவிட்டுத் திரும்பிப்போகவிடாதீர்கள். "இப்பொழுது நீர்போகலாம், எனக்கு வசதியான காலம் வரும்பொழுது உம்மை அழைப்பிப்பேன்" என்று பேலிக்ஸ் சொன்னதுபோல சொல்லாதிருங்கள் இதையே வசதியான காலமாக்குங்கள்; இந்தத் தருணத்தையே உங்கள் இரட்சிப்பின் நாள் ஆக்குங்கள்; இந்த நேரமே தேவனுடைய ஈவை ஏற்றுக் கொள்ளுங்கள். எங்கள் இருதயக் கதவைத் திறந்து பிரவேசியும், என் இருதயத்துக்குள் பிரவேசியும் என்று சொல்வீர்களாக.

III

பாவி கிறிஸ்துவைத் தேடுதல்

ஏசாயா 55 : 6.

"கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாய் இருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்".

முன்னே, மனுஷகுமாரன் இழந்து போனதைத் தேடுகிறார் என்பதைக் குறித்துப்பேசினேன்; இப்போது மனுஷன் தேவனைத் தேடுவதாகிய மறுபக்கத்தைப் பார்க்க விரும்புகிறேன். ஒருவன் தன் ஆத்துமாவைக் குறித்து கவலைகொண்டு தேவனைத் தேடத் துவக்கும்போது அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்திக்க நேரம் செல்லுகிறதில்லை என்று அறிந்திருக்கிறேன். வாஞ்சையுள்ள பாவி வாஞ்சையுள்ள இரட்சகரைச் சந்திக்க நேரம் செல்

லாது. எரே. 29:13ல் என்ன சொல்லியிருக்கிறது? "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடுவீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்".

இவ்வகையான மனுஷரே கிறிஸ்துவைக் கண்டடைகிறவர்கள். அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் அவரைத் தேடுகிறவர்கள். நான் அரை இருதயத்தோடு தேவனைத் தேடுவதைப்பற்றிக் கேள்விப்பட்டுத் தொய்ந்து போனேன்; அது எனக்கு வருத்தமாய் இருக்கிறது. அரை மனம் உள்ளவனை நீங்களும் விரும்புகிறதில்லை; அரை மனதோடு உங்களை நேசிக்கிற ஒருவனில் உங்களுக்குப் பிரியமில்லை. கர்த்தரும் அதை விரும்பவில்லை. நாம் அவரைத் தேடி அவரைக் கண்டுபிடிக்க விரும்பினால் நமது முழு இருதயத்தோடும் அவரைத் தேட வேண்டும். அநேகர் ஏன் கிறிஸ்துவைக் கண்டுபிடிக்கிறதில்லையென்றால் அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் அவரைத் தேடுகிறதில்லை. இதுவே நியாயம். அவர்கள் தங்கள் ஆத்தும இரட்சிப்பைப்பற்றி சாவுக்குரிய வாஞ்சை கொள்ளுகிறதில்லை. தேவன் வாஞ்சையாய் இருக்கிறார். தேவன் செய்தவைகள் ஒவ்வொன்றும் மனுஷரின் இரட்சிப்பைக் குறித்து அவர் வாஞ்சையாய் இருக்கிறார் என்று அத்தாட்சிப்படுத்துகிறது. நமக்காக மரிக்கும்படி தமது குமாரனைக் கொடுத்ததினால் அவர் அதை அத்தாட்சிப்படுத்தினார். தேவ குமாரன் மரித்தபொழுது அதைக் குறித்து வாஞ்சையாய் இருந்தார். கல்வாரி மேடு அதற்குச் சாட்சி அல்லவா? ஆத்தும இரட்சிப்பாகிய பெருங் கவலையில் நாமும் வாஞ்சையாய் இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். மனுஷர் தங்கள் முழு இருதயத்

தோடும் அவரைத் தேடும்பொழுது சீக்கிரம் அவரைக் கண்டுபிடிக்கிறார்கள்.

தான் பெரும் தீயன், துர்ச்சனன், இரட்சிக்கப்பட ஒருபோதும் தகுந்தவன் அல்லவென்று எண்ணின ஒரு வாலிபனை இன்று விசாரணைக்காரர் அறையிலே சந்தித்தேன். அது மனதுக்கு எவ்வளவு ஆரோக்கியமாய் இருந்தது! அவனைப்பற்றி நம்பிக்கையிருந்தது. ஏனெனில், தன் ஆத்துமாவைப்பற்றிச் சொல்லமுடியாத வாஞ்சையுள்ளவனாய் இருந்தான். தான் ஒன்றுக்கும் ஆகாதவன் என்று எண்ணினான், அவன் தேவ கண்ணாடியில் தன் முகத்தைக் கண்டான். அப்படி ஒரு மனுஷன் தன்னைக் காணும்பொழுது தன்னைக் குறித்து மிகவும் எளிய எண்ணம் கொள்ளுவான். ஒருவன் தேவனுக்குத் தூரமாய் இருக்கிறான் என்று எப்போது அறியக்கூடும்? அவன் தன்னைப்பற்றியும் தான் எவ்வளவு நல்லவன் என்பதைப்பற்றியும் அதிகமாய் எண்ணி பேசிக்கொள்ளும் பொழுதுதானே. விசுவாசக் கண்ணினாலே அவன் தேவனைப் பார்த்த நிமிஷமே, முழந்தாளில் நின்று யோபைப் போல நான் நீசன் என்று அழுவான். தங்கள் இரட்சிப்பைக் குறித்து வாஞ்சையாய் இருப்பது மனுஷருக்கு அவசியம். அப்போது சீக்கிரம் கிறிஸ்துவைக் கண்டுபிடிப்பார்கள். அவரைக் கீழே கொண்டுவரும்படி நீங்கள் உயர ஏறவேண்டியதில்லை; அல்லது அவரை மேலே கொண்டுவரும்படி ஆழத்திற்கு இறங்கவேண்டியதில்லை; அல்லது அவரைக் கண்டுபிடிக்கும்படி தூரமான ஒரு பட்டணத்திற்குப் போகவேண்டியதுமில்லை. இப்போது நம் ஒவ்வொருவருக்கும் சமீபமாய் நிற்கிறார்,

விசாரணைக்காரரின் அறையிலே ஒருவன், ஒரு வாலிபனைப் பார்த்து, நீ வீட்டுக்குப் போய் உன் ஜெப அறையிலே கிறிஸ்துவைத் தேடு என்று சொல்லக்கேட்டேன். அப்படிச் செய்யுங்கள் என்று நான் யாருக்காவது சொல்லத் துணிவதில்லை. நீங்கள் வீட்டுக்குப் போகு முன்னே மரித்துப்போகக்கூடும். வேதத்தில் சொல்லியிருப்பது சரியானால் கிறிஸ்துவை இப்பொழுது அல்ல நாளைக்கு அல்லது ஒரு மணித்தியாலம் பொறுத்துத் தேடு என்று எனக்குச் சொல்லுகிற மனிதன் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை அவர் இரட்சிக்கும்படி இந்நிமிஷம் நம் ஒவ்வொருவருக்கும் சமீபமாய் நிற்கிறார். தாங்கள் இரட்சிக்கப்படும்படி உலகத்தார் வாஞ்சையாயிருப்பார்களானால், தங்கள் இருதயக் கதவண்டை தேவகுமாரன் நிற்கிறதைக் காண்பார்கள்.

இருபதினாயிரம் பவுண் விலைபெற்ற வைர ரத்தினத்தை இழந்துபோனேன் என்று நான் இப்பொழுது சொல்வதாக வைத்துக்கொள்ளுங்கள். இவ்வறைக்கு நான் வந்தபோது அது என்னிடமிருந்தது. பிரசங்கம் பண்ணி முடிந்த பின்பு அதைக்காணவில்லை. இவ்வறையில்தான் அது இருக்கவேண்டும். அதைக்கண்டுபிடித்தால் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறேன் என்பதாக வைத்துக்கொள்ளுங்கள் அப்போது என் பிரசங்கத்தில் கவனம் வையாமல் வைரத்தையே நினைத்துக்கொண்டிருப்பீர்கள். மிகுந்த வாஞ்சையோடு அதை இந்த அறையில் தேடுவீர்கள் அல்லவா! போலீஸ் சேவகரும் அறையை விட்டு உங்களை அப்புறப்படுத்த இயலாதிருப்பார்கள் என்று நம்புகிறேன். இருபதினாயிரம் பவுண் விலைபெற்ற

வைர ரத்தினத்தைக் கண்டுபிடிக்கும் வாஞ்சை எவ்வளவு பெரிதாயிருக்கும்! அதைக்கண்டுபிடிக்கக் கூடுமானால் ஒரே தடவையில் அது உங்கள் வறுமையை நீக்கிவிடும். உங்கள் வாழ்நாளெல்லாம் செல்வராயிருப்பீர்கள். ஆ! எவ்வளவு சொல்லக்கூடாத வாஞ்சையுள்ளவர்களாயிருப்பீர்கள்! இந்த வகையாய் மனுஷர் கிறிஸ்துவைத் தேடும்படி பண்ண கடவுள் எனக்கு வரம் தந்தாலோ என்று விரும்புகிறேன். ஒரு வைர ரத்தினத்திலும் அதிக விலைபெற்ற ஒன்றை நான் உங்களுக்குக் காட்டுகிறேன். அது இரட்சிப்பு அல்லது நித்திய ஜீவன் அது உலகத்திலுள்ள எல்லா வைர ரத்தினங்களிலும் அதிகமான விலையுள்ளதல்லவோ? காபிரியேல் தனது செட்டைகளை வீசி, தேவனுடைய சிங்காசன சமீபத்தைவிட்டு இவ்விடத்திற்கு வந்து, உங்களுக்குப் பிரியமான வரத்தைக் கேளுங்கள் என்று உங்களுக்குச் சொல்ல ஏகோவா என்னை அனுப்பினார்; உங்களுக்கு விருப்பமான எதுவும் கிடைக்கும்; ஆனால் ஒன்று மாத்திரம் கிடைக்குமென்று சொல்லுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். எதை விரும்புவீர்கள்? இங்கிலாந்தின் செல்வத்தையோ? அல்லது பூமியின் முழு செல்வத்தையுமோ? அவைகளையா தெரிந்து கொள்வீர்கள்? பதினாயிரம் முறையும் இல்லையென்கிறேன். ஜீவன், நித்திய ஜீவன் என்றே நீங்கள் எல்லாரும் கூப்பிடுவீர்கள்.

ஜீவனைப்போல மனுஷர் விலைமதிக்கிற வேறொன்றும் இல்லை. அமிழ்ந்து போகிற ஒரு கப்பலிலே ஒரு மனுஷன் இருக்கிறான், அவன் பத்து லட்சம் பவுண் வைத்திருக்கிறான். தன் சரீரத்தின் ஜீவனை ரட்சிக்கும்படி அந்தப் பத்து லட்சம் பவுனையும் கொடுக்க மனதாய் இருப்பான்;

ஒரு நிமிஷத்திலே கொடுப்பான். ''தன் ஜீவனுக்குப் பதிலாக தனக்கு உண்டான எல்லாவற்றையும் மனுஷன் கொடுத்துவிடுவான்''. இந்த மண்டபத்துக்கு வர சில ஜனங்கள் பயந்தார்கள் என்று நான் அறிகிறேன்; ஏனெனில் வீட்டில் நெருப்புப் பற்றிவிட்டது என்ற சத்தம் மெய்யானாலும் பொய்யானாலும் சிலவேளை உண்டாகக் கூடும். தாங்கள் அவ்வேளை திகிலினால் ஜீவனை இழந்து போகக்கூடும் என்று பயந்தார்களாம். இந்த மண்டபத்துக்கு இருபது வாசல்கள் இருக்கின்றன. இந்தக் கட்டிடத்தைவிட்டு வெளிப்படுவதிலும் பார்க்க அதிக லேசாய் வெளிப்படக்கூடிய வேறொரு கட்டிடத்தை நான் ஒரு போதும் கண்டதே இல்லை. ஆனாலும் நரகத்தை விட்டு வெளிப்பட ஒரு வாசலும் இல்லை என்பதை மனுஷர் மறந்து நித்திரை கொள்ளுகிறதாய்க் காணப்படுகிறது. அவர்கள் அதில் பிரவேசித்தால் காலா காலமும் அங்கே இருக்க வேண்டும். லட்சா லட்சம் வருஷங்கள் கடந்து போனாலும் நரகத்தை விட்டு வெளிப்பட வழி இல்லை. வாசல் இல்லையே!

நான் என்னத்தைக் காண விரும்புகிறேன்? கிறிஸ்தவர்களாக வர மனதார விரும்புகிற மனுஷரையே; அதைப் பற்றிப் பயங்கரமான வாஞ்சையுள்ளவர்களையே காண விரும்புகிறேன். நீ கிறிஸ்தவனாக விரும்புகிறாயோ என்ற கேள்விக்கு ஒருவன், நல்லது அப்படியானால் என்ன? ஆகட்டும் என்கிறான். அப்படிச் சொல்லும் என் சிநேகிதனே, நீ பேசும் விதம் மாறுமுன்னே நீ தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பாய் என்று நான் நம்பவில்லை. நான் இரட்சிக்கப்படவேண்டும் என்று முழு இருதயத்தோடு கூப்பிடுகிற மனுஷனே இரட்சிக்கப்படுவான். பெந்தேகொஸ்து

நாளிலே மனுஷரே! சகோதரரே! நாங்கள் என்ன செய்ய வேண்டும்! என்ற சத்தமே இருந்தது. அந்த மனுஷர் வாஞ்சையுள்ளவர்களாய் இருந்தார்கள்; அவ்விடத்திலே இயேசுக்கிறிஸ்துவைக் கண்டுபிடித்தார்கள். மூவாயிரம் பேர் தங்கள் முழு இருதயத்தோடும் தேடி அவரைக் கண்டு பிடித்தார்கள். செல்வத்தைத் தேடுவதுபோல் மனுஷர் கிறிஸ்துவைத் தேடினால் அவரைச் சீக்கிரம் கண்டுபிடிப்பார்கள். ஆ! மனுஷர் கிறிஸ்துவை எப்பொழுது தேடுவார்கள்? அவர்கள் கனத்தையாவது செல்வத்தையாவது தேடுவதுபோல் எப்பொழுது தேடுவார்கள்? ஆப்பிரிக்கா மேல்கரையில் யுத்தம் உண்டானபொழுது அது மிகவும் சுகவீனமான தேசமாய் இருந்தது. அங்கே போகிற அநேகர் ஒருக்காலும் திரும்பிவரமாட்டார்கள் என்று அறிந்தாலும், மனுஷர் நூற்றுக்கணக்காயும் ஆயிரக்கணக்காயும் அங்கே போக விரும்பினார்கள். ஏன் விரும்பினார்கள்? அவர்கள் செல்வத்தையும் செல்வத்தினால் கனத்தையும் அடைய விரும்பினார்கள். கனத்தையும் செல்வத்தையும் தேடுவதுபோல் மனுஷர் தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுவதைக் காணவே விரும்புகிறோம்.

நான் முன் சொன்னது போல் ஜீவனுக்கு மோசம் வந்தால்மனுஷர் எவ்வளவு பயங்கரமான வாஞ்சைகொள்ளுகிறார்கள், அதுசரி, அதைப்பற்றி ஐயம் இல்லை. தங்கள் ஆத்தும இரட்சிப்பைப் பற்றி மனுஷர் ஏன் அவ்வளவு வாஞ்சை கொள்ளாதிருக்க வேண்டும்? ஏன் இங்கே இருக்கிற ஒவ்வொரு மனுஷனும் ஒவ்வொரு ஸ்திரீயும் அருண்டெழும்பி தங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரைத் தேடாதிருக்கிறார்கள்? நீங்கள் அப்படித்தேடினால் தம்மைக் கண்டு பிடிப்பீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒரு கப்பல் உடைந்து சமுத்திரத்திலே அமிழ ஏதுவாய் இருந்தது. எல்லாரையும் இரட்சிக்கத்தக்க அவ்வளவு ஜீவவள்ளங்கள் என்னும் படவுகள் அங்கே இருக்கவில்லை. இருந்த வள்ளங்களில் ஏறிச் சிலர் தப்பிவிட்டார்கள். கப்பல் அமிழ்ந்தபோது அந்த வள்ளங்களில் ஒன்று அதற்குச் சமீபமாய் இருந்தது கப்பல் அமிழ்ந்துகிறஅந்தச் சமயத்திலே ஒருவன் அதில் நின்று நீங்கி அந்த வள்ளத்தைக் கிட்டிப் போனான். அவனையும் ஏற்ற அங்கே இடம் இருக்கவில்லை. அதில் இருந்தவர்கள் உன்னை ஏற்றமாட்டோம் என்று சொன்னார்கள். அவர்கள் மறுத்தபொழுது அவன் தனது வலது கையை உயர்த்தி வள்ளத்தில் பிடித்தான். அவர்கள் ஒரு வாளை எடுத்து பிடித்த கைவிரல்கள் அறவெட்டினார்கள். தன் வலதுகை அறுந்தபோதும்அவன் தன் ஜீவனை இரட்சிக்க வாஞ்சை உள்ளவன் ஆனதினால், இடது கையினால் வள்ளத்தைப் பிடித்தான். அந்தக் கைவிரல்களும் அற வெட்டினார்கள். அப்போது அந்த மனுஷன் நீந்தி தன் பற்களினால் வள்ளத்தைப் பிடித்தான். அப்போது அவர்கள் அவனில் இரங்கி முன் செய்ததைப் பற்றி துக்கித்தார்கள். அவன் கழுத்தை வெட்டமனம் இல்லாமல் அவனை வள்ளத்தில் ஏற்றினார்கள் அவன் தன் ஜீவனை இரட்சித்துக்கொண்டான் எப்படி? அவன்வாஞ்சை உள்ளவனாய் இருந்ததினால் அல்லவோ? அந்த மனுஷன் தன் ஜீவனை இரட்சிக்கத் தேடினதுபோல நீங்கள் உங்கள் ஆத்துமாவை இரட்சிக்கத் தேடாமல் இருப்பீர்களோ? இதிலும் உத்தமமான காலம் வருமா? மயிர்கள் நரைத்து கண்கள் மங்கி சவக்குழிக்குத் தீவரித்து ஓடுகிற அந்த வயோதிபனுக்கு இதிலும் நல்ல காலம் வருமா? இது அல்லவா மிக முதல் தரமான காலம்? "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத்தேடு; நடுவயதான ஒரு மனுஷன் இருக்கிறான். அவனுக்கும் தேவனுடைய இராஜ்

யத்தைத் தேட இது முதல்தரமான கா லம் அல்லவா? இதிலும் முதல்தரமான காலம் உனக்குக் கிடைக்குமோ உன்னை இரட்சிக்கக் கிறிஸ்து இப்போது விரும்புவதிலும் அதிகமாய் எப்போதாவது விரும்புவாரோ? ''வாருங்கள், எல்லாம் இப்பொழுது ஆயத்தமாய் இருக்கிறது'' என்று அவர் சொல்லுகிறுரே. ஆயத்தமாகப் போகிறதென்று சொல்லவில்லை; இப்பொழுது ஆயத்தமாய் இருக்கிறது என்கிறுர். அங்கே ஒரு வாலிபன் இருக்கிறுன். என் சிநேகிதனே! நீ தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுகிறதற்கு இது உத்தமமான காலம் அல்லவோ? கர்த்தரைத் தேட இப்போது இங்கே அவரைக் கண்டுபிடிப்பாய். நாளேக்கு இங்கே அவரைக் கண்டுபிடிப்பேன் என்று நீ சொல்லக் கூடுமோ? இம்மண்டபத்தில் இருக்கும் யார் சொல்லக் கூடும்? வாலிபனே! வரும்நாள் என்ன கொண்டுவரும் என்று நீ அறியாய். போன இராமுதல் நாம் இங்கே கூடினதுவரையில் நாற்பத்துமூவாயிரம் ஆத்துமாக்கள் இம்மை நீங்கி மறுமைக்குப் போய்விட்டார்கள் என்று அறிவாயோ? ஒவ்வொரு நொடியில் எத்தனை ஆத்துமாக்கள் மறுமைக்குப் போகிறுர்கள் என்பது அறிவாயோ? நீ தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுவதற்கு இது உனக்கு உசிதமான காலம் அல்லவா?

சிறு பிள்ளையே! கர்த்தர் உன்னையும் அழைக்கிறுர். தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுங்கள், அவரை கண்டு பிடிக்கத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள் என்கிறுர்.

தேவன் செய்து வருகிற இரட்சிப்பின் வேலையைக் குறித்த நற்செய்திகள் உலகத்தின் சகல இடங்களில் நின்றும் வருகின்றன. இந்தியாவினின்று வந்த கடைசிசெய்தி அங்கே மகிமையான கிரியை நடக்கிறதென்று சொல்லு

கிறது. ஜப்பானில் இருந்தும் மறுதேசங்களில் இருந்தும் வந்த கடைசி பத்திரிகை தேவன் அங்கே தமது ஆவியை ஊற்றுகிறார் என்றே சொல்லுகிறது. சில நாட்களுக்குமுன் 50,000 குடி ஜனங்களுள்ள ஒரு பட்டணத்திலிருந்து இரண்டு மனுஷர் வந்து எங்களை அங்கே வரச்சொன்னார் கள். நாங்கள் போகக்கூடியதாய் இருக்கவில்லை. நீங்களே போய் வேலை செய்யுங்கள் என்றோம் அவர்களில் ஒருவன் விசாரணைக்காரரர் அறைக்கு 16 பேர் இன்று வந்தார்கள் என்று எங்களுக்குச் சொன்னான். தேவன் தமது ஆவியை எவ்விடத்திலும் ஊற்றுகிறார். எவ்விடத்திலும் மனுஷர் அரிவாள்களை எடுத்து அரியை அறுத்து எஜமானின் பாதத்திலே வைக்கிறார்கள். எங்கள் பிதாக்கள் விரும்பிப் பிரார்த்தித்த நாட்களுக்கு நாங்கள் வந்திருக்கிறோம் என்று நம்புகிறேன். வானம் திறக்கப்பட தேவனுடைய ஆவி மனுபுத்திரரிலே இறங்குகிறார்.

இந்த எழுப்புதலான காலம் கர்த்தரைத் தேடுவதற்கு நல்ல சமயம். உங்களுக்கு இதிலும் நல்லகாலம் வருமோ? ஜனங்கள் ஜெபம்பண்ணுகிறார்கள் என்பதே ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும் வரும் செய்தி. இப்போது தேவ னிடம் சொல்லும் ஜெபம் அத்தனையாய் எப்போதாவது சென்றதோ? இங்கே மாத்திரம் அல்ல, உலகத்தைச் சுற்றி எங்கும் தேவனுடைய ஜனங்கள் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக மிகுதியான வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். தேவன் வேலையாய் இருக்கவில்லையா? தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுவதற்கு இதிலும் உத் தமமான காலம் இருக்குமா? இவ்வளவு பெரிய எழுப்பு தல் இருக்கிறதற்கு எவ்வளவோ காத்திருக்கிறார்கள்! தேவனுடைய சபை ஒரே மொழியாய் நிற்கிறது; ஐக்கி யம் உண்டாயிருக்கிறது. இதிலும் உத்தமமான காலம்

வருமா? இங்கேயும் ஜெபம் பண்ணுகிறவர்களை நினைத்துப் பாருங்கள். இப்போது இங்கே உங்களுக்காகப் பிரார்த்தனை பண்ணுகிற அவ்வளவு பேர் எப்போதாவது உங்களுக்காகப் பிரார்த்தனை பண்ணினார்கள் என்று நினைக்கிறீர்களா? இந்தக் கூட்டத்திலுள்ள ஜனங்களைச் சுற்றிப் பாருங்கள். இந்தக் கிறிஸ்தவர்கள் எல்லாரும் இப்பொழுது என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள்? அவர்கள் தேவனைப் பார்த்து உள்ளத்தில் ஜெபம் பண்ணுகிறார்கள். அவர்கள் ஜெபம் பண்ணுகிறார்கள் என்று எனக்குத் தெரிகிறது. அங்கே ஒரு வாலிபன் தனது மாதாவண்டை உட்கார்ந்திருக்கிறான். அம்மாதா, கர்த்தாவே! இப்போது என் மகனை இரட்சியும் என்று இடைவிடாமல் பிரார்த்திக்கிறாள், உண்மை அவன் இருதயத்தில் இறங்குவதாக. ''கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்''.

நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். இப்போது இங்கே கர்த்தரைக் கண்டுபிடிக்கலாம் என்று நீங்கள் நம்புகிறீர்களா? என் அருகாக இருக்கும் குருமாரிடம் கேட்கிறேன். நீங்கள் நம்புகிறீர்களா? ''ஆம்'' இங்கே ஒருவர் ஆம் என்று சொல்லுகிறார். மனந்திரும்பாத சிநேகிதரே நீங்கள் நம்புகிறீர்களா? 'ஆம்'' இங்கே இன்னும் ஒருவர் ஆம் என்கிறார். நல்லது, இப்படி அவரைக் கண்டுபிடிக்கலாமானால் யாராவது அவரைத் தேடாமல் இந்த அறையை விட்டுப் போவது பெரிய பைத்தியம் அல்லவா? அவரைக் கண்டுபிடிக்கலாமானால் ஏன் அவரைத் தேடாமல் விடுவீர்கள்? வாலிப ஸ்திரீயே! ஏன் அவரை உன் முழு இருதயத்தோடும் தேடாமல் இருப்பாய்? வாலிபனே! ஏன் உன் முழு இருதயத்தோடும் இப்போது கிறிஸ்துவைத் தேடாமல் விடுவாய்? நான் இரட்சிக்

கப்படவேண்டும் என்று ஏன் சொல்லாதிருப்பாய்? இரட்சிப்பு என்னும் பெரிய கவலைபோல் விசேஷமானது ஒன்றும் இல்லையே.

நீ முழு உலகத்தையும் ஆதாயம் பண்ணிக்கொண்டாய் என்று வைத்துக்கொள். அதை என்ன செய்வாய்? அது கிறிஸ்து அளவுவிலைபெறுமோ? மற்றெல்லாக் காரியத்தையும் புறம்பே வை; கிறிஸ்துவைத் தேடி கண்டுபிடிக்கு மட்டும் ஆறுதலடையேன் என்று தீர்மானி. அவரைத் தேடத் தீர்மானித்த எவனும் அவரைச் சீக்கிரம்கண்டுபிடியாதிருந்ததை நான் ஒருபோதும் கண்டதே இல்லை. டப்ளின் நகரத்தில் ஒரு வாலிபன் கிறிஸ்துவைக் கண்டுபிடித்தான். அவன் வீட்டுக்குப்போய் அங்கே அவ்வளவு தெய்வபக்தனும் கிறிஸ்துவின் சாயலுள்ளவனுமாய் ஜீவித்தபடியால், இம்மாறுதலை உண்டாக்கினது என்ன என்று அவனுடைய இரண்டு சகோதரர் விளங்கிச் கொள்ளக் கூடாதிருந்தார்கள். அதைவிளங்கிக் கொள்ளவேண்டும் என்று அவர்கள் டப்ளின் நகரத்தை விட்டு எங்களுடன் செப்பீல்ட் நகரத்துக்கு வந்தார்கள்; அங்கே அவர்கள் கிறிஸ்துவைக் கண்டு பிடித்தார்கள்; அவர்கள் வாஞ்சையுள்ளவர்களாய் இருந்தார்கள். தேவனுக்கு ஸ்தோத்திரம்! நீங்களும் இப்போது இங்கே கிறிஸ்துவைக் கண்டுபிடிக்கலாம். உங்கள் முழு இருதயத்தோடும் கிறிஸ்துவைத் தேடுவீர்களாகில் உங்களில் ஒவ்வொருவரும் இப்பொழுது அவரைக் கண்டு பிடிப்பீர்கள் என்று உறுதியாய் நம்புகிறேன். ''என்னைக்கூப்பிடுங்கள்'' என்று அவர் சொல்லுகிறார். ஒருவன் தன் முழு இருதயத்தோடும் கிறிஸ்துவைக் கூப்பிட்டும் அவர் உத்தாரம் சொல்லாதிருந்ததை எப்போதாவது கண்டிருக்கிறீர்களா? சிலுவையில் இருந்த அந்தக் கள்

ளனைப் பாருங்கள். ஒருவேளை அவனுடைய தாய் ஜெபம் பண்ணும் ஸ்திரீ; அவள் அவனுக்கு ஏசா. 53-ம் அதிகாரத்தைப் படிப்பித்திருந்தாள் ''பிதாவே! அவர்களுக்கு மன்னியும்'' என்றஅதிசயமான ஜெபத்தை இயேசு ஜெபித்ததை அவன் கேட்டான். அவன் சிலுவையில் தொங்குகையில் ''கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாய் இருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்'' என்றவசனம் அவன் மனதில் வந்தது, அந்த உண்மை அவன்மனதில் பிரகாசமாய் ஒளி கொண்டது: அவர் சமீபமாய் இருக்கிறார், நான் அவரை கூப்பிடுவேன் என்று சிந்தித்து ''ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்பொழுது அடியேனை நினைத்தருளும்'' என்றான். அவன் அப்படிச் சொன்னவுடனே அவர் ''இன்றைக்கு நீ என்னுடனே பரதீசில் இருப்பாய்'' என்றார். அதுதான் அவனுக்கு காலமும்சமயமுமாய் இருந்தது. என் சிநேகிதரே, இது உங்களுக்குக் காலம். அவனவனுக்கு ஒவ்வொரு காலம் உண்டென்று நம்புகிறேன். இந்நேரந்தான் உங்களுக்குக் காலம், இப்பொழுது ஏன் அவரைக் கூப்பிடாதிருப்பீர்கள்? அந்த ஏழைக் கள்ளனைப்போல் ஆண்டவரே, என்னை நினைத்தருளும் என்று கூப்பிடுங்கள். அவனுக்குப் பொன்னான சமயம் அதுவே. ஆண்டவர் அவ்வாக்கைக்கேட்டு அவனுக்கு உத்தரம் அருளினார்; அவனை இரட்சித்தார். அவர் சமீபமாய் இருந்தபோது பர்திமேயு அவரைக் கூப்பிடவில்லையா? கடைசியாய் எரிகோவை விட்டு இயேசு போனார் அவன் தாவீதின் குமாரனே! என்மேல் இரங்கும் என்று கூப்பிடடான். ஆண்டவர் அவன் ஜெபத்தைக் கேட்டு அவனுக்குப்பார்வை கொடுக்கவில்லையா? சகேயு அவரைக் கூப்பிட்டது நலமாய் இருந்தது. அப்படி அல்ல, அவரை சகேயு

வைக் கூப்பிட்டார்; அவர் கூப்பிட அவன் வந்தது நலமாய் இருந்தது என்கிறேன். இவ்விடத்திலும் பலரைக் கர்த்தர் கூப்பிடுவாராக. ஆண்டவரே! இங்கே இருக்கிறேன், நீர் என்னைக் கூப்பிட்டீர், நான் வருகிறேன் என்று சொல்வீர்களாக. கர்த்தர் ஒரு ஏழைப் பாவியைக் கூப்பிட்ட பின்பு அவனைப் புறம்பே தள்ளிப்போடுவார் என்று நினைக்கிறீர்களா? இல்லையே! ''என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருபொழுதும் தள்ளேன்'' என்ற அவருடைய வாக்கு எப்பொழுதும் உறுதியாய் இருக்கிறது,

முன் ஒரு மனிதனைப் பற்றிச் சொன்னேன். அவன் தான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று எண்ணினதாகக் கண்டபோது, சந்தோஷப்பட்டேன். மனுஷர் தங்களிலே யாதொரு நன்மையைக் காணுதிருந்தால் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்துக்குச் சமீபமாய் இருக்கிறார்கள். புல்டன் பட்டணத்தில் வைத்த ஜெபக்கூட்டத்துக்கு ஒரு மனுஷன் வந்து தன் சரித்திரத்தைச் சொன்னான். அவன் சொன்னது: என் மாதா எனக்காக ஜெபம்பண்ணுகிறவளாய் இருந்தாள்; நானோ சிந்தனை இல்லாமல் நினைத்தபடி நடக்கிறகெட்ட புத்திரனாய் இருந்தேன். என் மாதா இறந்தபின்பு என் மனதில் சஞ்சலம் உண்டாகத்துவங்கினது; நான் பழைய கூட்டத்தை விட்டுப் புதிய கூட்டத்தைச் சேர வேண்டும் என்று விரும்பினேன் இரகசிய சங்கங்கள் என்று சொல்லப்படும் ஒரு கூட்டத்தில் சேர விரும்பி ஒரு வகை சங்கத்தாரிடம் போனேன். அவர்கள் என்னைக்குறித்து அங்கும் இங்கும் விசாரணை செய்து நான் ஒரு குடிவெறியனான கப்பல்காரன்என்று அறிந்து, என்னை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று விட்டார்கள். நான் வேறொரு சங்கத்தாரிடம் போனேன். என்னிடம் ஒரு சிபா

ரிசுப் பத்திரமும் இருக்கவில்லை; என் உடையும் உதவாது என்று அவர்கள் அறிந்து என்னை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்றார்கள். நான் ஒரு நாள் தெருவிலே போகிற பொழுது இந்த ஜெபக்கூட்டத்தைப்பற்றிய விளம்பரம் ஒன்றையாரோ எனக்குக் கொடுத்தார்கள்; நான் கூட்டத்துக்கு வந்தேன். பாவிகளை ரட்சிக்கக் கிறிஸ்து வந்தார் என்று சொல்லக்கேட்டேன். அவரை நம்பினேன், அவர் சொல்லின்படி அவரைப் பிடித்துக்கொண்டேன். சிபாரிசுப் பத்திரம் இல்லாமல் கிறிஸ்துவிடம் வந்தேன்; கிறிஸ்து என்னை ஏற்றுக்கொண்டார் என்றான்.

என் சிநேகிதரே! கிறிஸ்து அப்படியே செய்கிறவர். ஒரு சிபாரிசுப்பத்திரம் இல்லாதவனும் தனக்காக ஒரு வார்த்தையும் பேச ஆளில்லாதவனும் யாராவது இங்கே இருக்கிறீர்களா? நான் உங்களுக்கு நல்லசெய்தி சொல்லுகிறேன். தேவகுமாரனை நோக்கிக் கூப்பிடுங்கள்; அவர் உங்கள்ஜெபத்தைக் கேட்பார். இப்போதே அவரைக் கூப்பிடுங்கள்.

அன்றைக்கு போதகர்மார் கூட்டத்துக்குப்போனேன்; ஒரு பக்கத்தில் ஒருஅம்மாள் தனித்திருந்தாள். கூட்டம் முடிந்து நான் வெளியே போகும்போது அவள் என்னிடம் வந்து, மூடி ஐயா! நீர் என்னை அறிவீரோ என்றாள்: ஆம் நான் உன்னை அறிவேன் என்று சொன்னேன். நான்அவளை எங்கே கண்டேன்? ஸ்காட்லாந்தின் வட பாகத்துக்குப் போகப் புறப்படுகையில் அவ்விடம் ஒரு அம்மாளைச் சந்தித்தோம். அவள் லந்தோனை விட்டு அவ்வளவு தூரத்துக்கு தனது இரண்டுகுமாரர்களையும் கூட்டிக்கொண்டு அவர்களின் மனந்திரும்புதலைத் தேடிவந்திருந்தாள். அவர்கள் பதினெட்டு வயதுள்ள இரட்டைப்பிள்ளைகள். அந்தமாதா

வின் இருதயம் அவர்கள் இரட்சிப்பைப்பற்றி வாஞ்சித்துக் கொண்டிருந்தது.

நாம் வைத்திருந்த ஒரு கூட்டத்தில் அவள் மக்களில் ஒருவன் கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புவித்தான். தனது இரண்டு புத்திரரும் கிறிஸ்துவைத் தேடி அவரைக் கண்டு பிடித்துச் சமாதானம் அடைந்தார்கள் என்று சந்தோஷப் பட்டுக்கொண்டு அந்த மாதா லந்தோனுக்குத் திரும்பினுள் தன் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தை தேடி இவ்வளவு தூரம் லந்தோனில் இருந்து அவ்விடத்துக்குப் போனுள். அந்த மாதா மதிகெட்டவள் என்று சிலர் சொல்லுவார்கள். அவள் சொன்னது, டண்டீயில் கிறிஸ்துவைக் கண்டு பிடித்த எனது மகன் மூன்று கிழமைக்கு முன் மரித்து விட்டான். அவள் என்னுடன் கை குலுக்கி கூட்டத்தை விட்டுப் போகிறபோது அந்தமாதா தன்மகனை டண்டீக்கு கொண்டுபோனது நல்ல காரியம் அல்லவோ என்று என் உள்ளத்தில் சொல்லிக்கொண்டேன். என் சிநேகிதரே! நமது பிள்ளைகள் சிநேகிதர் இவர்களின் இரட்சிப்பைக் குறித்து வாஞ்சையாய் இருக்கக்கடவோம். அந்த வாலிப ஸ்திரீயை எச்சரி. மாதாவே! உன்னுடைய அந்த மகளுடன் பேசு; பிதாவே! உன்னுடைய அந்தப் பிள்ளையுடன் பேசு; மனைவியே! உன்னுடைய மனந்திரும்பாத புருஷனுடன் பேசு; புருஷனே! உன் மனம் திரும்பாத மனைவியுடன் சம்பாஷி. எனக்காகக் கவலைப்படுவார் இல்லையே என்ற உணர்ச்சியோடு ஒருவனுவது இந்த அறையை விட்டுப் போகாதிருங்கள். ஒரு மாதா தன் பிள்ளைகளுக்காக ஆவல் கொள்ளும்போது அவர்களும் ஆவல் கொள்ளாததாய் இருக்க நான் கண்டதில்லை. அநேக பாவிகள் தங்கள் முழு இருதயத்தோடு தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடுவார்களாக.

பிரசங்கத்தை முடிக்கு முன்னே இன்னும் ஒரு முறை உங்களிடம் கேட்கிறேன்; என்ன செய்யப் போகிறீர்கள்? கர்த்தர் சமீபமாய் இருந்தால் அவரைக் கூப்பிடமாட்டீர் களா? உனக்கு அடுத்திருக்கிற அந்த நிந்தனைக்காரன் நீ தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசியாமல் தடுக்க இடம் கொடாதே. அந்த மனுஷனுடைய முகத்தில் ஒரு நிந்தனை யான சிரிப்பு காணப்படுகிறது. ஒரு வேளை அவன் நான் இப்பொழுது சொல்வதையும் அவமதிக்கிறான். அவனைக் கவனியாதே, அவன் யோசனையைக் கேளாதே, தேவ னையே நோக்கிப்பார், இரட்சிக்கும்படி அவரைக்கேள். உங் கள் ஒவ்வொருவருக்கும் உண்மையான சிநேகிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் புத்தியைக் கேட்பீர்களாகில் இப்பொழுதே ரட்சிப்பைத் தேடுங்கள் என்று அவர்கள் உங் களுக்குச் சொல்லுவார்கள். நான் தேவனுடைய இராஜ் யத்தை இப்போதே தேடுவது நல்லதல்லவோ என்று உனக்கு அருகாக இருக்கும் குருவினிடம் கேள். அவர் உனக்கு என்ன சொல்லுகிறார்? ஒரு நிமிஷமும் தாமதி யாதே என்று அவர் சொல்லவில்லையா? நாளைக்கு தேவ னுடைய இராஜ்யத்தைத் தேடுகிறது நல்லதோ என்று உனக்குப் பக்கத்தில் இருக்கிற அந்தத் தெய்வபக்தியுள்ள மாதாவிடம் கேள். ஒரு கிழமை கடத்திவை அல்லது ஒரு மாதம் கடத்திவை என்று அவள் சொல்லுகிறாளா? அந்த மாதா அப்படிச் சொல்லுவாள் என்று நினைக்கிறாயா? ஒரு கிறிஸ்தவளான மாதாவும் அப்படிக் சொல்லமாட்டாள். நீ கிறிஸ்தவன் ஆகிறதைக் கடத்திவை என்றுபுத்தி சொல் லத்தக்க ஒரு மனம் திரும்பாத பாவி இருக்கிறான் என்று நான் நம்பவில்லை. ஜெபத்தியானமுள்ள உன்னுடைய அந்தச் சகோதரியிடம் கேள்; ஜெபத்தியானமுள்ள அந்தச் சகோதரனிடம் கேள்;

உனக்கு அருகாக உன் சிநேகிதன் ஒருவன் இங்கே இருந்தால் அவனிடம் கேள். இதல்லவோ நீசெய்யக்கூடிய உத்தம காரியம் என்று விசாரி. வானத்தை அண்ணாந்து பார்த்துத் தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறவரை நோக்கிக்கூப்பிடு. உன் பிதாவைப் பார்க்கிலும் உன்மாதாவைப்பார்க்கிலும் பூமியிலுள்ள மற்றெவரைப்பார்க்கிலும் அதிகமாய் அவர் உன்னை நேசிக்கிறார். தம்மைத்தாமே உனக்காகக் கொடுத்து அத்தனையாய் உன்னை நேசிக்கிறார். நான் என்ன செய்ய நீர் விரும்புகிறீர் என்று அவரிடம் கேள். "முதல் தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுங்கள்" என்று அவருடைய சிங்காசனத்தில் இருந்துவரும் சத்தத்திற்குச் செவிகொடுங்கள். பாதாளத்தில் இருப்பவர்களைக் கூப்பிட்டு நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேளுங்கள். என்ன சொல்லுவார்கள்? எனக்கு ஐந்து பேர் சகோதரர் உண்டு, அவர்களும் இந்த இடத்துக்கு வராதபடி அவர்களுக்குச் சாட்சியாய் அறிவிக்கும் பொருட்டு ஒருவனை அனுப்பும் என்று சொல்லுகிறார்கள் அல்லவா? "முதல் தேவனுடைய இராஜ்யத்தை தேடுங்கள்" என்று வானமும் பூமியும் பாதாளமும் ஒரு மொழியாய்ச் சொல்லவில்லையா? தாமதியாதே அவர் சமீபமாய் இருக்கையில் அவரை நோக்கிக்கூப்பிடு. உண்மையான வாஞ்சையோடு அவரைக் கூப்பிடுவாயாகில் அவர் உத்தரம் தருவார்.

உன் கூப்பிடுதல் பிந்திப் போகக்கூடும். பேழை கட்டுகிற பொழுது கூப்பிடாதவர்கள் ஜலப்பிரளயம் வந்தபொழுது கூப்பிட்டார்கள் என்று நம்புகிறேன். ஆனால் அவர்கள் கூப்பிடுதலுக்கு உத்தரம் இல்லை. லோத்து சோதோமைவிட்டுப் புறப்பட்டபின்பு, சோதோமியர் தேவனைக் கூப்பிட்டார்கள் என்பதைப்பற்றி நான் ஐயப்

படவில்லை; அவர்கள் ஜெபவேளை தப்பிப்போனது தேவனுடைய நடுத்தீர்ப்பு பூமியைவிட்டு அவர்களைத் துடைத்துப்போட்டது. நீங்கள் நாளைக்குக் கூப்பிடலாம் என்று சொல்லுகிற ஒரு வசனத்தையும் நான் இந்த வேதத்தில் காணவில்லை. அப்படி நான் சொன்னால் நான் குற்றவாளி. "இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்". அந்த எருசலேமியருடன் கிறிஸ்து இருந்தபொழுது அவர்களுக்கு பொன்போன்ற சமயம் இருந்தது. எருசலேமைக் குறித்துத் தேவகுமாரன் புலம்பினதைக் காண்கிறோம். அப்பட்டணத்தைப் பற்றிய துக்கத்தினால் அவருடைய இருதயம் கரைந்துபோயிற்று. "எருசலேமே! எருசலேமே! தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாய் இருந்தேன். உங்களுக்கோ மனது இல்லாமல் போயிற்று" என்று கண்ணீர் விட்டாரே! நாற்பது வருஷத்துக்கு அப்பால் தீத்து என்பவன் தனது சேனையோடு வருகிறதையும், பட்டணத்தை முற்றிக்கை இடுகிறதையும் அவர் அந்நேரம் பார்க்கக்கூடியவராய் இருந்தார். யூதர் அப்பொழுது தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். காலம் தப்பிப்போயிற்று, பதினொரு லட்சம் ஜனங்கள் மாண்டார்கள். இப்பொழுது இரக்கத்துக்கான காலம். நான் இப்பொழுது பேசுவதைக் கேட்கும் உங்களில் சிலருக்கு கிருபையின் நாட்கள் ஒருவேளை அதிகமாய் இராது. உங்களில் சிலர் சீக்கிரம் எடுத்துக்கொள்ளப்படக்கூடும். இங்கே இருக்கும் உங்களில் சிலர் ஒருவேளை இன்னும் ஒரு பிரசங்கத்தைக் கேட்கமாட்டீர்கள்; உங்களில் சிலர் இப்பொழுது கடைசியான பிரசங்கத்தைக் கேட்கி

நீர்கள். என் சிநேசிதனே! இப்போது புத்தியுள்ளவனுகி இப்பொழுதே தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடுவேன் என்றுதீர்மானி. "இதோ இப்பொழுதே அனுக்கிரககாலம் இப்பொழுதே இரட்சண்ய நாள்." "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிற நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங் கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கிறிஸ்து உங்களை அழைக்கிருர். ஆ! நாம் எல்லாரும் இப் பொழுதே கிறிஸ்துவிடம் இளைப்பாறுதலைக் கண்டடை வோமாக; எந்தக் காரியமாவது தடைசெய்ய விடாதிருங் கள். இந்த நாள் இந்தமணித்தியாலமே தீர்மானம் செய் யுங்கள். நித்தியத்துக்கான இக்கவலையை நிதானம் பண் ணுமல் இவ்வறையை விட்டுப் புறப்படோம் என்று துணிந்து கொள்ளுங்கள்.

IV

போக்குச்சொல்லத் தொடங்கிஞர்கள்

லூக்கா 14 : 18–20.

"அவர்கள் எல்லாரும் போக்குச் சொல்லத் தொடங்கிஞர்கள். ஒருவன்: ஒரு வயலைக் கொண்டேன், நான் அகத்தியமாய்ப்போய் அதைப் பார்க்க வேண்டும், என்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்ருன். வேருருவன்: ஐந்து ஏர்மாடு கொண்டேன்; அதைச் சோதித்துப் பார்க்கப்போகிறேன், என்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்ருன். வேரு ருவன்: பெண்ணை விவாகம் பண்ணினேன், அதிஞல் நான் வரக் கூடாது என்ருன்"

ஒருவன் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் துவங்கின வுடனே ஆண்களும் பெண்களும் போக்குச் சொல்லத் துவங்குகிறார்கள். அது ஆதிதொடுத்த கதை. இரட் சிப்பை அடையாதவர்களாய் இங்கே எவர்கள் இருக்கிறார் களோ, அவர்கள் ஒவ்வொருவரும் ஒருபோக்கு வைத்தி ருக்கிறார்கள். நான்உங்கள் ஒவ்வொருவரிடத்திலும் வந்து தேவன் உங்களைச் சுவிசேஷ விருந்துக்கு அழைக்கிறாரே! நீங்கள் ஏன் அதை அங்கிகரிக்கவில்லை என்று விசாரித் தால் அதற்கு ஒரு போக்கு உங்கள் நாவு நுனியிலே இருக் கும். நீங்கள் போக்குச் சொல்ல ஆயத்தமாயில்லாவிட் டால் பிசாசு உங்களுடன் இருந்து ஒரு போக்கு உண்டு பண்ண உ த வி செய்வான். அவைகளுக்கு மறுமொழி சொல்லக் கூடுமாயின், புதிய போக்குகளை உண்டுபண்ண அவன் ஆயத்தமாயிருக்கிறான். அவன் ஆறாயிரம் வருஷப் பரீட்சையுள்ளவன், அவன் அதில் வல்லவன். உங்களுக்கு வேண்டிய அளவு போக்குகளை அவன் தரக்கூடும்.

சாட்டுகளின் நியாயம் என்னதென்று நீங்கள் அறிவீர் களோ? ஏதேனிலே அதைக்காண்பீர்கள். ஆதாம் பாவம் செய்தபொழுதுதான் ஒரு போக்குச் சொல்லப் பிரயாசப் பட்டான். "என்னுடன் இருக்கும்படி நீர் தந்த ஸ்திரீ யானவள் அந்த விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத் தாள், நான் புசித்தேன் என்றான்" "நீர் தந்த ஸ்திரீ" என்று சொல்லி குற்றத்தைத் தேவன்மேல் சுமத்த நினைத் தான்: ஏவாள் சர்ப்பத்தின்மேல் சுமத்தப்பிரயாசப்பட் டாள். அது முதல் இந்நாள்வரைக்கும் ஆண்களும் பெண்களும் ஒரே வகையாய்ப் போக்குச் சொல்ல எத்த னிக்கிறார்கள்.

லூக்கா சொல்லுகிற இந்த மனுஷர்கள் ஒரு சாவு வீட்டுக்கு அழைக்கப்படவில்லை. நோயாளிகளின் வைத்திய

சாலைக்காவது குற்றவாளிகளின் மறியல் கூடத்துக்காவது பைத்திய ஆஸ்பத்திரிக்காவது வருத்தமாய் இருக்கும் பின்னொரு இடத்திற்காவது அழைக்கப்படவில்லை. விருந்துக்கு வரும்படிக்கே அழைக்கப்பட்டார்கள். சுவிசேஷம் ஒரு விருந்தாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அது ஒரு விருந்து மாத்திரம் அல்ல, அது ஒரு இராஜ விருந்து. உயின்சர் அரமனையிலிருந்து கண்யமான ஒரு அழைப்பு உங்களுக்கு வருமாகில், அதாவது மகிமை தங்கிய இராஜாத்தி அவர்கள் தங்கள் புத்திரனுக்காகச் செய்யும் ஒரு மகா விருந்துக்கு உங்களை அழைப்பார்களானால் இங்கே இருக்கும் ஒரு மனுஷனாவது மனுஷியாவது அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கமாட்டீர்கள். அவ்வளவு கண்யம் உங்களுக்குண்டானதை எல்லாரும்அறியும்படி நீங்கள் அழைக்கப்பட்ட செய்தி பத்திரிகையில் வரும்படி விரும்புவீர்கள். அதிலும் அதிக விலையேறப்பெற்றது இங்கே இருக்கிறது. இங்கே இருப்பது இராஜாதி இராஜனும் கர்த்தாதி கர்த்தனும் தேவகுமாரனுமானவரின் அழைப்பு. சில நாள் செல்ல அவர் சபையாகிய மணவாட்டியை தமது மண அறைக்குள் ஏற்றுக்கொள்வார். ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து சமீபிக்கிறது தமது மணவாட்டிக்குரிய புதிய அரமனைகளை ஆயத்தப்படுத்தப் போயிருக்கிறார்; பழையவைகள் போதிய அளவு திறமானவைகள் அல்ல. சில நாளில் மணவாட்டியைக் கொண்டுபோகும்படி வருவார். அந்த விருந்தின் அழைப்பையே நான் இப்பொழுது உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த அழைப்பு பூமியின் ஒவ்வொரு கோணங்களுக்கும் இப்பொழுது அனுப்பப்படுகிறது. இங்கே இருக்கிற ஒருவனாவது அதற்கு அழைக்கப்படாமல் இருக்கவில்லை. ஆயி

ரத்து எண்ணூறு வருஷங்களாய் தேவ ஊழியக்காரர் மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் வனந்திரங்களையும் சமுத்திரங்களையும் கடந்து, பூமியின் ஒரு அந்தம் தொடுத்து மறு அந்தம் வரைக்கும் சென்று ஆண்களையும் பெண்களையும் சுவிசேஷ விருந்துக்கு அழைக்கிறார்கள்.

ஒரு மனுஷன் ஒரு விருந்தை ஆயத்தம்பண்ணும் பொழுது தனது சிநேகிதரை அதாவது தன்னை நேசிக்கிறவர்களை அழைக்கிறான். தேவனோ, தமது கசப்பான சத்துருக்களை அதாவது தமக்கு விரோதமாய்க் கலகஞ் செய்தவர்களை அழைக்கிறார்; என்றாலும் மனுஷர் போக்குச் சொல்லுகிறார்கள். தேவ அழைப்பு வந்த மாத்திரத்திலே போக்குச்சாக்குகளும் வந்து குவிகின்றன.

நினைத்துப் பார்த்தீர்களோ? ஒவ்வொருவன் சொல்லும் போக்குச்சாக்குகளையும் தேவன் ஏற்றுக்கொண்டால் அதாவது நீங்கள் இந்த விருந்துக்கு வராமல் விட உத்தரவு கேட்கிறபடி உத்தரவு கொடுக்கிறேன் என்று தேவன் சொல்லுவாரானால், என்ன சம்பவிக்கும் என்று அறிவீர்களோ? அடுத்த நிமிஷம் ஒரேவீச்சில் அவர்கள் எல்லாரையும் பூமியிலிருந்து அவர் சங்கரித்துப் போடவேண்டுமே.

இன்றைக்கு, இப்போதே மன நேர்மையாய் இருங்கள்; தேவன் மன நேர்மையாய்ப் பேசுகிறார். அவர் எண்ணுகிறதைத்தான் சொல்லுகிறார். அவர் மன நேர்மையாய் அழைக்கிறார். நாமும் சொல்வதை மன நேர்மையாய்ச் சொல்ல விரும்புகிறார். இந்த விருந்துக்கு நீங்கள் போக விரும்பாவிட்டால் சொல்லுங்கள். போக்குச் சாக்குகள் ஏன் சொல்லுகிறீர்கள்? அவைகள் பொய் அன்றி வேறல்ல.

இங்கே இருக்கிற யாராவது எழுந்து நியாயமான ஒரு போக்குச் சொல்லக்கூடுமோ? கூடுமானால், அந்தப் போக்கை அதாவது நீங்கள் ஏன் இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்கிற நியாயத்தைச் சொல்லுங்கள். ஒருநிமிஷம் யோசித்துப்பாருங்கள்; என்ன உண்மையான நியாயம் நீங்கள் சொல்லக்கூடும்? உண்மையான போக்கே இல்லை. ஒரு இராஜ விருந்துக்கு நாம் அழைக்கப்படுவது அருமை; ஆனால் இங்கே தேவனுடைய குமாரனின் கலியாணவிருந்துக்கு வரும்படி உங்களுக்கு அழைப்பு வந்திருக்கிறது. எவனாவது வரமாட்டோம் என்பது மதியீனத்தில் மதியீனம் அல்லவோ? நினைத்துப்பாருங்கள். எதை உங்களுக்கு வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள்? மோட்சம், பரிசுத்தரின் சங்கம், ஆட்டுக்குட்டியானவரின் ரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்தவர்களின் கூட்டம், இவைகளை அல்லவோ வேண்டாம் என்கிறீர்கள்? கிறிஸ்து ஆயத்தப்படுத்திய வாசஸ்தலங்களையும் தேவதூதர்களின் கூட்டத்தையும் பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய கிறிஸ்துவையும் பரிசுத்த ஆவியையும் அல்லவோ வேண்டாம் என்கிறீர்கள்? உலகத்தில் இருந்த உண்மையான பெரியோர் எல்லோரும் இங்கே அல்ல, மோட்சத்திலேயே இருக்கிறார்கள். இங்கிலாந்திலுள்ள பெரிய மனுஷரைக் குறித்துப் பேசுகிறீர்கள். நான் சொல்கிறேன்: உலகத்தில் எந்நாளிலாவது இருந்த உத்தமபெரியோர் எல்லாரும் அங்கே இருப்பார்கள்; எப்போதாவது ஜீவித்த உத்தமர் எல்லாரும் அந்தவிருந்தில் கூடிவருவார்கள்; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு முதலிய உலகத்திலுள்ள புனிதர் எல்லாரும் ஆறுயிரம் வருஷங்களாய் அங்கே போய்ச் சேருகிறார்கள். ஆம், கோத்திரப்பிதாக்களோடும் தீர்க்கதரிசிகளோடும் அப்போஸ்தலரோடும்

இரத்தச் சாட்சிகளோடும் பூமியில் சஞ்சரித்த உத்தமர்களோடும் நாம் உட்கார்ந்திருப்போம் நானே சகல ஐசுவரியமும் என் பாதத்திலுள்ளவனாய் நூறு நூறு வருஷம் உலகத்தில் ஜீவித்தும் கடைசியிலே ஆட்டுக்குட்டியானவரின் விவாக விருந்தை இழந்துபோவதிலும், அப்பால் இருக்கும் பரிசுத்தரின் வாழ்வை நிச்சயமாய்ப் பெறும்படி இன்று இராத்திரி மரிப்பது அவசியமாகில் அப்படி மரிக்க ஆயிரம் முறை விருப்பமுள்ளவனாய் இருக்கிறேன். என் ஜீவிய காலத்தில் அநேக நல்ல சமயங்களை இழந்து போனேன்; தேவகிருபையினால் இந்த ஒன்றையும் இழந்து போகாமல் உறுதிப்படுத்த விரும்புகிறேன். ஆ! ஆட்டுக்குட்டியின் கல்யாணவிருந்தை அநுபவிப்பதும்இராஜாவை மகிமை பொருந்தினவராய்க் காண்பதும் கர்த்தருடன் என்றென்றைக்கும் இருப்பதுமாகிய இவைகளை யார் இழந்து போக விரும்புவான்?

போக்குச் சொல்லத் துவங்கின மூன்று மனுஷரையும் ஒவ்வொருவராகச் சிந்திப்போமாக:-

முதல் மனுஷன் என்ன சொன்னான்? நான் ஒரு வயலைக் கொண்டேன், நான் அகத்தியமாய்ப் போய் அதைப் பார்க்க வேண்டும் என்றான். அவன் கொள்ளுமுன் ஏன் பார்க்கவில்லை என்று சிலர் ஒருமுறை கேட்டார்கள். அவன் நல்ல கெட்டிக்காரனாகில் வயலைக் கொள்ளுமுன் பார்த்திருப்பான். இப்பொழுது பார்ப்பதினால் என்ன லாபம் வரும்? வாங்கி ஆயிற்றே, வாங்கினபின் எப்பொழுதேனும் போய்ப் பார்க்கலாமே. வயல் ஓடிப்போக மாட்டாதே. இவன் வாங்க எத்தனமாய் இருந்தவன் அல்ல, அப்படியாகில் விட்டுவிடவும் இடம் இருக்கும், அல்லது

வேறொருவன் முந்தி அந்த வயலை வாங்கிக்கொள்ளவும் கூடும். அப்படிப்பட்ட ஒரு போக்கு இவனுக்கு இல்லை. அவன் நிலத்தை வாங்கி ஆயிற்று இனி அதை இழந்து போகக்கூடும் என்ற பயம் இல்லை; என்றாலும் தான் அகத்தியம் போய் அதைப் பார்க்க வேண்டுமாம், சுத்தப் பொய்; விருந்துக்குப் போக அவனுக்கு மனம் இல்லை: ஆகையால் தன் மனச்சாட்சியை ஆறுதல் படுத்த இந்தப் போக்கை உண்டுபண்ணினான். அதற்காகத்தான் மனுஷர் போக்குச்சாக்கு உண்டுபண்ணுகிறார்கள். பிசாசு போக்குகள் என்னும் தொட்டிலிலே மனுஷரைக் கிடத்தி அதை ஆட்டி அவர்களை நித்திரை செய்விக்கிறான்.

இரண்டாம் மனுஷன் என்ன சொன்னான்? ஐந்து ஏர் மாடு கொண்டேன், அதைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். அவைகளைக் கொள்ளுமுன் ஏன் சோதித்துப் பார்க்கவில்லை? சோதித்துப்பார்ப்பதற்கான காலம் கொண்டபின் அல்ல, கொண்டு முடிந்துபோனால் எந்த வேளையும் சோதித்துப் பார்க்கலாம். விருந்துக்கான அழைப்பை அங்கீகரித்து அதற்குப் போய் வருமளவும் மாடுகளை தொழுவத்தில் நிற்கவிடலாமே! இவன் சொன்னதும் ஒரு பொய் என்று நீங்கள் காணவில்லையோ?

மூன்றும் மனுஷனுடைய போக்கு எல்லாப் போக்குகளிலும் அதிக பரிகாசத்துக்கு இடமானது பெண்ணை விவாகம் பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது என்றான். தன்னுடன் பெண்ணையும் கூட்டிக்கொண்டு போகலாமே. வாலிப மனைவியைப்போல் விருந்துக்குப் போக யார் அவ்வளவு விரும்பக்கூடும்? தன்னுடன்

போகும்படி அவன் அவளைக் கேட்கலாம்; அவள் விரும்பா விட்டால் அவன் வீட்டிலே தங்கலாமே! காரியத்தைப் பார்த்தால் போக விருப்பமில்லாமையே.

பதினெட்டு நூற்றாண்டுகள் கடந்துபோயின. உலகம் புத்தியில் வளர்ந்து வந்தது. இவ்வாண்டுகளில் உலகம் ஆச்சரியமாய்த் தேர்ச்சியடைந்துவிட்டது என்று சொல்லு கிறார்கள். ஆனால் இப்போது இருக்கும் மனுஷர் தேறின உத்தமமான போக்குச் சொல்லுகிறார்களா? வாலிப ஸ்திரீயே, நீ இவைகளிலும் திறமான போக்குச் சொல்லக் கூடுமோ? நல்ல நியாயம் என்று மறுமையில் காணப்படும் ஒரு போக்கு உன்னிடம் உண்டா? உன்னையாவது திருப்தி படுத்தக்கூடிய ஒரு போக்குச்சாக்கு உன்னிடம் உண்டா? மனுஷர் ஒவ்வொரு போக்குச் சொல்லுகிறார்கள். ஒரு சரி யான போக்குச் சொல்லக்கூடிய மனுஷன் உலகத்தில் இல்லை. ஒரு பயங்கரமான வியாதி ஒரு மனிதனைப் பிடிக் கட்டும், மரணம் வந்து அவனைக் குறிப்பாய்ப் பார்க்கட் டும். அவன்போக்குகள் எல்லாம் ஒரு க்ஷணத்திலே பறந்து போம். என் சிநேகிதரே, நீங்கள் உங்கள் கர்த்தரின் நியா யாசனத்துக்கு முன்பாக நிற்கும்போது உங்கள் போக்குச் சாக்குகள் உங்களுக்கே தகாதவைகளாய்க் காணப்படும்.

தற்காலத்திலே வழக்கமாய் இருக்கிற சில போக்குச் சாக்குகளைக் கவனித்துப்பார்க்க விரும்புகிறேன். இந்தப் போதகரை அல்லது அந்தச் பிரசங்கியை நான் விரும்ப வில்லை என்பது மிகவும் வழமையான ஒரு போக்குச்சாக்கு. நல்லது; அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? செய்தி சொல்லுகிறவனைப்பற்றி உங்களுக்கு என்ன? என் மனைவி அனுப்பும் ஒரு நற்செய்தி அடங்கிய பத்திரத்தை ஒரு சிறு பையன் கொண்டு வந்து எனக்குத் தருகிறான் என்று

வைத்துக் கொள்ளுங்கள். கொண்டு வருகிறவன் யார் என்று பார்க்க நான் விரும்புகிறதில்லை; அவன் நிறம் கருப்பாய் இருக்கலாம், வெண்மையாய் இருக்கலாம், அது எனக்குக் காரியம் இல்லை. வந்த செய்தியையே நான் கவனிக்கவேண்டியது. தேவன் உங்களை விருந்துக்கு அழைக்கிறார் என்பது உண்மை அல்லவோ? செய்தி கொண்டு வந்தவனை ஏன் பார்க்கிறீர்கள்? இந்தப் போக்கைக் கேட்டு நான் அலுத்துப் போனேன். இந்தப் போதகரில் அல்லது அந்தப் போதகரில் எனக்குப் பிரியம் இல்லை, கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்ளும் இந்த மனிதனில் அல்லது அந்த மனிதனில் எனக்குப் பிரியம் இல்லை என்கிறார்கள், செய்தி கொண்டுவருபவனில் என்ன காரியம்? தேவனால் வரும் செய்தியை ஏற்றுக்கொள்ள மனமாய் இருக்கிறீர்களா என்பதே கேள்வி. தேவனுடைய வாக்கு உண்மை என்றும் அவர் உங்களை இந்த விருந்துக்கு அழைக்கிறார் என்றும் நம்புகிறீர்களா? இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு மனுஷனையும் அழைக்கிறார் என்று நம்புகிறீர்களா? அழைப்பு தேவனுடையதானால் ஏன் ஏற்றுக்கொள்ளாமல் விடுகிறீர்கள்? ஒரு பூரண மனிதன் அல்லது மனுஷி உங்களை அழைக்க வருமட்டும் நீங்கள் காத்திருக்கப் போகிறீர்களாகில், ஒருக்காலும் அழைப்பை ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள். பூரணமான மனுஷன் ஒருவர் மாத்திரமின்றி வேறொருவர் இருந்ததில்லை. எங்கள் நடக்கையிலே அநேக குற்றங்களைக் காண்பீர்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களில் உள்ள அநேக காரியங்களில் நீங்கள் பிரியப்படாமல் இருக்கக்கூடும், ஆனால் உங்களால் கூடுமாகில் துணிந்து நம்முடைய கர்த்தரில் ஒரு குற்றத்தைக் காட்டுங்கள் அவரே உங்களை வரச் சொல்லுகிறார், அழைப்பை அங்கிகரிக்கிறவர்களை அவர் ஏற்றுக்கொள்ளுகிறார்.

வேறொரு போக்குச் சொல்லுகிறார்கள். சில நாளைக்கு முன் ஒருஇராத்திரி விசாரணைக்காரர் கூடிய அறைக்கு ஒரு அம்மாள் வந்து, நான் விளங்கக்கூடாத அநேககாரியங்கள் வேதத்தில் இருக்கிறதே என்றாள் அது உண்மைதான். மாம்ச சிந்தையுள்ள மனுஷன் ஆவிக்குரிய பொருள்களை விளங்கிக்கொள்ளமாட்டான் என்று தேவன் சொல்லுகிறார். வேதம் ஆவிக்குரிய நூல். மறு பிறப்படையாத மனிதன் அதை எப்படி விளங்கிக்கொள்வான்? இப்படி அது முத்திரிக்கப்பட்ட புஸ்தகமாகில் நான் எப்படி இரட்சிக்கப்படுவேன் என்று நீங்கள் சொல்லக்கூடும்? உலகத்தாருக்குத் தேவன் இரட்சிப்பை வெளிப்படுத்தியபோது அதை மிகவும் தெளிவாய் வெளிப்படுத்தினார். சுபாவ மனுஷனுக்கு தேவவாக்கு இருட்டாய் இருக்கக்கூடும். ஆனால் இரட்சிப்பின் வழியோ, பிரியமுள்ள ஆறு வயதுப் பிள்ளையும் விளங்கிக்கொள்ளத்தக்க தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. பின் வரும் வசனத்தை எடுத்து அது உனக்கு விளங்கவில்லையோ என்று பார். "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள், கேட்கிறவனும் வா என்பானாக, தாகமாய் இருக்கிறவன் வரக்கடவன்." உங்களில்அநேகர் தாகமாய் இருக்கவில்லையா? வாருங்கள் என்று தேவன் சொல்லுகிறார். விருப்பமுள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன் என்கிறார். ஒரு இனாம் வாங்கிக்கொள்வது எப்படி என்று உங்களுக்குத் தெரியும். இரட்சிப்பை ஒரு இனாமாக தேவன் உங்களுக்கு முன் வைக்கிறார். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச்சொந்தமானவர்களோ அவரைஏற்றுக்கொள்ளவில்லை. அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" இது உங்களுக்கு விளங்கக்கூடும். "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை

விசுவாசி, அப்பொழுது இரட்சிக்கபடுவாய்.'' விசுவாசிப்பது இன்னதென்று நீங்கள் அறிவீர்கள். விசுவாசிப்பது நம்புகிறது. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவிடம் உங்கள் ஆத்துமாவை ஒப்புவிக்கிறது இன்னதென்பது உங்களுக்குத்தெரியும். அதுதான் விசுவாசம். இப்போது கருகலும் மறைபொருளுமானவைகள் வேதத்தில் இருக்கின்றன. நீங்கள் கிறிஸ்துவை நம்பி வரும்போது உங்கள் கண்கள் திறக்கப்படும்; வேதம் உங்களுக்கு ஒரு புதிய புஸ்தகமாயிருக்கும். இன்றைக்கு கருகலும் மறைபொருளுமானவைகளை விசுவாசித்தால் நாளைக்கு நூதன வடிவுள்ளவைகளாய் இருக்கும். அது உங்களுக்குச் சகல புஸ்தகங்களிலும் விசேஷ புஸ்தகமாய் இருக்கும். கிறிஸ்து இன்றைக்கு உங்கள் பார்வைக்கு காய்ந்தநிலத்திலுள்ள வேரைப்போன்றவரும் அழகும்வடிவும் அற்றவருமாய் இருக்கக்கூடும். அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டால் பதினாயிரம் பேருக்குள் விசேஷமானவராகவும் முற்றும் அழகும் பிரபையும் உள்ளவராகவும் விடிவெள்ளி நட்சத்திரமாகவும் இருப்பார்

வேதத்தைப்போல வேறொருபுஸ்தகத்தையும் மனுஷர் பிசகாய்த் தீர்க்கிறதில்லை. அதை வாசியாமல் மனுஷர் தீர்ப்புச் செய்கிறார்கள்; அல்லது இங்கே சொற்பம் அங்கே சொற்பம் வாசித்து, இது மிகவும் கருகலும் அந்தரங்கமுமாய் இருக்கிறது என்று சொல்லி புஸ்தகத்தை மூடுகிறார்கள். இக்காலத்தில் நீங்கள் ஒரு புஸ்தகத்தை எடுத்து வாசிக்கிறீர்கள். அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று ஒருவன் கேட்கிறான். நான் ஒரு முறை மாத்திரம் வாசித்தேன், அதிக கவனத்தோடும் அல்ல, ஆகையால் இப்போது எனது கருத்தைச் சொல்ல நான் விரும்பவில்லை என்கிறீர்கள். இப்படி இருந்தும் ஜனங்கள் தேவனுடைய

புஸ்தகத்தை எடுத்துச் சில பக்கங்களை வாசித்துப் பின் உதவாது என்று தீர்க்கிறார்கள். வேதத்துக்கு விரோதமாய்ப்பேச நான் கண்ட வேத விரோதிகள் எல்லாருக்குள்ளும் வேதத்தை முற்றாய் வாசித்த ஒருவனையாவது நான் சந்திக்கவில்லை. ஒருவேளை அப்படிப்பட்டவர்கள் இருக்கக் கூடும், நான் காணவில்லை. வேதம் உண்மைஅல்ல என்றும் அது கருகலானதென்றும் நாம் நம்பும்படி செய்யப் பிசாசு தந்திரமாய்ப் பிரயாசப்படுகிறான். ஆத்தும சத்துருவாகிய அவனை வெல்லுவதற்கான ஒரே வழி, எழுதப்பட்ட தேவ வசனமே. இக்காரியம் அவனுக்குத்தெரியும்; ஆகையினால் அதை மனுஷர் நம்பாதபடி செய்ய அவன் பிரயாசப்படுகிறான். ஒருவன் தேவனுடைய வசனத்தை உண்மையாய் விசுவாசிக்கும்போது அவன் பிசாசை மடங்கடிக்கிறான். வாலிபனே வேதம் உண்மை; இந்த அவிசுவாசிகள் வேதத்துக்குப் பதிலாக உங்களுக்கு என்ன தருவார்கள்? வேதமே அன்றி இங்கிலாந்தை இவ்வளவு மேன்மைப்படுத்தினதென்ன? தேவவசனத்தை மேன்மைப்படுத்துகிற ஒவ்வொரு ஜாதியும் மேன்மை அடைகிறது; அதைத் தள்ளுகிற ஒவ்வொரு ஜாதியும் கீழேதள்ளப்படுகிறது. ஆ, நாம் வேதத்தை உறுதியாகத் தழுவிக்கொள்வோமாக. மெய் தான், எல்லாவற்றையும் ஒரு முறையிலே விளங்கிக் கொள்ளமாட்டோம், அதின் நிமித்தம் மனுஷர் அதைக் குற்றமாய்த் தீர்க்கப்படாது. ஐந்து வயதுள்ள என் சிறு மகனை நாளைக்குப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். சாயந்தரம் அவன் வீட்டுக்கு வரும்போது என் மகனே, நீ வாசிக்கக் கூடுமா, எழுத்துக்கூட்டுவாயா, அட்சர கணிதம், ரேகை கணிதம், எபிரேயு லத்தீன், கிரேக்கு இவைகள் உனக்கு நன்றாய்த் தெரியுமா? என்று கேட்கிறேன்.

சிறுபாலகன் என்னைப்பார்த்து: பிதாவே நீர் கேட்பது பகிடியாய் இருக்கிறது; நான் பகல் முழுவதும் அ, ஆ, பாடம் பண்ணப்பிரயாசப்பட்டேன் என்கிறான். நான் அதற்கு உத்தரமாக: நல்லது, நீ இன்று முழுதும் படித்தும் முடியாவிட்டால் நீ இனி பள்ளிக்குப்போக வேண்டிய தில்லை என்கிறேன் என்றுவைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? இந்தமனிதன் பைத்தியம் கொண்டு விட்டான் என்பது எவ்வளவு உண்மையாய் இருக்குமோ, அப்படியே வேதத்தைக்குறித்து மனுஷர் பேசுவதும் இருக்கிறது. என் சிநேகிதரே, வேதத்தை ஐம்பது வருஷமாகப் படித்தவர்களும் ஞானவான்களும் படிப்பாளிகளும் பெரிய வேதசாஸ்திரிகளும் அதின் ஆழத்தை இன்னும் கண்டதில்லை. அதில்இருக்கும் உண்மைகளை தேவனுடைய சபையானது கடந்த ஆயிரத்து எண்ணூறு வருஷங்களாய் ஆராய்ச்சி செய்தது. அந்த ஜீவ நதியின் ஆழத்தை ஒருவனும் இன்னும் கண்டுகொண்டதில்லை.

இது அல்ல, என்னுடைய வருத்தம் என்று வேறொரு வகுப்பார் சொல்லுவார்கள். நான் வேதவசனத்தை நம்புகிறேன்; நான் தனித்து உம்முடன் பேசக்கூடுமானால் என் போக்கை உமக்குச் சொல்லுவேன். உண்மை என்னவெனில், நான்உலகத்தை அதிகமாய் நேசிக்கிறேன்; நான் கிறிஸ்தவனானால் நான் சகலசந்தோஷங்களையும் விட்டு முகவாட்டமுள்ளவனாய் ஒருபுன்னகையும் அற்றவனாய் உலகத்தில் ஜீவிக்கவேண்டும்; என் சந்தோஷம் முடிந்துபோம் என்கிறான். இதிலும் பெரும்பொய் ஒருகாலத்திலும் உண்டாயிருந்ததில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன். பிசாசு ஆதியிலே ஏதேனில் இதைத் துவங்கினது. அதில் உண்மையானது எவ்வளவும் இல்லை, அது கிறிஸ்துமார்க்க தூஷணம். ஒருவனைத் தேவனுடைய பிள்ளையாக்குவது

அவனை துக்கமுள்ளவன் ஆக்குகிறதல்ல. பாருங்கள்; ஒருவனைத் தூக்கக் கொண்டு போகிறார்கள், சில நிமிஷங்களில் அவன் நித்தியத்துக்குள் தள்ளப்படுவான். மின் கம்பியினால் இராஜாத்தியவர்கள் அனுப்பும் செய்தி பறந்து வருகிறது. அவர்கள் மன்னிப்பு அனுப்புகிறார்கள், நான் அவசரமாய் அவனிடத்துக்கு ஓடி நற்செய்தி, நற்செய்தி நீ மரிக்க வேண்டியதில்லை என்று சத்தமிடுகிறேன் என்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அது அவனைத் துக்கமுள்ளவன் ஆக்குமா? இல்லை ஒரு போதும் இல்லை. வாலிபரே, கன்னியரே, இளைஞரே, வயோதிபரே சாத்தானின் பொய்யை இனி ஒரு போதும் நம்பாதிருங்கள். கிறிஸ்துவை அற்றிருப்பதுதான் மனுஷரைச் சஞ்சலமாக்குவது; தாகமுள்ள ஒரு மனுஷன் தண்ணீர் இல்லாமல் சாகிறான்; நீங்கள் போய் அவனுக்குத் தண்ணீர் கொடுக்கிறீர்கள். அது அவனைத் துக்கமுள்ளவன் ஆக்குமா? அப்படியே கிறிஸ்துவும் இருக்கிறார். தாகமுள்ள ஆத்துமாவுக்குத் தண்ணீர் போஜனம் இல்லாமல் ஒரு மனுஷன் சாகிறான்; நீங்கள் அவனுக்குப் போஜனம் கொடுக்கிறீர்கள். அது அவனைத் துக்கமுள்ளவன் ஆக்குமா? அப்படியே கிறிஸ்துவும் இருக்கிறார். அவர் ஜீவ அப்பம். நீங்கள் கிறிஸ்துவைக் கண்டடையுமட்டும் உண்மையான சந்தோஷம், சமாதானம் மகிழ்ச்சி ஆறுதல் இன்னதென்று ஒருபோதும் அறியமாட்டீர்கள்.

ஒருவன் கிறிஸ்தவனானால் உலகத்திலே சமாதானமும் சந்தோஷமும் உள்ளவனாய் இருக்கமாட்டான் என்பது முழு மதியீனம். அதுதான் எனதுவில்லங்கமாய் இருந்தது. நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் மனந்திரும்பின முதல் வருஷம் எனக்கு உண்டாயிருந்த மகிழ்ச்சியும் மெய்யான ஆறுதலும் சமாதானமும் என் முந்தின

ஜீவியத்தின் எல்லாச் சந்தோஷங்களைப் பார்க்க அதிகமாய் இருந்தது. புதிதாய் மனந்திரும்பின எந்த மனிதனும் இப்படியே சொல்லுவான்.

வேறொரு போக்குச் சொல்லுகிறார்கள். ஆ! அதை எத்தனை பேர் சொல்லுகிறார்கள், அச்சத்தத்தால் ஆகாயம் நிறைந்திருக்கின்றது. நான் கிறிஸ்தவனாய் இருக்க விரும்புகிறேன், ஆனால் அது மெத்த வருத்தமான காரியம். அப்படி இருக்க அநேகம் முறை பிரயாசப்பட்டேன். நான் வெளிப்படையாய் பேசவிரும்புகிறேன்; இதுதான் உண்மை என்று ஒருவன் சொல்லுகிறான் நீங்கள் என்னசெய்தீர்கள் என்று நான் சொல்லுகிறேன். பழைய மாம்சசிந்தையோடு தேவனுக்கு ஊழியம் செய்யப்பிரயாசப்பட்டீர்கள்: அப்படிச் செய்யலாமாகில் நீங்கள் சந்திரனிடத்துக்கு நடந்து போகலாம். அது சற்றும் கூடாதகாரியம் எத்தியோப்பியன் தன்தோலை மாற்றக்கூடுமா? சிவிங்கி தன்புள்ளியை நீக்கக் கூடுமா? பழைய மாம்சசிந்தையோடு தேவனுக்கு ஊழியம் செய்வதும் அப்படியே இருக்கும். புதிய இருதயத்தோடு தேவன் வல்லமைதருவார். அப்பொழுது அவருக்கு ஊழியம் செய்வது வருத்தம் என்று நீங்கள் சொல்லமாட்டீர்கள். இதுவேறொரு பொய்; அதை இன்னும் பார்ப்போம். தேவன் கடினமான எஜமான் என்று எண்ணுகிறாயோ? அவருக்கு ஊழியம் செய்வது வருத்தம் என்று சொல்லுகிறாயோ? பின்னை சாத்தான் சுகமான எஜமான் என்கிறாயோ? தேவனுக்கு ஊழியம் செய்வதிலும் அவனுக்கு ஊழியம் செய்வது சுகமோ? அது நேர்மையான பேச்சோ? அது உண்மையோ? தேவன் கடினமான எஜமானா? வேதத்தில் "துன்மார்க்கரின் வழி கடினம்" என்றல்லவோ வாசிக்கிறோம். பிசாசுதான் கடினமான எஜமான் என்று

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆம் துரோகிகளுடைய வழியோ கரடு முரடானது, தேவனுடைய வாக்கு மாறுது. வாலிபனே, இதைப்பற்றி நீ ஐயப்பட்டால் மறியல் கூடந்தில் இருக்கும் குற்றவாளி ஒருவனைப்பார். அவன் மறியல் கூடத்திற்குப்போய் பத்து வருஷம் ஆயிற்று; இன்னும் பத்து வருஷம் அங்கே இருக்கவேண்டும். அவன் ஜீவியத்தில் இப்படி இருபது வருஷம் ஒழிந்து போகிறது. சஞ்சலம் நிறைந்த மறியல் கூடத்தை விட்டு அவன் வரும் பொழுது குற்றவாளி என்று குறிக்கப் பட்டவனாய் வருகிறான். அந்த மனுஷன் துரோகிகளுடைய வழி சுகமானதென்று சொல்லுவானோ? என்ன நினைக்கிறாய்;- காலும் கையும் கட்டப்பட்டவனும் மதுவின் அடிமையும் நரகத்துக்குச் சீக்கிரம் ஓடுகிறவனுமாகிய ஒரு குடி வெறியனைக் கேளுங்கள். துன்மார்க்கரின் வழி சுகமாயிருக்கக் கண்டாயோ என்று விசாரியுங்கள் அவன் அழுது அழுது சொல்லுவான் ''சுகமோ, சுகமோ? துன்மார்க்கரின் வழி வருத்தமாய் இருக்கிறது'' ஐயோ! அது ஒவ்வொரு நாளும் அதிகம் அதிகம் வருத்தமாயிருக்கிறது'' என்பான். விபசாரியிடத்திலும் லௌகீகனிடத்திலும் விசாரியுங்கள்; சூதாடுபவனிடத்திலும் தூஷணக்காரனிடத்திலும் போய் விசாரியுங்கள். பிசாசின் ஊழியம் கடினம் என்று எல்லாரும் ஒருமிக்கச் சொல்லுவார்கள். பிசாசுக்கு விசுவாசத்தோடு சேவகம் பண்ணும் மனுஷனை அழைத்து நான் நிற்கிற இந்த உயர்ந்த தளத்திலே இப்போது நிறுத்துங்கள். சில கேள்விகேட்போமாக: இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்தவர்களுடைய சாட்சியினாலே இக்காரியத்தை நிதானிப்பதே உத்தமமானவழி ஒரு மனுஷன் இரண்டு எஜமான்களுக்கும் ஊழியம்செய்து பார்ப்பதற்கு

முன், தீர்ப்பு செய்யத் தகுந்தவன் அல்ல என்று நினைக்கிறேன். ஒருவன் ஒரு எஜமானை குற்றமாய்ச்சொல்ல நான் கேட்டால், நீ அவனுக்கு ஊழியம் செய்து பார்த்தாயோ என்று நான் கேட்பேன். இல்லாவிட்டால் அவன் சாட்சி சொல்லத்தகுந்தவன் அல்ல. நீங்கள் இரண்டு எஜமானுக்கும் ஊழியம் செய்தவர்களேயானால் அப்போது நீங்கள் நல்ல நியாயவாளிகளாய் இருப்பீர்கள். நான் இப்போது கிறிஸ்துவுக்கு ஒரு சாட்சியாயிருக்க விரும்புகிறேன். அவருடைய சேவகத்தில் நான் இருபது வருஷங்களாய் இருந்தேன்; அவர் நல்ல எஜமானாய் இருந்தார் என்று நான் சாட்சி சொல்லுகிறேன். கிறிஸ்தவனாய் இருக்கிறது வருத்தம் என்று நானும் உங்களைப்போல் சொல்லி வந்தேன், வருத்தம் என்றும் எண்ணினேன். அவருடைய நுகம் மெதுவாயும் சுமை இலகுவாயும் இருக்கக்கண்டேன் என்று நான் இப்பொழுது சொல்கிறேன். இங்கே இருக்கும் உங்களிலும் அநேகர் இரண்டு எஜமானுக்கும் ஊழியம் செய்தவர்கள்; உங்களிலும்அநேகர் கிறிஸ்துவுக்கு ஊழியம்செய்து வருகிறீர்கள். உங்களில் அநேகர் அவருடைய மந்தைக்கு வருமுன் பிசாசுக்கும் ஊழியம் செய்தீர்கள். கிறிஸ்துவுக்குரியவர்களாயிருக்கிறவர்களும் அவருக்கு ஐந்து வருஷம், பத்து வருஷம், இருபது வருஷமாய் ஊழியம்செய்தவர்களுமாகிய உங்களிடம் நான் கேட்கிறேன். இயேசு கடினமான எஜமானா? இல்லை, இல்லை என்றுதான் சொல்லுவீர்கள் என்று நானும் நினைத்தேன்; அப்படிச் சாட்சியிடுவீர்கள் என்று எனகககு தெரியும். நான் பத்து வருஷமய் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தேன். அவர் கடினமான எஜமானாயிருக்கக் கண்டேன் என்று எப்போதாவது ஒருவன் சொல்ல நான் கேட்டதேஇல்லை. இப்போது உங்களை சாட்சிக்கூடத்தில் விடுகிறேன். அநேக காலமாய் நீங்கள் சாத்தானுக்கு

ஊழியம் செய்தீர்கள். உங்களில் சிலர் இப்போதும் ஊழியம் செய்கிறீர்கள். அவன் கடினமான எஜமானுயிருக்க நீங்கள் காணவில்லையோ? ''ஆம், ஆம்.'' அப்படிதான் என் சிநேகிதரே. நீங்கள் அதை ஒத்துக் கொள்ளாமல் விடக் கூடாது; அது உண்மை என்று அறிவீர்கள்; துன்மார்க்கரின் வழி கடினம்.

சாத்தான் பட்சமான எஜமான் என்று யூதாஸ்காரியோத்து கண்டானு? தான் வாங்கின முப்பது வெள்ளிக் காசை அவன் எறிகிறதைப் பாருங்கள். பிசாசின் ஊழியம் அவனுக்கு அவ்வளவு சஞ்சலமாக இருந்தபடியால் அந்த ஊழியத்தில் அவன் உண்மையாய் ஏற்பட்டு இருபத்து நாலு மணி நேரத்திற்குள் நாண்டுகொண்டு செத்தான்.

இதற்கு மாறுய் பவுலை அழைத்துக் கேளுங்கள். தேவனுக்கு ஊழியம் செய்வது வருத்தம், பிசாசுக்கு ஊழியம் செய்வது சுகம் என்று அவர் சொல்வாரோ? என்ன நினைக்கிறீர்கள்? நான் பிசாசுக்கு நல்ல அடிமை வேலை செய்தேன், நான் சீறிப் பயமுறுத்தி சபையைத் துன்பப் படுத்தினேன், முள்ளில் உதைக்கிறது வருத்தமாயிருக்கக் கண்டேன் என்கிறுர் அல்லவா?

அதைக் குறித்துத் தேவன் சொல்வதைப் பார்ப்போமாக. அவர் கடினமான எஜமான் என்று சொல்லுகிறவர்களிடத்திலே நான் கேட்க விரும்புகிறது என்னவென்றுல் பின்வரும் வசனத்திற்கு என்ன சொல்வீர்கள்? ''வருத்தப் பட்டுப் பாரம் சுமக்கிற நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளுங்கள், என் நுகம் மெதுவாயும் என் சுமை லகுவாயும் இருக்கிறது''

என்கிறுர். ஆம் நாம்நேசிக்கும் ஒருவருக்கு வேலேசெய்வது லகு; நீங்கள் ஒரு மனுஷனே நேசித்தால் அவனேப் பிரியப் படுத்துவது உங்களுக்கு எவ்வளவு சந்தோஷம்.

ஆ! என் சிநேகிதரே, தேவனேக்கடினமான எஜமான் என்று சொல்லி அவரைக் கனவீனம் பண்ணுதிருங்கள். ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கு புதிதாய் சீஷனுனவனு டன் பேசுங்கள். அவனுடைய முகத்தைத்தானும் பாருங் கள். வானத்தின் ஒளி அவன் கண்களேப் பிரகாசிப்பிக்கிற தைப் பாருங்கள். கல்வாரியின் பிரபை அவன் பாதையை எப்படி வெளிச்சமாக்குகிறது! கிறிஸ்துவின் ஊழியத்தில் அவன் கண்டடைந்த சமாதானத்தையும் சந்தோஷத்தை யும் சொல்லவிடுங்கள், பாஷை இல்லேஎன்றமட்டும் சொல் லட்டும், அவன் பயணம் பண்ணின வழி எப்படி வெளிச்ச மாகிறது. அவன் தன்னுடைய நித்தியவீட்டுக்குக் கிட்டக் கிட்ட அவனுடைய நம்பிக்கை எப்படிப் பிரகாசிக்கிறது! ஆம், மெய்யாய் கிறிஸ்துவின் நுகத்துக்கும் சாத்தானின் நுகத்துக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. கிறிஸ்து வின் நுகம் மெதுவும் லேசுமாய் இருக்கிறது. பிசாசின் நுகம் பாரமும் கடினமுமாய் இருக்கிறது. பிசாசின் பொய் களேக் கேளாதிருங்கள் என்று உங்களே மன்ருடுகிறேன். முழு மனுஷ குலத்தையும் அவன் வஞ்சித்தான். ஆ, இப் போதே உங்கள் எஜமான்களே மாற்றி ஆட்டுக்குட்டியான வரின் கலியாண விருந்துக்கு வரும்படி கூறுகிற அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். இப்படிப்பட்ட கிருபை கிடைக்கும் படி மன்ருடுவோமாக.

V

கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்

மத்தேயு 22 : 42

கிறிஸ்துவைப்பற்றிச் சொற்பமேனும் சிந்தியாத ஒருவன் இங்கே இருக்கிறான் என்று நான் நம்பவில்லை. நீங்கள் அவரைக்குறித்து அறிந்திருக்கிறீர்கள், அவரைக்குறித்து வாசித்திருக்கிறீர்கள், அவரைக்குறித்த பிரசங்கம் கேட்டிருக்கிறீர்கள். ஆயிரத்தெண்ணூறு வருஷங்களாய் மனுஷர் அவரைக் குறித்துப்பேசி வருகிறார்கள், அவரைக்குறித்து நினைத்து வருகிறார்கள், அவர் யார் என்று சிலர் அவரைக் குறித்து நிதானம் பண்ணியிருக்கிறார்கள், சிலர் நிதானம் பண்ணாமல் இருக்கிறார்கள்.

"கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்பது நல்லகேள்வி என்று எண்ணுகிறேன். உங்களுக்குள் இருக்கும் யாதொரு பிரதான மனுஷனைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று நான் கேட்டால், அவனைக் குறித்து இப்படி அப்படி எண்ணி இருக்கிறோம் என்று சொல்லுவீர்கள்.

உங்கள் மகா இராஜாத்தி அவர்களைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டால் ஒருநிமிஷத்திலே உங்கள் கருத்தைச் சொல்லுவீர்கள். மனுஷர் கர்த்தரா

கிய இயேசுகிறிஸ்து இன்னார் என்று நிதானம் பண்ணாமல் இருக்கிறது ஏன்? அவர் நல்லவர் என்று நினைத்தால் அவர் நல்லவர் என்று சொல்லுங்கள், அவர் பட்சமாய் நில்லுங்கள். அவர் தீயவர் என்று நினைத்தால் அல்லது அவர் ஒரு எத்தன், உலகத்தை இரட்சிக்கும்படி அவர் மரிக்கவில்லை என்று நினைத்தால், உங்கள் சத்தத்தை உயர்த்தி நீங்கள் அவருக்கு விரோதிகள் என்று சொல்லுங்கள் யார் உண்மையாய் கிறிஸ்துவின் பக்கத்தவர்கள் என்றும், யார் அவருக்கு விரோதிகள் என்றும் நாம் உறுதியாய் அறிந்து கொள்ளத் தக்கதாக மனுஷர்கள் பிரித்துக் கொள்வார்களானால், அது கிறிஸ்து மார்க்கத்துக்குச் சந்தோஷமான காரியமாய் இருக்கும்.

பின் ஒருவரைக்குறித்து உலகம் என்ன நினைக்கிறது என்பது அற்பகாரியம். ராஜாத்தியும் மந்திரிமாரும் பட்டவர்த்தனரும் பிரபுக்களும் சீக்கிரம் போய் விடுவார்கள்; ஆகையால் நீங்கள் அவர்களைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்பது சிறு காரியம். அவர்கள் ஜீவியம் சிலருக்கு மாத்திரம் பிரயோஜனம் உள்ளது; கிறிஸ்துவோ பூமியில் உள்ள ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் அவசியமானவர். கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்பது உலகத்தார் எல்லாருக்கும் ஏற்ற கேள்வி. இந்த அல்லது அந்தக் குருவைக்குறித்து. இந்த அல்லது அந்தப் போதனையைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று நான் கேட்கவில்லை: கிறிஸ்துவைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்றே கேட்கிறேன்

அவர் உண்மையாய் தேவகுமாரனா? அதாவது மனுஷ சரீரத்தில் வந்த தேவனா என்று கேட்க விரும்புகிறேன்;

அவர் ஒரு விசேஷ அலுவலாய் பரலோகத்தை விட்டுப் பூலோகத்துக்கு வந்தார்; உண்மையாய் பாவியைத் தேடி இரட்சிக்க வந்தார். பசுத்தொட்டி துவங்கி அவரைப் பின் தொடர்ந்து அவர் பூமியில் சஞ்சரித்த முப்பது மூன்று வருஷங்களையும் நீங்கள் கவனிக்கவேண்டும் என்று விரும்பு கிறேன். அவர் இப்பூமிக்கு வந்து ஒரு அரமனையிலே பிறவாமல் பசுத்தொழுவத்திலே பிறந்ததைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? மோட்சத்தின் மேன்மையையும் மகிமையையும் அவருக்குப் பணிவிடை செய்யும் தேவ தூதர்களின் கூட்டத்தையும் விட்டு வந்ததென்ன? அரமனைகளையும் கிரீடங்களையும் அரசாளுகைகளையும் கடந்து இங்கே தனித்துப் பசுத்தொட்டிக்கு வந்ததென்ன?

அவர் போதித்தாரே, அதைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். அவர் பேசினது போல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லையே! அவர் பிரசங்கித்தாரே, அதைக் குறித்துக் கவனிக்க விரும்புகிறேன். நீங்கள் அந்த மலையடிவாரத்துக்குச் செல்லவும், அவருடைய மிருதுவான உதடுகளினின்றுபுறப்பட்ட வார்த்தைகளைக் கவனிக்கவும் விரும்புகிறேன். தற்காலத்து பிரசங்கிகளைக் குறித்துப் பேசுகிறேமே நான் உலகத்தில் உள்ள ஞானவான்களின் வாக்கியத்தை ஜீவகாலமெல்லாம் கேட்பதிலும் கிறிஸ்துவின் பாதத்தண்டை ஐந்து நிமிஷம் இருப்பதையே ஆயிரம் மடங்கு அதிகமாக விரும்புகிறேன். எந்தப் பொருளையும் எடுத்து அதில் தமது போதனையைக் கட்டிவிட்டார். அப்பால் ஒரு விதைக்கிறவன், ஒரு நரி அல்லது ஒரு பட்சி இருக்கிறது: அவைகளைச் சுற்றி தமது சத்தியத்தைக்கட்டி விட்டார். நீங்கள் ஒரு நரியை, அல்லது

விதைக்கிறவனை. அல்லது ஒருபட்சியைக் காணும்பொழுது இயேசு சொன்னவைகளை நினையாமல் இருக்க முடியாது. பள்ளத்தாக்கிலே ஒரு லீலி புஷ்பம் இருக்கிறது; நீங்கள் அதைக் காணும்பொழுது "அவைகள் வருந்துகிறதும் இல்லை நூல் நூற்கிறதும் இல்லை" என்று அவர் சொன்ன வார்த்தைகளை நினையாமல் இருக்கமுடியாது. ஆகாயத்தில் வீச்சிடுகிற அடைக்கலான் குருவியை நமக்குப் பிரசங்கஞ் சொல்லப்பண்ணுகிறார். அந்தஆச்சரியமான பிரசங்கங்கள் எவ்வளவு புதியவைகள்! இன்றைக்கும் அவைகள் உயிருள்ளவைகள். நம்முடைய பிள்ளைகளுக்கு அவைகளைச்சொல்ல எவ்வளவு விரும்புகிறோம். அவைகளைக்கேட்க நம்முடைய பிள்ளைகள் எவ்வளவு விரும்புகிறார்கள். இயேசுவைக் குறித்து ஒரு கதை சொல்லும் என்று நமது பிள்ளைகள் எத்தனை முறை கேட்கிறார்கள். சிறுபாலர்களும் அவருடைய பிரசங்கத்தை எவ்வளவு நேசிக்கிறார்கள். உலகத்தில் உள்ள எந்தக் கதைப் புஸ்தகமாவது அவர் சொன்ன கதைகள் போல் அவர்களுக்குப் பிரியமானவைகள் அல்ல. அவர் சொன்னவைகள் எவ்வளவு ஆழமானவைகள்! ஞானிகள் எவ்வளவு மலைவு கொண்டார்கள்! வேதபாரகரும் பரிசேயரும் எவ்வளவு அளவிடக்கூடாதிருந்தார்கள்! ஆ! அவர் ஒரு ஆச்சரியமான பி ர ச ங் கி என்று நீங்கள் நினைக்கவில்லையா?

வைத்தியனென விஷயத்தில் அவரைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். கிறிஸ்துவைப்போல ஒருவன் சுகப்படுத்தக்கூடுமாகில் அவன் பேர் பெற்ற வைத்தியனாய் மதிக்கப்படுவானே. அவரிடத்தில் கொண்டு வரப்பட்ட யாரையாவது அவர்சொஸ்தப்படுத்தாமல் இருக்கவில்லையே! அவர் ஒரு வார்த்தை சொல்ல வியாதி நீங்கிவிட்டதே! குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனு

வின் வருகிறுன். 'கர்த்தாவே! உமக்குச் சித்தமானுல் என்னைச் சுத்தமாக்க உம்மால் கூடும்'' என்கிறுன். எனக்குச் சித்தம் உண்டு, சுத்தமாகு என்று பரம வைத்தியர் சொல்கிறுர். அந்த க்ஷணமே குஸ்டரோகம் நீங்கிப் போகிறது. மாருத வியாதியுள்ளவர்கள் தங்குகிற வைத்திய சாலைகள் பூமியிலே இருக்கின்றன; அவராலே மாற்றக் கூடாத வியாதிகள் இல்லை.

அவர் பெத்தானியாவில் உள்ள ஒரு சிறு வீட்டுக்குப் போய் அங்கே மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய இருதய காயத்தைக் கட்டுகிறதைப் பாருங்கள். ஆறுதல் சொல்லுகிற விஷயத்தில் அவரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். அவர் விதவைக்கு ஒரு நாயகனைப் போலவும், அனுதருக்கு ஒரு பிதாவைப் போலவும் இருக்கிறுர். இளைத்துப் போனவர்கள் அவர் மடியில்இளைப்பாறுதலையும், துணை அற்றவர்கள் அவரிடம் துணையையும் காண்பார்கள். அவர் ஒருக்காலும் மாறுர், ஒருக்காலும் கை விடார், ஒருக்காலும் சாகார், அவர் உருக்கம் எப்பொழுதும் புதியது, அவர் நேசம் எப்பொழுதும் நிறைவானது ஆ! விதவைகளே! அனுதபிள்ளைகளே! சஞ்சலப்படுகிறவர்களே! புலம்புகிறவர்களே! கிறிஸ்துவாகிய தேற்றரவாளருக்காகத் தேவனைத் தோத்திரியுங்கள்.

ஆனுல், நான் எடுத்துப்பேச விரும்புகிற காரியங்கள் இவைகள் அல்ல. கிறிஸ்துவை அறிந்தவர்களிடம் போய் அவரைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்போமாக. இப்பொழுது ஒருமனுஷன் எப்படிப்பட்டவன் என்று நீங்கள் அறிய விரும்பினுல் அவனை நன்ருய் அறிந்தவர்கள் இடம் விசாரிக்கிறீர்கள். பாரபட்சமாய் இருக்க நான் விரும்ப வில்லை. நாம் அவருடைய சத்துருக்களிடமும் மித்

துருக்களிடமும் போய் விசாரிப்போமாக, கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று அவர்களிடம் கேட் போமாக. அவரை நேசித்தவர்களிடம் கேட்டால் அவரை அதிகமாய் நேசிக்கிறபடியால் அவர் குற்றங்களைக் காண மாட்டார்கள். அவர்கள் சொல்வதெல்லாம் அவர் பக்க மாய்த்தான் இருக்கும் என்று நீங்கள் சொல்லுவீர்கள். ஆகையால், முதல் அவர் சத்துருக்களிடமும் அவரைப் பகைத்து, துன்பப்படுத்தி, சபித்துக் கொலை செய்தவர்க ளிடமும் போவோம். உங்களை ஜூரிமார் ஆசனங்களில் இட்டு, அவர்களைச் சாட்சிக்கூடத்தில் நிறுத்தி கிறிஸ்து வைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்பேன்.

சாட்சிகளுக்குள் பரிசேயரை முதல் அழைப்போமாக அவர்கள் அவரை எப்படிப் பகைத்தார்கள் என்று அறி வோம்; அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்போமாக. "பரிசேயரே! தேவகுமாரனுக்கு விரோதமாய் உங்கள் இருதயத்தில் உள்ளதைச் சொல்லுங்கள்; கிறிஸ்துவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்" அவர்கள் சொல்லுகிறார் கள் "இந்த மனுஷன் பாவிகளை ஏற்றுக்கொள்ளுகிறான்:" இப்படி அவருக்கு விரோதமாய்ச்சொல்வதற்கு நியாயம் என்ன? இதுதான் நாம் அவரை நேசிக்கப்பண்ணுகிற நியாயமாய் இருக்கிறதே, இது சுவிசேஷத்தின் மகிமை. அவர் பாவிகளை ஏற்றுக்கொள்கிறார் அவர் ஏற்றுக்கொள் ளாவிட்டால் நமது சீர் என்னமாய் இருக்கும். இதை விட அவருக்கு விரோதமானது ஒன்றும் உங்களிடம் இல்லையா? நீங்கள் சொன்னதோ அவர் பக்கமான முதல்தரச் சாட்சி யாய் இருக்கிறது. அவர் சிலுவையில் அறையப் பட்டிருக் கையில் இவன் மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணி இல்லை என்று சொன்னீர்

கள் அல்லவோ? மெய்தான், அவர் மற்றவர்களை ரட்சித்தார் அவர் தம்மையும் ரட்சித்து நம்மையும் ரட்சிக்க கூடாது அப்படியே அவர் தமது ஜீவனை உங்களுக்காகவும் எங்களுக்காகவும் ஒப்புவித்தார் ஆம் பரிசேயரே! உங்கள் ஜீவிய காலத்தில் நீங்கள் சொன்ன எல்லாவற்றிலும் இது உண்மை. அவர் மற்றவர்களை ரட்சித்தார், மற்றவர்களுக்காக மரித்தார், அவர் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவரைக்குறித்து நீங்கள் எண்ணுகிறது முழுதும் சரி; தன்னைக் கொடுத்து மற்றவர்களை இரட்சித்தார்.

இப்போது காய்பாவைக் கூப்பிடுவோமாக. அவன் இங்கே தனது நீண்ட ஆசாரிய வஸ்திரங்களோடு நிற்பானுக. அவனுடைய சாட்சியைக் கேட்போம். காய்பாவே! கிறிஸ்துவை விசாரணை பண்ணின போது நீர் பிரதான ஆசாரியனுய் இருந்தீர், சனதரீம் என்னும் யூத சங்கத்துக்குத் தலைவனுய் இருந்தீர், அவரைக் குற்றவாளி என்று நிதானித்த ஆலோசனை அறையில் நீரும் இருந்தீர், குற்றவாளி என்ற தீர்ப்பைச் சொன்னவரும் நீரே. இப்போது எங்களுக்குச் சொல்லும்; சாட்சிக்காரர் என்ன சொன்னுர்கள்? என்ன நியாயம் கொண்டு தீர்ப்புப் பண்ணினீர்? அவருக்கு விரோதமாய் வந்த சாட்சி என்ன?

கேளுங்கள், காய்பா சொல்லுகிறுர்; அவன் தேவதூஷணம் சொன்னுன்; ''மனுஷ குமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்'' என்று அவன் சொன்னுன். நான் அதைக் கேட்டபொழுது அவன் தேவதூஷணம் சொன்ன குற்றவாளி என்று சொல்லி என் வஸ்திரங்களைக் கிழித்து, மரணத்துக்குப்

அந்த இருண்ட உலகத்துக்குத் திரும்பிபோய் அந்த மனிதரை எச்சரித்து என்னைக்குறித்தும்,என்இராஜ்ஜியத்தைக் குறித்தும், தேவனுடைய ஜனங்களுக்கு இருக்கும் இளைப்பாறுதலைக் குறித்தும் சொல்லப் போகிறாயோ என்றார். அந்த மனுஷன் அதன் பின்பு ஒருக்காலும் தான் மரிக்க வேண்டும் என்று விரும்பவில்லை; தான் ஜீவிக்கக்கூடிய காலமெல்லாம் ஜீவிக்கவும் மனிதருக்கு கிறிஸ்துவையும், மோட்சத்தையும் குறித்துச் சொல்லவும் வாஞ்சையுள்ளவனாய் இருந்தான். அதுதான் நாம் செய்ய வேண்டும். என்று தேவன் விரும்புவது. இனிமேல் இளைப்பாறுவோம் இளைப்பாற நித்திய காலம் இருக்கிறது.

சபையானது வேலை செய்தற்கான இடம்; அதிலே நமது வேலை முடிந்தவுடனே உயர வாருங்கள் என்ற அழைப்பு நமக்கு வரும். மோட்சத்திலே உள்ளவைகள் இம்மாத்திரம் அல்ல, நமது கிரீடத்தை அங்கே பெற்றுக் கொள்வோம். 2. தீமோ. 4. 8-ல் ''இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்'' என்று வாசிக்கிறோம். தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது; தேவன் அப்படி வாக்குப் பண்ணியிருக்கிறார். ''மரண பரியந்தம் உண்மையாய் இரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' பவுல் என்னத்திற்காக ஓடினார்? ரட்சிப்புக்காகவா? பதினாயிரம் முறை இல்லை என்கிறேன். அதைச் சிலுவை அண்டையிலே பெற்றுக் கொண்டாரே! அது காரியம் வெகு காலத்துக்கு முன் தீர்ந்தாயிற்று. பவுல் ஒரு கிரீடத்துக்காக ஓடினார். மோட்சத்தில் அநேகர் பிரவேசிப்பார்கள், அவர்களுக்குக் கிரீடம்

இராது. ஐயோ! கிரீடமில்லாத கிறிஸ்தவர்கள் நான் பவுலின் சரித்திரத்தை வாசிக்கும் போதெல்லாம் அவரு டைய பெயரைக் கேட்கும்போதெல்லாம் என்னைக்குறித்து வெட்கப்படுகிறேன். சாத்தான் பவுலை மேற்கொள்ள வில்லை, சாத்தான் ஒரு போதும் அவரைச் சரியான வழி யில் நின்று விலக்கவில்லை. அவர் தன் கண்ணைக் கிறிஸ்து விலே வைத்தபடியே ஓடினார். இப்பொழுது கிரீடத்தைத் தரித்திருக்கிறார். பவுலே! நீர் என்னத்துக்காக ஆசைப் பட்டீர்? ஒரு பெயருக்காகவா? நீர் இவ்வளவு சொல்ல ரிய வாஞ்சையாய் இருந்ததென்ன? என் கிரீடத்துக்காக என்று பவுல் சொல்லுகிறார். உம்மைப் பற்றி அவர்கள் சொல்லுகிறதைக் கேட்டீரோ? உலகத்தை மேல் கீழாய்த் திருப்பப் பிரயாசப்படுகிற வாயாடி என்கிறார்கள்; உம்மை கொலை செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள்; யூதர் உமக்கு விரோதமாய் எல்லா வசையும் சொல்லுகிறார்கள் என்கி றோம். எனக்குத் தெரியும், அவைகளில் ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன் என்று அவர் சொல்லுகிறார்.

அவர் பக்கமாய் வந்து நில்லுங்கள். முப்பத்தொன்பது அடி அவரை அடித்தார்கள், நாலுதரம் மிலாறுகளால் அடிபட்டார், திரும்பவும் அடிக்கப்போகிறார்கள் பவுலே! இந்த வில்லங்கத்தினின்று நீர் விலகும்பொழுது என்ன செய்வீர்? "செய்வதா?" ஒன்று செய்கிறேன். "தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று பவுல் சொல் லுகிறார். அடிகளைக் குறித்துக் கவலைப்படுவாரோ? இந்த அற்பமான உபத்திரவங்கள் என்னைத் தடுக்கும் என்று நினைக்கிறீர்களோ என்கிறார். ஆ! ஒரு அடி நமது முதுகில் பட்டால் எவ்வளவு சஞ்சலப்படுவோம்! அதைக் குறித்து எத்தனை புஸ்தகங்கள் எழுதுவோம் என்று எனக்குத்

தெரியாது. நம்மை இரத்தச்சாட்சிகள் என்று சொல்ல விரும்புவோம்; பவுல் அவைகளை அற்பமான உபத்திரவங்கள் என்கிறார்.

இன்னும் பார்ப்போம். அவரைக் கல்லால் எறிந்தார்கள். அவர் சரீரம் முழுதும் நொறுங்குண்டு இரத்தம் சொரிகின்றது. அந்த யுத்த வீரன் திரும்பவும் எழுந்து தனது ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளுகிறார். என்ன செய்யப் போகிறார்? பவுலே! இதற்குத் தப்பிக்கொண்டீர்! இனி என்ன செய்யப் போகிறீர் என்றால், செய்கிறதா? ஒன்று செய்கிறேன்; பந்தயத்துக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். எனது கிரீடத்தை இழந்துபோவேனே என்கிறார். ஆகையினாலே அவர் ஒருக்காலும் வலது இடது புறமாகத் திரும்புகிறதில்லை; தனது கண்களைக் கிரீடத்தின் மேலே வைத்துக்கொள்கிறார். ''இதுமுதல் வாடாத ஒரு கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது'' என்கிறார்.

அவரைத் திரும்பவும் பாருங்கள். அவர் மக்கெதோனியாவுக்குப் போகிறார். பிலிப்பி பட்டணத்தில் அவருக்குக் கிடைக்கும் முதற்காரியம் ஜெயில். பத்தொன்பதாம் நூற்றாண்டாகிய தற்காலத்தில் ஒரு கிறிஸ்தவனுக்கு அது நேரிடுமாகில் எவ்வளவு கூக்குரல் உண்டாகும்! மறியல் கூடத்துக்குள் எவ்வளவு புலம்புதல் இருக்கும்! அதை விட்டு விலகும்படி எவ்வளவு யோசனை உண்டாகும்! நஷ்டத்துக்கு எவ்வளவு வழக்குகள் வரும். இந்த முதிர்ந்த யுத்த வீரன் அப்படிக் கவனிக்கவில்லை. அவர் ஒரு நடுராத்திரியில் சீலாவே! என்று கூப்பிட்டு, நமது சாயரட்சை ஆராதனைக்கு நேரம் வந்துவிட்டது என்கிறார். அங்கே அந்த மறியல் வீட்டிலே முதுகில் ரத்தம் வடிய, கால்கள்

விலங்கில் மாட்டியிருக்க அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டு களைப் பாடினார்கள். அது ஸ்தோத்திர கீதம் பாட நாம் ஒருபோதும் நினைக்கமாட்டாத இடம்; நாம் பாடினால் ஒரு புலம்பல் பாடுவோம். பவுலோ அப்படி நினைக்கவில்லை. நான் பிலிப்பிய மறியல்கூட வழியாய் மோட்சத்துக்குப் போவது தேவனுக்குச் சித்தமானால் எனக்கு வித்தியாசம் இல்லை. சீலாவே! சந்தோஷப்பட்டுக் களிகூர். "இயேசு வின் நிமித்தம் நாங்கள் பாடுபடுகிறதற்கு பாத்திரராய் எண்ணப்பட்டதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத் துகிறேன்" என்கிறார். அவர்கள் ஸ்தோத்திர பாட்டைப் பாடினபொழுது மற்ற மரியல்காரர் கேட்டார்கள்; அதி லும் விசேஷமாக கர்த்தர் கேட்டார். மறியல் வீடு அதிர்ந் தது; சங்கிலிகள் சுழன்றன; அவர்கள் விடுதலை ஆனார்கள். மகா அலெக்சாண்டர் தனது சேனைகளால் உலகத்தை நடுங்கப்பண்ணினார் என்று பேசுகிறோம். இங்கே ஒரு சிறிய கூடாரம் தைக்கிற மனுஷன் சேனைகள் இல்லாமல் உலகத்தை நடுங்கப்பண்ணுகிறான்.

அப்பால் அவருடைய மகத்துவமான ஜீவியத்தின் முடிவைப் பாருங்கள். அவர் ரோமையிலே இருந்தார். சொல்லப்படுகிற காலம் சமீபமானபொழுது "நான் தேகத்தைவிட்டுப் பிரியுங்காலம் வந்தது; நல்ல போராட் டத்தைப் போராடினேன்; விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று தீமோத்தேயுவுக்கு எழுதினார். விசு வாசத்தைக் காத்துக்கொண்டார், தேவனுக்கு ஸ்தோத் திரம். அவர் பிரிந்துபோய் பொய் உபதேசத்தைப் போதிக்கவில்லை கிறிஸ்து மரித்தார், இரட்சிப்படைய மனுஷர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்கிற பழைய நல்ல சுவிசேஷத்தை விசுவா

பெந்தேகோஸ்து நாளில் அப்படியே சாட்சியிட்டார். ''இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவும் ஆக்கினார்'' என்றார். சரித்திரம் சொல்லுகிறது: சிலகாலத்தின் பின் விரோதிகள் பேதுருவைப் பிடித்துக் கொலை செய்யப் போனார்கள் அப்பொழுது அவர், என் எஜமான் மரித்தது போல் மரிக்க நான் அபாத்திரன்: ஆகையால் என்னைத் தலைகீழாய்ச் சிலுவையில் அறையுங்கள் என்று சொன்னார். அப்படியே அவர்கள்செய்தார்களாம். இவ்வளவாய்ப் பேதுரு தன் எஜமானைப் பற்றி நினைத்தார்.

இப்போது இயேசுவுக்கு அன்பான சீஷன் என்ன சொல்லுகிறார் என்று கேட்போமாக: கிறிஸ்துவைப் பற்றி யாரிலும் பார்க்க அதிகமாய் அவனுக்குத் தெரியும், தன் இரட்சகரின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தவன். அப்போது அவருடைய அன்பு நிறைந்த உள்ளத்தின் சத்தம் அவன் காதில் கேட்டிருக்கும்; அவரைப்பற்றி அவன் நினைத்தது என்னவென்று நீங்கள் அறிய விரும்பினால் அவனுடைய சுவிசேஷத்தைப் பாருங்கள்.

சிங்காசனத்தை விட்டு வந்தஇராஜ வம்சத்து இராஜனாக மத்தேயு அவரைப்பற்றி எழுதுகிறான்; லூக்கா அவரை மனித குமாரன் என்கிறான்; யோவான் தனது இறகை எடுத்து ஒருத்துவ மதத்தாருடைய போதனையை ஒரே கிறுக்காய்க் கிறுக்கிப் போடுகிறான். அவர் ஆதாமின் காலத்துக்கும் முந்திச்சென்று ''ஆதியிலே வார்த்தைஇருந்தது. அவ்வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தையே தேவன்'' என்று சொல்லுகிறார். வெளிப்படுத்திய விசேஷத்தைப் பாருங்கள், அவரை ''பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரம்'' என்கிறார். இப்படியே

யோவான் அவரை நன்ருய் அறிந்தபடியால் அவரைப் பற்றி நல்ல சாட்சி கொடுக்கிருன்.

சந்தேகமுள்ள தோமாவையும் அழைக்கலாம். தோமாவே! நீ அவிசுவாசம் கொள்ளவில்லையோ? அவர் உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிக்கமாட்டேன் என் கிருய்; அவர் விலாவின் காயத்தை உன் விரல்களால் தொட்டாய், அவரைப்பற்றி என்ன நினைக்கிருய்? என் ஆண்டவரே! என்தேவனே!'' என்று தோமா சொல்லு கிருன்,

அப்பால் தெக்கபோலிக்குப் போங்கள். அங்கே கிறிஸ்து பிசாசுகளைத் துரத்திஞர். அத்தேசத்தாரை அழைத்து நீங்கள் அவரைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று விசாரியுங்கள். ''எல்லாவற்றையும் நன்ருய் செய் தார்'' என்கிருர்கள்.

நாம் கூப்பிடுவதற்கு வேறு சாட்சிகளும் இருக்கிருர் கள். அவருடைய சத்துருக்களில் அதிக கொடியவனும் துன்பப் படுத்தினவனுமாகிய பவுலை அழைக்கலாம். சீறி பயமுறுத்திக் கொலைசெய்யப் போகையில் அஎன் அவரை சந்தித்தான். ''சவுலே! சவுலே! நீ என்னை ஏன் துன்பப் படுத்துகிருய்'' என்று கிறிஸ்து சொல்லுகிருர். நான் உனக்கு என்ன செய்தேன்? எவ்விதமாயாவது நான் உனக்குத் தீமை செய்தேனு? நான் வந்தது உனக்கு நன்மை செய்ய அல்லவா? சவுலே, ஏன் எனக்கு இப்படிச்செய்கிருய் என்றும் அவர் கேட்கலாம். ''ஆண்டவரே, நீர் யார்'' என்று சவுல் கேட்கிருன். ''நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே'' என்கிருர். தம்முடைய பெயரைக் குறித்து அவர் வெட்கப்படவில்லை என்பதைப் பாருங்கள். அவர் மோட்ச

அதிபதியாய் இருந்தாலும் நான் நாசரேத்து இயேசு என்கிறார் அந்த ஒரு சம்பாஷணை பவுலில் அவ்வளவு மாறுதலுண்டாக்கினது "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு எல்லாவற்றையும் நஷ்டம் என்று விட்டேன், குப்பையாகவும் எண்ணுகிறேன்" என்று பவுல் சில வருஷங்களுக்குப்பின்பு சொன்னாரே.

நான்இன்னும் அதிகம் சொல்லக்கூடும். இவ்வுலகத்தை விட்டு மறுலோகத்துக்கும் போய் தேவ தூதர்களை அழைத்து கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்கலாம். உலகம் உண்டாகுமுன் அவர் தமது பிதாவின் மடியில் இருக்கக்கண்டார்கள். சிருஷ்டிப்பின் தோற்றத்துக்கு முன்னும் விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடினதற்கு முன்னும் அவர் மோட்சத்தில் இருந்தார். அவர் சிங்காசனத்தை விட்டிறங்கி மாட்டுக் கொட்டிலுக்குள் சென்றதைக்கண்டார்கள். அது அவர்களுக்கு எவ்விதமான காட்சியாய் இருந்தது! பரலோகத்திலுள்ள இவர்களிடம் அப்பொழுது அவரைக்குறித்து என்ன நினைத்தீர்கள் என்று கேளுங்கள். அவர்கள் பேசும்படி ஒரு முறை இடம் கிடைத்தது. ஒரு முறை பரலோகத்தாருடைய சத்தம்கேட்கிறது. பெத்லகேம் வெளியிலே அவர்கள் பாடும் பாட்டைக் கேளுங்கள். "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" என்கிறார்கள். உலகத்தை ரட்சிக்கும்படி சிங்காசனத்தை விட்டு வருகிறார்; அவரைக் குறித்துத் தேவதூதர்கள் பாடினது ஆச்சரியம் அல்ல.

இவர்கள் எல்லாரையும் விட ரட்சிக்கப்பட்ட பரிசுத்தர்கள் இருக்கிறார்களே! அவர்கள் அவரை முக முகமாய் காண்கிறார்கள். பூமியிலே ஒருவரும் அவரை அறியவில்லை ஒருவரும் அவருடன் உண்மையாய்ப் பழகி இருக்கவில்லை. அந்த லோகத்திலோ அவர் அறியப்பட்டிருக்கிறார். அனாதியாய் அவர் அங்கே இருந்தார். அவர்கள் அவரைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்? மோட்சத்தில் இருந்து எழும்பும் தொனி அவருடைய நாமத்தை மேன்மையாக்கி மகிமைப் படுத்தும் ஆர்ப்பரிப்பின் தொனியாய் இருக்கிறது. யோவான் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானபோது "அடிக்கப் பட்ட ஆட்டுக் குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தைம் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் றெற்றுக்கொள்ளப் பாத்திரராய் இருக்கிறார் என்று பதினாயிரம் பதினாயிரமும் ஆயிரம் ஆயிரமுமானவர்கள் ஆர்ப்பரிக்கும் சத்தத்தைக் கேட்டேன்" என்று சொல்கிறானே! ஆம். அவர் இவைகள் எல்லாவற்றிற்கும் பாத்திரர். மோட்சத்தவர்கள் தானும் அவருடைய சர்வ மேன்மையையும் புகழ முடியுமா? ஆ! உலகத்தவர்கள் அச் சத்தத்தைக் கேட்டு மோட்சத்தவர்களோடு கூடி வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திரர் என்று பாடுவார்களாக.

இன்னும் உயர்ந்த ஒரு சாட்சி இருக்கிறது. இயேசு யோவானிடம் ஞானஸ்நானம் பெற்று யோர்தானைவிட்டு ஏறின பொழுது, மோட்சத்தில் ஒரு சத்தம் உண்டாயிற்று பிதாவாகிய தேவன் பேசினார். அது கிறிஸ்துவைக்குறித்து அவர் இட்ட சாட்சி. "நீர் என்னுடைய நேச குமாரன்,

உம்மில் பிரியமாய் இருக்கிறேன்'' என்றார். ஆம், பிதா வாகிய தேவன் குமாரனைப் பற்றி நல்ல எண்ணமாய் இருக்கிறார். தேவன் இவரில் பிரியமாய் இருந்தால் நாமும் பிரியமாய் இருக்கவேண்டும். பாவியும் தேவனும் இரு பேரும் கிறிஸ்துவில் பிரியமாய் இருந்தால், பாவியும் தேவ னும் ஒருவரை ஒருவர் சந்திக்கக்கூடும். கேட்பவனே! பிதா சொன்னது போல் நான் இவரில் பிரியமாய் இருக்கி றேன் என்று நீயும் சொல். அந்த நிமிஷம் தேவனுடன் சமாதானம் ஆகிறாய். இந்த சாட்சியை நம்பு. இந்தக் கடைசியான சாட்சி சேனைகளின் கர்த்தரும் இராஜாதி ராஜனும் ஆகிய அவருடைய சாட்சி. இதை நம்பு. எல் லாரும் அறியும்படி பின்னும் ஒருமுறை அச்சாட்சியைச் சொல்லுகிறார். கர்த்தர் மறுரூபமான மலையிலே பேதுரு வும் யாக்கோபும் யோவானும் சமுகமாய் நிற்கையில், 'இவர் என் நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்'' என்று அசரீரியாய் சொன்னாரே! அந்தச் சத்தம் எதிரொ லியாய்ப் பலஸ்தீன நாடெங்கும் சென்றது; ஒரு சமுத்தி ரம் துவங்கி மறு சமுத்திரம் வரைக்கும் பூமி எங்கும் சென் றது. ஆம், இவருக்குச் செவிக்கொடுங்கள் என்ற அந்தச் சத்தம் இன்னும் தொனிக்கிறது.

என் சிநேகிதனே! இன்றைக்கு அவருக்குச் செவி கொடுப்பாயா? கிறிஸ்து உனக்கு என்ன சொல்லுகிறார்? செவிசாய்த்து உற்றுக்கேள். ''வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில்

கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்கிறுர். இப்படிப் பட்ட இரட்சகரை நீ விரும்பவில்லையா? அவரை விசுவாசியாதிருப்பாயா? உன் முழு இருதயத்தோடும் உன் முழு மனதோடும் அவரை நம்பு. அவருக்காக ஜீவி. அவர் நமக்காகத் தமது ஜீவனைக்கொடுத்தால் அவருக்காக நாம் நமது ஜீவனைக்கொடுப்பது சிறிய காரியம் அல்லவா? எனக்காக அவர் சிலுவையைச் சுமந்து அதில் மரித்தாராளுல், அவருக்காக அந்தச் சிலுவையைச் சுமக்க நான் சம்மதிக்க வேண்டாமா? ஆம் நாம் அவரை நேசிக்க நியாயம் இல்லையா? இப்படிப் பட்ட இரட்சகருக்கு விரோதமாய்ப் பேசுகிறது சரி என்றும், மேன்மை என்றும் எண்ணுகிறுயா? அவரைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று சொல்வது நியாயம் என்று நினைக்கிறுயா? ஆ! தேவனுடைய ஒரே பேறுன குமாரனை நமது இரட்சகராக ஏற்றுக் கொண்டு, பிதாவாகிய தேவனை மகிமைப் படுத்துவோமாக. இப்படிச் செய்யத் தேவன் நமக்கு உதவி செய்வாராக.

VI

மோட்சம்

1-ம் பந்தி

சில காலத்துக்கு முன்னே நான் ஒரு கூட்டத்திற்குப் போகையில் சிநேகிதன் ஒருவன் என்னை நோக்கி: எதைக் குறித்துப் பிரசங்கம் பண்ணப்போகிறீர் என்று கேட்டார். மோட்சத்தைக் குறித்துப் பிரசங்கிக்க எண்ணி இருக்கி றேன் என்றேன். அவர் மிகவும் மனமடிவு கொண்டு, நீர் நடபடிக்கைக்குரிய சில காரியத்தைப் பற்றிப் பேசுவீர் என்று காத்திருந்தேன், நாம் மோட்சத்தைக் குறித்துப் பேச அங்கே சேர்ந்த பின்பு போதிய நேரம் இருக்குமே என்றார்.

நாம் மோட்சத்தைக் குறித்து யாதொன்றை அறி வது தேவனுக்குப் பிரியம் இல்லாவிட்டால் அதைக் குறித்து இவ்வளவு எழுதியிருக்கமாட்டார் என்று நினைக் கிறேன். இனிமேல் மோட்சம் நமது வீடாய் இருக்கப் போகிறதாகில் அதைக்குறித்து அறியக்கூடிய எல்லாவற் றையும் அறியப் பிரயாசப்படுவோம். அப்போது அதற் கென்று அதிகமாய் ஜீவிக்கவும் விரும்புவோம். நாம் தூர மான ஒரு தேசத்திற்குக் குடிபோக இருந்தால் அதைக் குறித்துக்கேள்விப்பட ஒருக்காலும் அலுத்துப்போகோம். அங்குள்ள ஜனங்களைக் குறித்தும் தேச சவுக்கியத்தைக் குறித்தும் பிரயோஜனங்களைக்குறித்தும் பள்ளிக்கூடங்கள் கலாசாலைகள் முதலியபிள்ளைகளுக்கான சிலாக்கியங்களைக்

குறித்தும் நமது தொழில்களுக்கான வசதிகளைக் குறித்தும் கூடிய எல்லாவற்றையும் அறிய விரும்புவோம். அத்தேசத்தைக் குறித்து யாதொன்றும் நாம் அறிய விரும்பாத காரியமாய் இராது. வரும் உலகத்தில் நாம் அனவரதமும் ஜீவிக்கப்போகிறவர்களாய் இருக்க, அதைக் குறித்து நாம் அதிகமாய் அறியவும் கேட்கவும் விரும்புவோமாக. நீங்கள் ஏன் மேலே பார்த்து ஜெபம் பண்ணுகிறீர்கள்? தேவனுடைய வாசஸ்தலம். வேறு திசைகளில் இருப்பதைப் பார்க்கிலும் மேலே அதிகமாயுள்ளதோ என்று சிலர் கேட்கிறார்கள். மோட்சத்துக்கு ஒரு திசையைக் குறிப்பதும் அதுமேலே என்பதும் சரி என்று நான் நினைக்கிறேன். இயேசுக்கிறிஸ்து ஒருவரே மோட்சத்தைக் குறித்துச் சொல்லக்கூடியவர், அவர் அங்கே இருந்தவர். அவர் என்ன சொல்லுகிறார்? யோவா. 3ம் அதிகாரத்தில் "பரலோகத்தில் இருந்திறங்கினவரும் பரலோகத்தில் இருக்கிறவருமான மனுஷ குமாரனே அல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனும்இல்லை" என்கிறாரே. இறங்கினவன் ஏறினவன் என்பது மேலிடத்தையே குறிக்கிறது. மாற். 7ம் அதிகாரத்தில் அவர் வானத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விட்டார். என்னப்படுகிறது. மேலிடத்தையே அண்ணாந்து பார்ப்பது. பூமியிலே அவருடைய வேலை முடிந்து அவர் தம்முடைய பிதாவின் வீட்டிலுள்ள அநேக வாசஸ்தலங்களுக்குத் திரும்பிப் போகும் சமயத்தில், தாம் நேசித்தவர்கள் மத்தியிலே நிற்கும் போது "உயர எடுத்துக் கொள்ளப்பட்டார், அவர்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது" என்று சொல்லப்படுகிறது. மேலிடைத்தையே உயர என்பது. மோட்சம் தேவனுடைய வாசஸ்தலம். இதுதான்

விசேஷ காரியம். அது எந்தத் திசை எவ்வளவு தூரம் என்பது காரியம் அல்ல. தேவன் அங்கே இருக்கிறார். அது போதும், மோட்சம் அதிக தூரமானதல்ல என்பதும் நிச்சயம். ஏனெனில் அவர் அங்கே இருந்து பாவி பெருமூச்சோடு தாழ்மையாய்ப் பண்ணும் ஜெபத்தைக் கேட்கிறார்.

அவன் கண்களில் தத்தளிக்கும் மனஸ்தாபக் கண்ணீரைக் கவனிக்கிறார். இதுவும் அல்லாமல் மனுஷனும் பூமியில் இருந்து மோட்சத்தைப் பார்க்கக்கூடும்; தேவன் அவனுடைய கண்களைத் திறக்கும்போதும் திரைச்சீலையை எடுக்கும்போதும் ஸ்தேவானைப் போல மோட்சத்தில் இருப்பவைகளை அவன் காணக்கூடும் அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் வானத்தை அண்ணாந்து பார்த்து தேவனுடைய மகிமையையும் அவருடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு, “அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறதையும் காண்கிறேன்” என்றான். மோட்சம் ஏன் ஆசைப்படத்தக்கது என்பதை ஸ்தேவான் கண்டுகொண்டார்; கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்திலே நிற்கக் கண்டார். இராஜா தமது அலங்காரத்தோடே அங்கே இருந்தார். அதுவே மோட்சத்தை மோட்சமாக்குகிறது. நீர் மோட்சம் சேரும்பொழுது அங்கே என்ன செய்யக் காத்திருக்கிறீர் என்று ஒருவனிடம் சிலர் கேட்டார்கள். அவன், நான் கிறிஸ்துவை ஒரு முறை திருப்தியாகப் பார்க்க ஐந்நூறு வருஷம் செல்லும். பின்பு நான் அப்போஸ்தலரையும் பரிசுத்தவான்களையும் இரத்தச்சாட்சிகளையும் பார்ப்பேன் என்றான். ஆம், நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்கள் அற நம்

மைக் கழுவிய கர்த்தரை ஒருதரம் காண்பது இந்த இருளான உலகத்தில் நாம் படக்கூடிய எல்லாவற்றிற்கும் போதிய பலனாய் இருக்கும் என்று நம்புகிறேன்.

சாகக்கிடந்த ஒரு தாயின் சிறு பிள்ளை ஒன்றை இனத்தாரில் சிலர் தங்களுடன் இருக்கும்படி கூட்டிக் கொண்டு போனார்கள். பிள்ளை, வீட்டுக்குப் போகிறேன், ஆச்சியைக் காணப் போகிறேன் என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தது: சாவுச்சடங்கு முடிந்த பின் பிள்ளையை வீட்டுக்கு கொண்டு போனார்கள். அவள் வீடெங்கும் ஓடி படிக்கிற, படுக்கிற, இருக்கிற, சம்பாஷிக்கிற அறைகள் எல்லாவற்றிலும் தேடினாள்; வீட்டில் ஒவ்வொரு இடத்தையும் பார்த்தாள். தாயைக் காணாத பொழுது முன்னிருந்த இடத்துக்குதானே என்னைக் கொண்டு போங்கள் என்று சொன்னாள். பிள்ளையின் தாய் வீட்டில் இல்லாத பொழுது பிள்ளைக்கு வீட்டின் இனிமை ஒழிந்து போயிற்று. என் சிநேகிதரே! மோட்சத்தின் விசேஷ சிறப்பு அதின் முத்துவாசல்களும், பசும் பொன் வீதிகளும், தூதர் கீதங்களும் அல்ல; கிறிஸ்துவே அதின் சிறப்பு. அவர் அங்கே இராவிட்டால் மோட்சம் மோட்சமாய் இராது. அவர் பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார் என்று நாம் அறிவோம். இந்தக் கண்கள் இனி மேல் அவரைக்காணும். அவர் சாயலாய் நாம் எழும்பும் பொழுது திருப்தியாவோம்.

வேறு அநேகரும் மோட்சத்தில் இருக்கிறார்கள். அங்கே எங்கள் சிநேகிதர் இருப்பார்கள்; எங்கள் பிதாவாகிய தேவன் அங்கே இருப்பார்; குமாரனாகிய கிறிஸ்து அங்கே இருப்பார். தேவதூதர்கள் அங்கே இருப்பார்கள். சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலும் இருந்து வந்ததும் ஒருவனும் எண்ணக்

கூடாததுமாகிய ஜனங்கள் அங்கே இருப்பதாக வெளிப்படுத்தல் 7-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். வெள்ளை அங்கிகளைத் தரித்துத் தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்துக்கு முன்பாக நிற்கிற மீட்கப்பட்ட ஜனங்களைக் குறித்து வாசிக்கிறோம். ஆம், மோட்சத்தில் எங்களுக்குச் சிநேகிதர் உண்டு.

பிள்ளையைச் சாகக்கொடுத்த ஒரு பிதா அன்றைக்கு என்னை நோக்கி: இழந்துபோன எனது பிள்ளை இயேசுவிடம் போயிருக்கிறதென்று நினைக்கிறீரோ என்று கேட்டான். தாவீது தன்மகன் இறந்துபோனபொழுது "நான் அதனிடத்திற்குப் போவேனே அல்லாமல் அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறதில்லை" என்று சொன்னதையே நான் அவனுக்குச் சொன்னேன். நாம் பராமரிப்பதிலும் அதிகமாய் இராஜா அவர்களைப் பராமரிக்கக்கூடும் என்பது எனக்கு ஒரு இனிமையான கருத்து. சிறு பாலர்களை இழந்துபோன உங்களுக்கும் அப்படி இருக்கும் என்று எண்ணுகிறேன். நித்திய பட்டணத்தில் உள்ளவைகளை நாம் பார்க்கக் கூடுமாகில் அங்கே மேய்ப்பனானவர் அவைகளைப்பசுமையான மேய்ச்சலுக்கும் அமைதியான நீரூற்றுக்கும் நடத்திப்போவதைக் காண்போம். நாம் இழந்துபோன ஒவ்வொரு பாலனையும் அதின் அன்பான மாதா பராமரிப்பதிலும் அதிகம் அதிகமாய் அவர் தாமே பராமரிப்பார். பாடுகளும் பாவமும்நிறைந்த இந்தச் சஞ்சல பூமியில் இருப்பதிலும் எப்பொழுதும் கர்த்தருடன் இருப்பது அவர்களுக்கு இனிமை அல்லவோ? நம்முடைய சிநேகிதரை நாம் இழந்து போகவில்லை. அவர்கள் நமக்கு முன்னே அங்கே போயிருக்கிறார்கள்: தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடன் இருக்க ஆசைப்பட்டார்

கள். அவர் அந்த ஆசையைத் திருப்தி செய்தார். பவுல் தானும் ஜீவிப்பது கிறிஸ்துவுக்காக இருந்தும் அவருடன் இருப்பது அதிக நலம் என்று எண்ணினரே!

மோட்சத்தில் உள்ளது இம்மாத்திரம் அல்ல. ஒரு முறை சீஷர் பிரசங்கம்பண்ணப் புறப்பட்டுப்போய் அதிசயமானவைகளைக் கண்டார்கள்; அதிகவல்லமையை உடையவர்களாய் பிசாசுகளைத் துரத்தி, அநேக அற்புதங்களையும் செய்தார்கள்; திரும்பி வந்தபோது அதிக உற்சாகமுடையவர்களாய் இருந்தார்கள்; பெரிய எழுப்புதலான காலத்தில் கிரியை செய்பவர்கள் சொல்வதுபோல், இது மகிமையானது அல்லவோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். கிறிஸ்து அவர்களை நோக்கி நீங்கள் இதைக்குறித்துச் சந்தோஷப்பட வேண்டாம்; நீங்கள் எதைக்குறித்துச் சந்தோஷப்பட வேண்டும் என்று சொல்லுகிறேன். "ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" என்கிறார். இது எவ்வளவு மகிமையான கருத்து! நமது பெயர்கள் மோட்சத்தில் எழுதப்பட்டிருக்கிறது, அதைக்குறித்து நாம் நிச்சயம் அடையலாம். தேவனுடைய பிள்ளைகள் தங்கள் நாமங்கள் மோட்சத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்று அறியாதிருந்தால் அவர்கள் எப்படிச் சந்தோஷப்படுவார்கள்! அதைக்குறித்து யாதொரு ஐயம் இருக்குமாகில் சந்தோஷப்படுங்கள் என்று கிறிஸ்து சொன்னபொழுது, அவர்கள் எப்படிச் சந்தோஷப்படக் கூடும்? நாம் கிறிஸ்தவர்களாகில் அதை அறிவதும் அதைப் பற்றி நிச்சயப்படுவது மாத்திரம் அல்ல, அதில் சந்தோஷப் படுவதும் நமது சிலாக்கியமே.

நமது பெயர்கள் மோட்சத்தில் எழுதப்பட்டிருக்கி றதோ என்பதே நம்முடைய ஜீவியத்தில் பெரும் கேள்வி. நமது நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கின்றதோ? சபை புஸ்தகத்தில் இருக்கின்றதோ என்பதல்ல. சபைப்புஸ்தகம் எழுதப்படும் விதம் மோட்சபுஸ்தகம் எழுதப்படுவதுபோல் இராது. மோட்சத்தில் எழுதப்படாத பெயர்கள் சபை டாப்பில் இருக்கலாம். தேவனுடைய எழுத்தைக்குறித்தே பேசுகிறேம். தேவனிடத்தில் புஸ்தகங்கள் இருக்கின்றன. கெட்டுப் போனவர்களின் புஸ்தகம், இரட்சிக்கப்பட்டவர் களின் புஸ்தகம், ஜீவனுள்ளோரின் புஸ்தகம், மரித்தோரின் புஸ்தகம் எனப் பல புஸ்தகங்கள் இருக்கின்றன. எந்தப் புஸ்தகத்தில் உனது பெயர்இருக்கிறது? உனது பெயர் ஜீவ புஸ்தகத்திலிருக்கிறதென்று நீ இந்த நிமிஷம் சந்தோஷப் படக் கூடுமோ? கேள்வியை நன்ருய் சீர்தூக்கிப் பார், அது மகாவிசேஷமானது. ஏனெனில் ''ஜீவபுஸ்தகத்தில் எழுதப் படாதவனுய்க் காணப்படுபவன் எவனே, அவன் அக்கினிக் கடலிலே தள்ளப் பட்டான்'' என்று சொல்லப் படுகிறது. மோட்சத்தைக் குறித்து எழுதப் பட்டிருப்பதோ, ''தீட் டுள்ளதும், அருவருப்பையும, பொய்யையும் நடப்பிப்பது மாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டி யானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப் பட்டவர்கள் மாத் திரம் அதிலே பிரவேசிப்பார்கள்'' என்பதே.

கொஞ்சக் காலத்துக்கு முன்னே சில சிநேகிதர் பய ணம்பண்ணிக் கொண்டு இங்கிலாந்திலுள்ள ஒரு விடுதி வீட்டுக்கு வந்தார்கள். இங்கே தங்க இடம் இல்லை. ஆட்கள் நிறைந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. வேறு எங்கேயாவது போய்த் தங்கவேண்டும் என்று அவர் கள் புறப்படும்போது அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு

அம்மாள், நான் இங்கே தங்க எண்ணுகிறேன்; நீங்கள் போய் வேறிடம் பாருங்கள் என்றாள். நீ இங்கே தங்குவது எப்படி? விடுதி வீட்டில் இடம் இல்லை எனப்பட்டதே என்றார்கள். அவள் உத்தரமாய் ஆ! பல நாட்களுக்கு முன்னே நான் தந்தி தபால் அனுப்பியிருந்தேன், எனக்கு ஒரு அறை ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது என்றாள். சிநேகிதனே! உன் பெயரை மோட்சத்துக்கு முன்னாக அனுப்பு! அதின் வாசல் உனக்குப் பூட்டப் பட்டிராது. நிச்சயமாய் இது நல்ல யோசனை, அப்போது எல்லாம் உனக்கு ஆயத்தமாய் இருக்கும். ஜீவியமாகிய யாத்திரை முடியும்போது தூதர்களின் சிறகுகளுடைவனாய் நீ பறந்து உலகம் உண்டானது முதல் ஆயத்தமாக்கப்பட்ட இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவாய். அநித்ய சுகங்களையும் பறந்துபோகும் சந்தோஷங்களையும் உடைய ஒரு வீட்டுக்காக அநேகர் இங்கே தங்கள் நேரத்தையும் பெலனையும் செலவிடுகிறார்கள். பரத்திலே ஒரு வாசஸ்தலத்துக்கு நீ உரிமையைத் தேடிக்கொள்ளாவிட்டால், உலகத்திலுள்ள மாளிகைகள் எல்லாம் உனக்கு என்ன பலனைத்தரும்?

கடந்துபோன எங்கள் யுத்த காலத்தில் காயம்பட்ட ஒரு போர்ச்சேவகன் சாகிறவண்ணமாய்த் தன் கட்டிலில் கிடந்தான். பூரண அமைதியான மரண அறையிலே திடிரெனச் சத்தம் உண்டாயிற்று. இங்கே இருக்கிறேன், இங்கே இருக்கிறேன் என்று சாகிற மனுஷனுடைய வாயிலிருந்து சத்தம் உண்டானது. சிநேகிதர்கள் அவனிடம் ஓடி, என்னவேண்டும் என்று கேட்டார்கள். உற்றுக் கேளுங்கள்! மோட்சத்திலே பெயர் டாப்புக்குக் கூப்பிடுகிறார்கள், நான் இங்கே இருக்கிறேன் என்று சொல்லுகிறேன் என்றான்.

சில நிமிஷத்தில் தாழ்ந்த சத்தமாய்த் திரும்பவும் "இங்கே இருக்கிறேன்" என்று சொல்லி இராஜாவின் சமுகத்துக்குப் போய் விட்டான்.

நமது பெயர் மோட்சத்திலே எழுதப்பட்டிருக்கிறது என்பதை நிச்சயமாக்கிக் கொண்டோமாகில் அடுத்த மகா பெரிய காரியம் நமது பிள்ளைகளின் பெயர் அங்கே எழுதப்பட்டிருப்பதே. வாக்குத்தத்தம் உங்களுக்கு மாத்திரம் அல்ல உங்கள் பிள்ளைகளுக்கும் உண்டாயிருக்கிறதே! மாதாவே! அந்தப்பிள்ளையின் பெயர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறதா? உங்கள் பிள்ளைகளுக்காக இந்த இருண்ட பூமியில் மிகுதியான செல்வத்தைத் தேடிவைப்பதிலும், அவர்கள் பெயர் அங்கே எழுதப் பட்டிருப்பது அதிகமான நன்மை அல்லவா? மறுமைக்கானவைகளில் கரிசனையில்லாத மகனைப் பற்றிப் பரிதபிக்கிறேன். தேவனுடைய ஜனங்களுக்கு உண்டாயிருக்கும் இளைப்பாறுதலைக்குறித்து, அவனுக்குச்சொல்லாத தாயைக்குறித்து, அதிலும் அதிகமாய் பரிதவிக்கிறேன். பிதாக்களும் மாதாக்களும் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய பரிசுத்த கடமைகளை அதிக நேசமாயும் உண்மையாயும் செய்யும்படி தேவன் அனுக்கிரகம் செய்வாராக. அப்போது பிள்ளைகள் உலகத்துக்கு ஓர் ஆசீர்வாதம் ஆவார்கள்; கடைசியிலே குறையாமல் முழுக் குடும்பமாய் மோட்சத்தில் வந்து கூடுவார்கள்.

இது காரியத்தைக்குறித்து நினைக்கும் பொழுதெல்லாம் இரண்டு பிதாக்கள் என் நினைவில் வருகிறார்கள் ஒருவர் மிசிசிப்பி ஆற்றோரத்தில் ஜீவித்த ஒரு பெரிய ஐசுவரியவான். அவன் இளமையிலே மரிக்க வந்த தனது மூத்த மகனைத் தப்புவிக்கக்கூடுமாகில், தன் முழுச்செல்வத்தையும்

கொடுத்து விடுவான். அவ்வளவு அவனை நேசித்தான். ஒரு நாள் அந்த பிள்ளை அறிவற்றவனாய் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டான், அவனைச் சுகப்படுத்த மனுஷன் செய்யக் கூடியதெல்லாவற்றையும் செய்தார்கள்; அனுகூலமே இல்லை, அவன் இறந்து போவான் என்று வைத்தியன் சொன்னான். ஒரு நிமிஷத்துக்காவது அவன் அறிவு தெளியும்படி நீர் செய்யக்கூடியது ஒன்றும் இல்லையோ என்று பிதா வெகு ஏக்கத்தோடு கேட்டான். அப்படி ஒரு வேளை ஆகலாம், ஆனால் அவன் பிழைப்பதோ கூடாது என்றான். கொஞ்ச நேரத்திற்குள் ஏங்கிக்கொண்டு நின்ற பிதாவின் விருப்பப்படியே அறிவு தெளிவாயிற்று. அப்போது பிதா மகனே! நீ சாகப்போகிறாய் என்று வைத்தியர் சொல்கிறார் என்க, மகன்: பிதாவே! நீர் எனக்காக ஒருபோதும் ஜெபம் பண்ணவில்லை, கெட்டுப்போன எனது ஆத்துமாவுக்காக இப்போழுது ஜெபம்பண்ண மாட்டீரோ என்றான். பிதா அழுதான், பிதா ஒருக்காலும் ஜெபம் பண்ணினதில்லை என்பது மெய். அவன் தேவனுக்கு அந்நியனாய்இருந்தான். கொஞ்ச நேரத்தில் ஜெபமற்ற அந்த ஆத்துமம் இருளான நித்தியத்துக்குப் போய்விட்டது, ஆ! பிதாவே! உன்மகன் மரிக்கிறவனாய் இருந்து தனக்காக ஜெபம்செய்ய உன்னைக் கேட்டால் பாரமான உன் இருதயத்தை உயர்த்தி நீ ஜெபம் செய்யக்கூடுமோ? உன் தேவனை அறிந்து, அவருடன் சம்பாஷிக்கக் கற்றுக் கொள்வது இம்மை மறுமை இரண்டிலுமுள்ள எல்லாவற்றிலும் அதிக மதுரமான கல்வி அல்லவோ? அதை உடையவனாய் இருக்கிறாயோ? அரிய பொக்கிஷமாகிய உனது பிள்ளைகளை இந்தத் தீய உலகமானது மரணத்துக்குக் குறிக்கும் முன்னமே அவர்களைப் பாலர் திருநாதனிடம் நடத்திக் கொண்டு போகிறாயோ?

மற்றப் பிதாவின் செய்தி இதற்கு எவ்வளவு மாறு னது! அவனுக்கும் ஒரு அருமையான மகன் இருந்தான். ஒருநாள் அவன் வீட்டுக்கு வந்தபோது அந்த மகன் மரண வாசலில் கிடக்கிறதாகஅறிந்தான். எங்கள் மகனில் பெரிய மாறுதல் வந்திருக்கிறதாய் காணப்படுகிறது, முன்னே சற் றுச் சுகவீனமாய் மாத்திரம் இருந்தாள்;இப்போது சீக்கிரம் மரிக்கப்போகிறதாய்க் காணப்படுகின்றது என்று மாதா அழுது அழுது சொன்னுள். பிதா மகனுடைய அறைக் குப்போய் தனது சிறு மகன் நெற்றியிலே கையை வைத் தான், பிள்ளை சாகிறது தெரிந்தது, மரணத்தின் குளிர் கையில் தோன்றினது. மகனே! நீ சாகப்போகிருய் என்று உனக்குத் தெரியுமா என்ருன். இல்லை பிதாவே! நான் செத்துப்போவேனே என்ருன். ஆம், மரணம் கிட்டிவிட் டது என்று பிதா சொன்னுன். இன்றைக்கு மரித்துப் போவேனே என்ருன். ஆம், மகனே பொழுது படுமளவும் உன் ஜீவன் இருக்கமாட்டாது என்க: அப்படியானுல் பிதாவே! இந்த இரவில் நான் இயேசுவுடன் இருப்பேன் அல்லவோ என்ருன். ஆமென். மகனே! இன்றிரவை நீ இரட்சகருடன் செலவிடுவாய் என்ருர். பிள்ளை திரும்பிப் பார்த்து தகப்பனுடைய கன்னங்களில் கண்ணீர் சிந்துசிற தைக் கண்டான். பிதாவே! எனக்காக அழாதேயும்; நான் மோட்சத்தில் பிரவேசிக்கும்பொழுது நேரே இயேசுவிடம் போய் நீர் என்னை அவரிடம் நடத்தும்படி எனது சிறு பிராயந்தொடுத்துப் பிரயாசப்பட்டீர் என்று சொல்லு வேன்; அழாதேயும் என்ருன். தேவன் எனக்கு ஒரு சிறு பாலனைத் தந்திருக்கிருர், அவனுடைய பாதத்திலே உலக ஐசுவரியங்கள் எல்லாம்குவிக்கப்படுவதை அல்ல, அவனைத் தேவன் எடுத்துக் கொள்ளச் சித்தமானுல் அவன் என் எஜமானிடத்தில் போய் அப்படிப்பட்ட ஒரு சாட்சியைச் சொல்லவேண்டும் என்பதையே விரும்புறேன்.

மாதாக்களே! பிதாக்களே! சிறுவர்கள் மோட்சத்தைத் தேட இளமையிலே துவங்கலாம். இப்பொழுது அதை விருப்பத்தோடு தேடுங்கள். எவ்வளவு சீக்கிரம் நீங்கள் அவர்களைவிட்டு அல்லது அவர்கள் உங்களைவிட்டு எடுக்கப் படக்கூடும் என்று உங்களுக்குத் தெரியாது. அவர்களு டைய லௌகிக நன்மைக்காக நீங்கள் கவலைப்படுவதிலும் பத்து லட்சம் மடங்கு அதிகமாய் அவர்கள் ஆத்துமாவுக் காக நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்கிற உணர்ச்சியை அவர்கள் மனதில் உண்டாக்குங்கள். உலகம் முழுவதை யும் சம்பாதித்துக் கொண்டாலும் உங்கள் ஆத்துமாவை இழந்து போனால் ஒரு பலனும் இல்லை என்பதை நீங்களே இன்னும் சிந்தியாதவர்களாகில், இன்று பொழுதுபடுவ தற்கு முன்னமே உங்கள் நாமம் மோட்சத்தில் எழுதப் பட்டிருக்கிறதென்று நீங்கள் சொல்லத்தக்கவர்கள் ஆகுங் கள் என்று உங்களை மன்றாடுகிறேன்.

VII

மோட்சம்

2-ம் பங்கு

தேவன் மோட்சத்தில் இருக்கிறார். கிறிஸ்து அங்கே அவருடைய வலதுபாரிசத்திலே இருக்கிறார். இரட்சிக்கப் பட்ட பரிசுத்தர்கள் அங்கே இருக்கிறார்கள். நமது நாமங் கள் அங்கே இருக்கின்றன இவைகளைப் பற்றி முன் கவ னித்தோம். இப்போது நான் சொல்வது, நாம் உண்மை யான கிறிஸ்தவர்களாகில் நமது பொக்கிஷம் அங்கேயே இருக்கும். ' பரலோகத்திலே உங்களுக்காகப் பொக்கிஷங் களைச் சேர்த்து வையுங்கள்; பூச்சியும் துருவும் கெடுப்பதும் திருடர் கன்னமிட்டுத் திருடுவதுமான பூமியில் உங்களுக் காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையாதிருங்கள். பூச்சி யும் துருவும் கெடுக்காமலும் திருடர் கன்னமிட்டுத் திரு டாமலும் இருக்கிற பரலோகத்திலே உங்களுக்காகப் பொக்கிஷங்களை'' சேர்த்து வையுங்கள் என்று நமக்குக் கட்டளையிடப்பட்டு இருக்கிறதே! நமது பொக்கிஷம் பர லோகத்திலே இருந்தால் பரலோகத்துக்காக ஜீவியுங்கள் என்று மனுஷரை வருந்தி கேட்கவேண்டியதில்லை. உங்கள் இருதயங்களைப் பரலோகத்துக்கு உயர்த்துங்கள் என்று மனுஷருடன் வழக்காட வேண்டியதும் இல்லை. அவர்கள் இருதயம் அங்கேதான் இருக்கும். "உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்''

ஒரு மனுஷனுடைய பொக்கிஷம் எங்கே இருக்கிறது என்று அறிய வெகுகாலம் செல்லாது; அவனுடைய இருதயம் எங்கே இருக்கிறது என்று அறிவதுதானே. அரசாட்சியை தெய்வம்போல் கொள்ளுகிற சிலர் உண்டு. நீ அப்படிப்பட்டவைகளைக் குறித்துப்பேசத் துவக்கின உடனே, அவர்கள் எவ்வளவு சந்தோஷப்படுகிறார்கள் என்று பார். வியாபாரத்திலே கவனம் வைத்த ஒரு மனுஷன் இருக்கிறான் என்று வைத்துக்கொள். நீ அவனுக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் வரத்தக்க ஒரு வழியைக் காட்டுவாயானால் தனக்கு பெரிய உபகாரம் செய்தவனாய் உன்னை எண்ணிக் கொள்வான். ஒரு ஆயிரத்தைத் தேடுகையில் சில ஆயிரத்தை இழக்க வந்தாலும் கவனியான். இன்பமே தெய்வமாகக் கொண்ட இன்னொருவன் இருக்கிறான். யாராவது ஆடல் பாடல் விருந்து என்று சொன்னால் அவன் கண்கள் ஒளி கொள்ளும் இப்படிப்பட்டவர்களுடைய நடையினால் ஒருவன் அரசாட்சி வர்த்தகம் சந்தோஷம் இவைகளுக்காக ஜீவிக்க வேண்டியதொழிய வேறே ஜீவிக்கத் தகுந்த முகாந்தரம் இல்லை என்று மற்றவர்கள் எண்ண ஏதுவாய் இருக்கும். பரலோகத்திலே பொக்கிஷத்தை உடைய ஒரு தேவ புத்திரனுடனே சம்பாஷியுங்கள். உலகத்துக்கு உரியவைகளில் அவனுக்குக் கரிசனை இராது. இங்கே எனக்கு நிலையான நகரம் இல்லை, நான் இங்கே அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன். மோட்சமே என் வீடு என்று உனக்குச் சொல்லுவான். கிறிஸ்துவைக்குறித்தும், வாக்குத்தத்தங்களைக் குறித்தும், மரணத்துக்கு அப்பால் இருக்கும் தனது நம்பிக்கையைக்குறித்தும் அவன் பேசும்பொழுது, உலகம் அறியாத தேவசமாதானம் அவனிடத்தில் இருக்கிறது என்று காண்பாய்.

நான் பசிபிக் சமுத்திரத்தின் ஓரமான மாகாணங்களுக்குப் போனபொழுது, முதல் ஓய்வுநாள் பிரான்சிஸ்கோ நகரில் இருந்தேன்; ஓய்வு நாள் பள்ளிக்கூடத்திற்குப் போனேன். புயலும் மழையுமான நாளாய் இருந்தபடியால் சில உபாத்திமாரும் மாணுக்கரும் மாத்திரம் அங்கே வந்திருந்தார்கள்.

அவர்களையும் அனுப்பி விடுவோம் என்று பள்ளிக்கூட விசாரணைக்காரர் யோசித்தார். ஆனாலும் அவர்கள் மழையைப் பாராமல் வந்துவிட்டபடியால் பாடத்தைப் படிப்பிக்கத் தீர்மானித்து என்னையே அதை நடத்தும்படி சொன்னார்கள். மோட்ச பொக்கிஷங்களே பாடத்தின் விஷயமாய் இருந்தது. கறுப்புப் பலகையை ஆயத்தப் படுத்தி எனக்கு எழுத்துத் திறம் இல்லாதபடியால் ஒரு உபாத்தியிடம் எழுதும் சுண்ணும்பைக் கொடுத்து, மனுஷர் அதிகமாய்க் கவனிக்கிற சில உலக பொக்கிஷங்களைச் சொல்லுங்கள் என்று பிள்ளைகளைக் கேட்டேன். ஒரு பிள்ளை உரத்த சத்தமாய் "பணம்" என்றான். உபாத்தியாரே! அதை எழுதும் என்றேன். இன்னும் ஏதேனும் உண்டோ என்க, ஒருவன் "நிலங்கள்" என்றான் அதையும் எழுதும் என்றேன். இன்னும் அநேக நூதனமான காரியங்கள் சொல்லப்பட்டன. அப்பால் ஒரு சின்னப் பையன் "சாராயம்" என்றான். ஒரு வேளை மற்றவர்கள் சொன்னதிலும் அவன் சொன்னது அதிக உண்மையாய் இருந்தது. மது பானத்துக்காக அநேகர் ஆத்துமாவையும் சரீரத்தையும் வேலையையும் சமுசாரத்தையும் வீட்டையும் மற்றெல்லாவற்றையும் விற்றுப் போடுகிறார்கள். எல்லாரும் சொல்லி முடிந்தபின்பு, பரலோகத்தின் பொக்கிஷ டாப்பைச் சொல்லுங்கள் என்றேன். "இயேசு"

என்று முதல் சொல்லப்பட்டது. ஒவ்வொன்ருய்ச் சொல்லி வந்த பொழுது பூமியின் பொக்கிஷங்களைப் பார்க்கிலும் பரத்தின் பொக்கிஷங்கள் அநேகம் என்றும், அதிக விலை உயர்ந்தவைகள் என்றும் கண்டோம். மறுமொழிகளை எழுதிக்கொண்டு நின்ற வாலிபன் மனம்திரும்பாத ஒரு உபாத்தி. அவன் எழுதப்பட்ட உலக பொக்கிஷங்களையும் பரமபொக்கிஷங்களையும் கவனித்து இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தபொழுது பெரிய வெட்கம் அவன் உள்ளத்தில் உண்டானது. நான் எப்படிப்பட்ட மடையன்; நான் இந்நாட்டுக்கு வந்து இப்படிப்பட்ட. உலக காரியங்களுக்காக என் பொருளையெல்லாம் செலவிட்டேனே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். இனிமேல் என் ஜீவியகாலமெல்லாம் என் இருதயத்தைப் பரம காரியங்களின் மேல் வைப்பேன் என்று அக்ஷணமே கர்த்தருடன் பொருத்தனை பண்ணிக்கொண்டான்.

உலக பொக்கிஷங்கள் எப்படிப்பட்டவைகள் என்று நினைத்துப்பாருங்கள். பணத்தின்மேல் நமது இருதயத்தை வைக்கிறோம் என்று நினைத்துகொள்ளுங்கள், நமது பாதைக்குக் குறுக்கே ஒரு கேடு பறந்து வருகிறது; அதை எதிர்க்க கொஞ்சக்காலம் பிரயாசப்படுகிறோம்: அது அனுகூலம் ஆகிறதில்லை; நாம் பிச்சைக்காரர் ஆகிறோம்: இது உலகத்துக்குத் தெரியும். கீர்த்தியைச் சோதித்துப்பாருங்கள். ஒரு பொல்லாத நேரத்தில் நமக்குள்ள கொஞ்சக் கீர்த்தியையும் நாம் இழந்து போகக்கூடும்; சுயகீர்த்தியற்ற சிலர் பொய் சொல்லி நம்மேல் அவகீர்த்தி வருவிக்கவும் கூடும். நமது விசேஷ சந்தோஷம் நமது பிள்ளைகளால் வரும் என்று காத்திருந்தோமானல் நமது நம்பிக்கைக்கு ஐயோ! மரணம் அவர்களைக் கொண்டுபோகக் கூடும்!

அல்லது மரணத்திலும் கேடான அவகீர்த்தி இருந்தால் இறந்தவர்களின் தொகையில் அவர்களைச் சேர்க்கவும் கூடும். மேலும் எங்களுக்குப் பணம் இருக்கிறது, அதுவும் வேண்டிய அளவு ஏராளம். கீர்த்தி இருக்கிறது; அதுவும் உலகம் கொடுக்கக்கூடிய முதல் தரமான கீர்த்தி. பிள்ளை கள் இருக்கிறார்கள்; எல்லாரிலும் அதிக ஆசைப் படத் தக்கவர்களும் நேசிக்கப்படத்தக்கவர்களும். அப்படி ஆன போதிலும் சொற்பமான சில வருஷங்களுக்கு ஆனவைக ளையே தேடினோம்; பெரிதான நித்தியத்துக்கு உரியவைக ளையோ தேடவில்லை; அல்லது மறந்துபோனோம் என்பது உண்மை அல்லவா?

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையாதிருங்கள்" இது ஒருவேளை சற்று வருத்தம்போல் காணப்படுகிறது; ஆனால் அதுவே சரி. நிதானமாய்ப் பார்க்கில், ஒருவன் உண்மையாய்த் தேடியிருப்பது அவன் பரலோகத்தில் வைத்திருப்பவைதான். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததும் இல்லை, இதில் இருந்து நாம் ஒன்றும் கொண்டுபோகவும் கூடாது என்பது நிச்சயம். ஆகையால் தேடிவையாதிருங்கள் என்று தேவன் சொல்லு கிறார். தேடிவைக்கிற கிறிஸ்தவன் நஷ்டம் அடைகிறான், அதில் லாபம் இல்லை; அது பயங்கரமான நஷ்டத்தோடு வருகிறது, இருதயம் திருப்தியாகிறது, ஆத்துமாவோ மெலிந்து போகிறது. இரண்டு கப்பல்கள் ஒரே ஆற்றில் ஓடுகின்றன; ஒன்று எல்லாப்பாய்களையும் தூக்கி ஆண்மை யாய் அலைகளுக்கு ஊடாகச் செல்லுகிறது; மற்றதோ இன்னொரு உருவால் இழுக்கப்பட்டு மெள்ள மெள்ள போகிறது. தண்ணீரில் மிதந்தும் அமிழ்ந்துபோகிற தறு வாயில் இருக்கிறதாய் காணப்படுகிறது. ஏனெனில் ஏற்றி யிருப்பது தீராந்தி. சில்லிகொண்டு தண்ணீரும் நிறைந்

திருக்கிறது. ஆபிரகாமோடு தங்கிய காலத்திலே லோத்தின் சீர் நன்றாய் இருந்தது. அவரை விட்டுச் சோதோமைச் சேர்ந்தபோதோ இவ்வுலக சம்பத்து அதிகமாய் உண்டாயிற்று; உருவில் தண்ணீரும் நிறைந்தது. இதுவே அநேக கிறிஸ்தவர்களுடைய சீர். அவர்களில் தண்ணீர் சென்று கனத்துக் கொண்டார்கள். அவர்கள் அதிகமான பணத்தை வைந்திருப்பதால் தாங்களே துறைமுகம் சேர மாட்டார்கள்; போகும்படி மற்றவர்களை உதவி செய்யக் கேட்கிறார்கள். பக்திக்குரிய காரியம் தடைப்படுகிறது; ஆத்துமத்தின் நாடி ஓட்டம் குறைந்து போகிறது. எங்களில் ஆத்தும பெலன் இல்லை. தேவனில் அதிக சந்தோஷம் இல்லை என்று அவர்கள் சொல்வதென்ன? அதின் இரகசியத்தை எளிதில் அறியலாம். இப்படிச் சொல்லுகிற ஜனங்கள் தங்கள் பொக்கிஷத்தை இங்கே வைத்திருக்கிறார்கள்.

மனுஷர் ஆகாய இரதத்தில் ஏறும்பொழுது மணல் சாக்குகளை பாரமாகக் கொண்டு போகிறார்கள். அவர்கள் உயர ஏற விரும்பினால் அவைகளில் சிலவற்றை எறிந்து விடுகிறார்கள். சில கிறிஸ்தவர்கள் தாங்கள் உயர ஏறும்படி தங்கள் பாரத்தில் சிலவற்றை எறிந்து போடவேண்டியது. அது பணமாய் இருக்கலாம், அல்லது வேறொரு உலக காரியமாய் இருக்கலாம் அவர்கள் உயர ஏறவிரும்பினால் அதைக் கைவிடவேண்டும். கிறிஸ்தவனே! பாரம் அதிகப்பட்டால் கொஞ்சப் பணத்தை எறிந்து விடு, கழுகின் சிறகுடையவனாய் உயரப் பறப்பாய். பணத்தை என்னசெய்யவேண்டும் என்று எந்தப் போதகரும் உனக்குச் சொல்லக்கூடும். கொஞ்சப் பணமும் தேவை இல்லாததாய்க் கர்த்தரின் வேலையில் எந்தப் பகுதியாவது இருக்க நான் காணவிவில்லை.

போர்ச்சேவகருக்கு ஒரு வகையில் நன்மை செய்யும்படி உதவி கேட்க, என் சிநேகிதரில் ஒருவர் ஒருமுறை அமெரிக்காவின் இல்லினுய்ஸ் மாகாணத்து சமுசாரி ஒருவரிடம் போனுர். அவர் என் சிநேகிதனை தன்வீட்டின் உச்சிக்குக் கொண்டுபோய் ''அப்பாலே பாரும், விஸ்தாரமான அழகிய மைதான வெளி, கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் என்னுடையது'' என்ருர். பின்னெரு இடத்துக்குக்கூட்டிக் கொண்டு போய் மிசிசிப்பி பள்ளத்தாக்கில் உள்ள செழுமையான வயல் நிலங்களைக் காண்பித்தார். அவைகளுக்குள் முப்பது மைல் சுற்றளவான மேய்ச்சல் நிலமும் அதில் திரள் திரளாய் மேய்ந்து கொண்டு நிற்கும் மாடுகளும் குதிரைக் கூட்டங்களும் ஆட்டு மந்தைகளும் காணப்பட்டன. இவைகள் எல்லாம் என்னுடைவைகள், நானேஇவைகளைச் சம்பாதித்தேன் என்ருர். பின்பு அவர் பெருமையோடே பட்டணத்துக்கு நேரே தன் கையை நீட்டி வீதிகளையும் திரள் திரளான வீடுகளையும் தன் பெயர் கொண்ட விஸ்தாரமான மண்டபம் ஒன்றையும் காட்டி, இவைகளெல்லாம் என்னுடையவைகள், நான் இங்கே வறியனுய் வந்தேன், என் முயற்சியினுல் இவைகள் எல்லாம் செய்தேன் என்று திரும்பவும் சொன்னுர்.

என் சிநேகிதன் ஒன்றும் பேசாமல் எல்லாவற்றையும் கண்டபின் தன்விரலை உயர்த்தி பயபக்தியாய்வானத்துக்கு நேரே பிடித்துக் கொண்டு, அங்கே என்ன வைத்திருக்கிறீர் என்று கேட்டார். அந்தச் செல்வனின் முகம் குருவி, ''எங்கே'' என்று கேட்டார்; மோட்சத்தில் என்ருர். நான் அங்கே ஒன்றும் வைத்திருக்கவில்லை என்ருர். ஐயோ! வயது எழுபதாயிற்று, சீக்கிரம் மறுமைக்கும்

போக வேண்டும். ஆனாலும் அங்கே பொக்கிஷம் வைத்திருக்கவில்லை; உம்மைப் போன்ற புத்தியும் யோசனையும் உள்ள ஒரு மனுஷன் தன் ஜீவியகாலத்தை அவம் போக்கி மறுமைக்குப் பிச்சைக்காரனாய் மரித்து வறியனாய் அங்கே போகிறது ஆச்சரியம் அல்லவோ என்று கேட்டார். அதற்குச் சில மாதத்துக்குப் பின் அவர் ஜீவித்த விதமாகவே மரித்தார். அவருடைய ஆஸ்தி மறுபேர் கைக்குப் போயிற்று. ஆ! என் சிநேகிதரே உங்களில் யாராவது இம்மைக்காக ஜீவிக்கிறீர்களா? மரணமானது உங்கள் பொக்கிஷங்களை விட்டு உங்களைப் பிரித்து நித்திய நரகத்துக்குக் கொண்டுபோகும் என்று நினைத்துக் கொள்ளுங்கள்; மறுமையின் ஜீவியத்துக்காக என்ன சம்பாதித்து வைத்திருக்கிறீர்கள் என்று உங்களைத்தானே விசாரியுங்கள் என்று மன்றுடுகிறேன். உங்கள் இருதயம் வைக்கப்பட்டிருப்பது உங்கள் சிறு புத்திரனிலா? அவனா உங்கள் தெய்வம்? அல்லது உங்கள் விக்கிரகம் பணமா? அல்லது பெயர், உடை, அந்தஸ்து இவைகளா? அப்படியாகில் ஒரு நாளில் உங்கள் நியாயாதிபதியாய் வரும் கர்த்தரின் கட்டளையை மீறுகிறீர்கள். "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைத் தேடி வையாதிருங்கள்."

நீங்கள் கவனிக்கவேண்டும் என்று நான் விரும்புகிற இன்னும் ஒரு கருத்து இருக்கிறது. எங்கள் இளைப்பாறுதல் மோட்சத்தில் இருக்கும். எபி. 4 : 9-ல் "தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாய் இருக்கிறது" என்று வாசிக்கிறோம். அது நமக்கு மோட்சத்திலுள்ள இன்னொருபொக்கிஷம். இங்கே இளைப்பாறுதலைக் குறித்துப் பேசாமலிருப்போமாக. இளைப்பாற நித்திய காலம் முழுதும் இருக்கிறதே. நாம் இங்கே ஜீவிக்கிற சில

மாதங்களில் அல்லது வருஷங்களில் உண்மையாய் நமது கடமைகளைச் செய்வதே அவசியம். பின்பு நித்திய யுகங்களாய் இளைப்பாறுவோம், இது வேலை செய்கிற இடம் ''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டு ஒழிந்து இளைப்பாறுவார்கள் அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூட போம்.'' நமது கிரியைகள் நம்மைப் பின்தொடரும் இராக்காலம் வருமுன்னே நாம் நேர்மையுள்ளவர்களாய் இருந்தால் நமக்குப் பின்னால் நல்ல சரித்திரத்தை வைத்துப் போவோம். இந்த இருண்ட பூமியிலே நாம் நீரோட்டங்களை உண்டாக்கக் கூடும். அவைகள் நாம் மோட்சத்தில் பிரவேசித்த பின்னும் ஓடும்.

தானியேல் ஜீவித்து ஈராயிரத்து ஐந்நூறு வருஷங்கள் ஆகின்றன. அவர் கிரியை இன்னும் பேசப்படுகிறது. அவர் ஒளி எவ்வளவு பிரபையாய்க் கிறிஸ்தவ ராஜ்ஜியம் எங்கும் பிரகாசிக்கிறது. அவருடைய சரித்திரத்தை வாசிக்க விரும்புகிறோம். அவர் பாபிலோனில் தேவனுக்காகச் சாட்சியிடுவதை நாம் வாசிக்கும்போது அது நம்மை எவ்வளவாய் அனலாக்கிச் சந்தோஷிப்பிக்கின்றது. அவருடைய கிரியைகள் அவரைப் பின் தொடருகின்றன.

அநேகரின் எண்ணம் பெரும் தப்பிதமாய் இருக்கின்றது; அவர்கள் சபை ஒரு வகையான இளைப்பாறும் இடம் என்று எண்ணுகிறார்கள்; அவர்கள் சபையில் சேருகிறார்கள்; அதன் பின்பு அவர்களைப் பற்றி ஒரு செய்தியும்இல்லை. ஒரு நல்ல கிறிஸ்தவன் கண்ணியமான ஒரு ஆலயத்தைச் சேர்ந்தவனாய் இருக்கவேண்டும்; அதன் பின்பு கிழமையில் இரண்டு பிரசங்கம் கேட்கவேண்டும். இவை மாத்திரம்தான் தங்கள் அலுவல் என்று எண்ணுகிறார்கள்.

என் சிநேகிதரே! இளைப்பாறுதலையும் சந்தோஷத்தையும் குறித்து இங்கே நினையாதிருப்போமாக. கிறிஸ்து வரும் பொழுது இளைப்பாறுவோம், அதற்கு முன் நல்ல காலம் வருகிறது; அப்பொழுது துன்மார்க்கர் தொல்லை செய்ய மாட்டார்கள்; களைத்தவர்கள் இளைப்பாறுவார்கள்.

நான் ஒரு கிறிஸ்தவனைப் பற்றி கேள்விப்பட்டேன். அவன் தன் வேலையில் முன்போல் அனுகூலமடையாததைக் கண்டு பரம வீட்டுக்குப் போக ஆசைப்பட்டுத் தான்மரிக்க விரும்பினான். ஒரு நாள் தான் மரித்து விட்டதாயும் தேவ தூதரால் நித்திய நகரத்துக்குக் கொண்டுபோகப்பட்டதாயும் ஒரு கனக்கண்டான். மோட்சத்தின் பளிங்கு வீதியில் அவன் நடந்து போகையில் தனக்கு அறிமுகமான ஒரு மனிதனைச் சந்தித்து இருவரும் கூடிப் போனார்கள். சடுதியாய் மனுப்புத்திரரிலும் சௌந்தரியமுள்ள ஒருவர் வருகிறதையும் எல்லாரும் ஒரேமுகமாய் அவரைப் பார்க்கிறதையும் கண்டான். அது அவனுடைய நித்தியானந்த இரட்சகர். அவர் ஏறி வந்த ரதம் சமீபமானபொழுது கையை நீட்டி அந்தச் சிநேகிதனுக்குச் சமிக்கை காட்டி அழைத்து தனது ஆசனத்தில் இருத்திக்கொண்டு, மோட்ச கொத்தளங்களுக்கு ஊடாகப் பார்க்கச் சொல்லி என்ன காண்கிறாய் என்றார். நான் விட்டுவந்த இருண்ட பூமியைக் காண்கிறேன் என்று நினைக்கிறேன் என்றான். வேறென்ன காண்கிறாய் என்றார். மனுஷர் கண் கட்டப்பட்டவர்களாய் ஒரு பயங்கர செங்குத்தான மலைக்கு மேலாக சென்று பாதாளத்தில் விழுகிறதைக் காண்கிறேன் என்றான். நல்லது நீ இங்கே இருந்து நான் ஆயத்தம் பண்ணியிருக்கிற மாளிகைகளில் சந்தோஷமாய் இருக்கப் போகிறாயோ? அல்லது

அந்த இருண்ட உலகத்துக்குத் திரும்பிபோய் அந்த மனிதரை எச்சரித்து என்னைக்குறித்தும்,என்இராஜ்ஜியத்தைக் குறித்தும், தேவனுடைய ஜனங்களுக்கு இருக்கும் இளைப்பாறுதலைக் குறித்தும் சொல்லப் போகிருயோ என்ருர். அந்த மனுஷன் அதன் பின்பு ஒருக்காலும் தான் மரிக்க வேண்டும் என்று விரும்பவில்லை; தான் ஜீவிக்கக்கூடிய காலமெல்லாம் ஜீவிக்கவும் மனிதருக்கு கிறிஸ்துவையும், மோட்சத்தையும் குறித்துச் சொல்லவும் வாஞ்சையுள்ளவனுய் இருந்தான். அதுதான் நாம் செய்ய வேண்டும். என்று தேவன் விரும்புவது. இனிமேல் இளைப்பாறுவோம் இளைப்பாற நித்திய காலம் இருக்கிறது.

சபையானது வேலை செய்தற்கான இடம்; அதிலே நமது வேலை முடிந்தவுடனே உயர வாருங்கள் என்ற அழைப்பு நமக்கு வரும். மோட்சத்திலே உள்ளவைகள் இம்மாத்திரம் அல்ல, நமது கிரீடத்தை அங்கே பெற்றுக் கொள்வோம். 2. தீமோ. 4. 8-ல் ''இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்'' என்று வாசிக்கிருேம். தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது; தேவன் அப்படி வாக்குப் பண்ணியிருக்கிருர். ''மரண பரியந்தம் உண்மையாய் இரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' பவுல் என்னத்திற்காக ஓடினுர்? ரட்சிப்புக்காகவா? பதினுயிரம் முறை இல்லை என்கிறேன். அதைச் சிலுவை அண்டையிலே பெற்றுக் கொண்டாரே! அது காரியம் வெகு காலத்துக்கு முன் தீர்ந்தாயிற்று. பவுல் ஒரு கிரீடத்துக்காக ஓடினுர். மோட்சத்தில் அநேகர் பிரவேசிப்பார்கள், அவர்களுக்குக் கிரீடம்

இராது. ஐயோ! கிரீடமில்லாத கிறிஸ்தவர்கள் நான் பவுலின் சரித்திரத்தை வாசிக்கும் போதெல்லாம் அவருடைய பெயரைக் கேட்கும்போதெல்லாம் என்னைக்குறித்து வெட்கப்படுகிறேன். சாத்தான் பவுலை மேற்கொள்ளவில்லை, சாத்தான் ஒரு போதும் அவரைச் சரியான வழியில் நின்று விலக்கவில்லை. அவர் தன் கண்ணைக் கிறிஸ்துவிலே வைத்தபடியே ஓடினார். இப்பொழுது கிரீடத்தைத் தரித்திருக்கிறார். பவுலே! நீர் என்னத்துக்காக ஆசைப்பட்டீர்? ஒரு பெயருக்காகவா? நீர் இவ்வளவு சொல்லரிய வாஞ்சையாய் இருந்ததென்ன? என் கிரீடத்துக்காக என்று பவுல் சொல்லுகிறார். உம்மைப் பற்றி அவர்கள் சொல்லுகிறதைக் கேட்டீரோ? உலகத்தை மேல் கீழாய்த் திருப்பப் பிரயாசப்படுகிற வாயாடி என்கிறார்கள்; உம்மை கொலை செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள்; யூதர் உமக்கு விரோதமாய் எல்லா வசையும் சொல்லுகிறார்கள் என்கிறோம். எனக்குத் தெரியும், அவைகளில் ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன் என்று அவர் சொல்லுகிறார்,

அவர் பக்கமாய் வந்து நில்லுங்கள். முப்பத்தொன்பது அடி அவரை அடித்தார்கள், நாலுதரம் மிலாறுகளால் அடிபட்டார், திரும்பவும் அடிக்கப் போகிறார்கள். பவுலே! இந்த வில்லங்கத்தினின்று நீர் விலகும்பொழுது என்ன செய்வீர்? "செய்வதா?' ஒன்று செய்கிறேன். "தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று பவுல் சொல்லுகிறார். அடிகளைக் குறித்துக் கவலைப்படுவாரோ? இந்த அற்பமான உபத்திரவங்கள் என்னைத் தடுக்கும் என்று நினைக்கிறீர்களோ என்கிறார். ஆ! ஒரு அடி நமது முதுகில் பட்டால் எவ்வளவு சஞ்சலப்படுவோம்! அதைக் குறித்து எத்தனை புஸ்தகங்கள் எழுதுவோம் என்று எனக்குத்

தெரியாது. நம்மை இரத்தச்சாட்சிகள் என்று சொல்ல விரும்புவோம்; பவுல் அவைகளை அற்பமான உபத்திரவங்கள் என்கிறார்.

இன்னும் பார்ப்போம். அவரைக் கல்லால் எறிந்தார்கள். அவர் சரீரம் முழுதும் நொறுங்குண்டு இரத்தம் சொரிகின்றது. அந்த யுத்த வீரன் திரும்பவும் எழுந்து தனது ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளுகிறார். என்ன செய்யப் போகிறார்? பவுலே! இதற்குத் தப்பிக்கொண்டீர்! இனி என்ன செய்யப் போகிறீர் என்றால், செய்கிறதா? ஒன்று செய்கிறேன்; பந்தயத்துக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். எனது கிரீடத்தை இழந்துபோவேனே என்கிறார். ஆகையினாலே அவர் ஒருக்காலும் வலது இடது புறமாகத் திரும்புகிறதில்லை; தனது கண்களைக் கிரீடத்தின் மேலே வைத்துக்கொள்கிறார். "இதுமுதல் வாடாத ஒரு கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" என்கிறார்.

அவரைத் திரும்பவும் பாருங்கள். அவர் மக்கெதோனியாவுக்குப் போகிறார். பிலிப்பி பட்டணத்தில் அவருக்குக் கிடைக்கும் முதற்காரியம் ஜெயில். பத்தொன்பதாம் நூற்றாண்டாகிய தற்காலத்தில் ஒரு கிறிஸ்தவனுக்கு அது நேரிடுமாகில் எவ்வளவு கூக்குரல் உண்டாகும்! மரியல் கூடத்துக்குள் எவ்வளவு புலம்புதல் இருக்கும்! அதை விட்டு விலகும்படி எவ்வளவு யோசனை உண்டாகும்! நஷ்டத்துக்கு எவ்வளவு வழக்குகள் வரும். இந்த முதிர்ந்த யுத்த வீரன் அப்படிக் கவனிக்கவில்லை. அவர் ஒரு நடு ராத்திரியில் சீலாவே! என்று கூப்பிட்டு, நமது சாயரட்சை ஆராதனைக்கு நேரம் வந்துவிட்டது என்கிறார். அங்கே அந்த மறியல் வீட்டிலே முதுகில் ரத்தம் வடிய, கால்கள்

விலங்கில் மாட்டியிருக்க அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டு களைப் பாடினார்கள். அது ஸ்தோத்திர கீதம் பாட நாம் ஒருபோதும் நினைக்கமாட்டாத இடம்; நாம் பாடினால் ஒரு புலம்பல் பாடுவோம். பவுலோ அப்படி நினைக்கவில்லை. நான் பிலிப்பிய மறியல்கூட வழியாய் மோட்சத்துக்குப் போவது தேவனுக்குச் சித்தமானால் எனக்கு வித்தியாசம் இல்லை. சீலாவே! சந்தோஷப்பட்டுக் களிகூர். "இயேசு வின் நிமித்தம் நாங்கள் பாடுபடுகிறதற்கு பாத்திரராய் எண்ணப்பட்டதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத் துகிறேன்" என்கிறார். அவர்கள் ஸ்தோத்திர பாட்டைப் பாடினபொழுது மற்ற மறியல்காரர் கேட்டார்கள்; அதி லும் விசேஷமாக கர்த்தர் கேட்டார். மறியல் வீடு அதிர்ந் தது; சங்கிலிகள் சுழன்றன; அவர்கள் விடுதலை ஆனார்கள். மகா அலெக்சாண்டர் தனது சேனைகளால் உலகத்தை நடுங்கப்பண்ணினார் என்று பேசுகிறோம். இங்கே ஒரு சிறிய கூடாரம் தைக்கிற மனுஷன் சேனைகள் இல்லாமல் உலகத்தை நடுங்கப்பண்ணுகிறான்.

அப்பால் அவருடைய மகத்துவமான ஜீவியத்தின் முடிவைப் பாருங்கள். அவர் ரோமையிலே இருந்தார். சொல்லப்படுகிற காலம் சமீபமானபொழுது "நான் தேகத்தைவிட்டுப் பிரியுங்காலம் வந்தது; நல்ல போராட் டத்தைப் போராடினேன்; விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று தீமோத்தேயுவுக்கு எழுதினார். விசு வாசத்தைக் காத்துக்கொண்டார், தேவனுக்கு ஸ்தோத் திரம். அவர் பிரிந்துபோய் பொய் உபதேசத்தைப் போதிக்கவில்லை கிறிஸ்து மரித்தார், இரட்சிப்படைய மனுஷர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்கிற பழைய நல்ல சுவிசேஷத்தை விசுவா

சித்தார். இதுமுதல் எனக்கு ஒரு கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது என்கிறார். பவுல் ரோமையில் இருந்தபொழுது நானும் அங்கே இருந்தாலோ என்று எண்ணுகிறேன். அப்பொழுது காணத்தகுந்த சில காரியங்கள் இருந்தன; அந்த வீதிகளிலே அவர் நடக்கிறதைக்கண்டாலோ என்று எண்ணுகிறேன். அந்த மனுஷனைப்போன்ற வீரனை ரோமாபுரி ஒருக்காலும் கண்டிராது. பவுலே உம்மைக் கொல்லப்போகிறார்கள். உமது ஜீவியத்தைக் கர்த்தராகிய இயேசுவுக்கு ஒப்புவித்ததைக் குறித்து துக்கப்படவில்லையோ? நீர் இவ்வளவு பாடு அனுபவிக்க வந்ததே! கல்லால் எறியப்பட்டீர், துன்பப்படுத்தப்பட்டீர், அநேகம் அடிபட்டீர், வனாந்தர மோசங்களுக்குள் ஆனீர். கடல் மோசங்களிலும் தரை மோசங்களிலும் அகப்பட்டீர், இப்போது துக்கப்படவில்லையோ? இன்னும் ஒருதரம் நீர் ஜீவிக்கிறதாகில் உமது ஜீவியத்தைக் கிறிஸ்துவுக்கு ஒப்புவிப்பீரோ? என்கிறோம். அவர் சொல்லும் உத்தரம்: ஆம் எனக்குப் பதினாயிரம் ஜீவன்கள் இருந்தாலும் அவைகளை அருமையான கர்த்தர் நிமித்தம் சந்தோஷமாய்க் கொடுத்துவிடுவேன் என்பார். விசனப்பட ஒன்றும் இல்லை. துக்கப்படுவேனோ? நான் என்னைத் தேவனுக்கு ஒப்புவித்தேனே என்று ஆயிரந்தரம் அவரை ஸ்தோத்திருக்கிறேன் என்பார்.

அவர் ஒரு வீரனாய்க் கொலைக்களத்துக்குப் போகிறதைப் பார். அவர் சமீபமாய் நீ நின்றால் சரீரத்துக்குத் தூரமாயும் கர்த்தருக்குச் சமீபமாயும் இருப்பேன் என்று மெல்லிய சத்தமாய்ச் சொல்வதைக் கேட்பாய். அவர் மனதைத் தொல்லைப்படுத்த அவரிடத்தில் உலக செல்வம் இல்லை; ஒருவேளை கூடாரம் செய்வதில் அவர் பாவித்த சில ஆயுதங்கள் மாத்திரம் உண்டு. மோக்ஷத்திலோ

சொல்லமுடியாத பொக்கிஷங்களை அவர் வைத்திருக்கிறார். தனது கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளப் போகிறதற்கு ஆயத்தம் பண்ணுகிறார். தறிக்கப்படும்படி ஒரு பலகையின்மேல் தனது தலையை வைக்கும்போது அவர் முகத்தில் ஒரு புன்னகையைக் காணலாம். அவர் ஆத்துமாவோ சமீபமாய் நிற்கிற அக்கினி இரதத்துக்குள் குதித்து ஏறுகிறது. மோக்ஷத்தின் கொத்தளங்களில் அங்குள்ளோர் அவருக்காகக் காத்திருந்து அவர் சிங்காசனத்துக்குச் சமீபமாய்ச் செல்லுகையில் உரத்த சத்தமாய் அல்லேலூயா என்று பாடுகிறார்கள். அவர் மோக்ஷத்தின் முத்துவாசல்களில் பிரவேசிக்கும்போதே எஜமானனவர் சந்தோஷ சத்தமாய் பவுலே! சரியாய் நடந்தாய், நல்ல போராட்டத்தைப் போராடினாய், விசுவாசத்தைக் காத்துக்கொண்டாய், செய்யும்படி உனக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலையைச் செய்துமுடித்தாய். உன் கர்த்தரின் சந்தோஷத்தில் பிரவேசி என்று சொல்லுகிறார். எஜமானனவர் எழுந்து நின்று அவனுடைய சிரசின்மேல் கிரீடத்தை வைக்கிறார்; அவனோ அதைக் கழற்றித் தன் கர்த்தரின் பாதத்தில் வைக்கிறான்.

பவுல் கடைசியில் தன் பலனை அடைந்துகொண்டார். இங்கே அவருக்கு உபத்திரவங்கள் உண்டாயிருந்தது. அங்கேயோ பூமியில் தனக்கு உண்டான தன் சுகங்களைப் பார்க்க அதிகமாய் தன் துன்பங்களுக்காகவே, இன்றைக்கும் தேவனை ஸ்தோத்திரிக்கிறார் என்று நான் எண்ணுகிறேன். யோவான் பன்னியன் என்பவர் தனக்குச் சம்பவித்த எந்தக் காரியத்திலும், அதிகமாய் தான் போடப்பட்ட பெட்வோர்ட் மறியல் கூடத்துக்காகவே தேவனை ஸ்தோத்தரித்தார். அங்கேதான் அவர் மோக்ஷ பிரயாணம் என்ற நூலை எழுதினார். பவுல் மரியலில் இருந்தே ஆண்டாண்டுகளுக்கு ஆசீர்வாதமாய் இருக்கிற இந்த நிரு

பங்களை எழுதினார். பவுல் ஓடச் செய்த கிருபையின் நீரோட்டங்கள் இன்னும் ஓடுகின்றன. சபைகளுக்கு இந்த நிருபங்களை அவர் எழுதி பதினெட்டு நூற்றாண்டுகள் ஆகிறது. அவைகளின் கனியோ சகல தேசத்திலும் ஜாதியிலும் இன்னும் சேர்க்கப்படுகின்றன. அது போலவே காரியங்கள் நமக்கு விரோதமாய் வந்தால் தேவனைத் துதிக்கக் கடவோம். நமது பலன் அங்கேயிருக்கிறது. ஒருவன் மனுஷரால்வரும் பலனை நோக்குவதை விடாவிட்டால் தேவன் தமது ஊழியத்தில் அவனை அதிகமாய் உபயோகிப்பார் என்று நான் நம்பவில்லை. ''சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்'' தேவன் அதை மிகுதி என்று சொல்வாரானால் அதைப் பெறுவதும் அரிதாய்த்தான் இருக்கும். உலக கனங்களைத் தேடுவதினால் அதைப் பழுது படுத்தாதிருப்போமாக.

ஒரு தேவ பயமுள்ள ஸ்திரீ நெடுநாள் வருத்தமாய்க் கிடந்தாள். அவளைப் போய்ப் பார்த்து வந்த ஒரு கிறிஸ்தவ துரைசானி அவள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்கக் கண்டார். இந்தத்துரைசானிக்கு ஐசுவரியமுள்ள ஒரு சிநேகிதியும் இருந்தாள். அவள் ஒரு கிறிஸ்தவள் ஆயினும் காரியங்களின் தோற்றக் குறைவைப் பார்த்து எப்பொழுதும் மனமடிவு கொள்ளுகிறவள். தன் சிநேகிதி படுக்கையாய்க் கிடக்கிற பக்தியுள்ள ஸ்திரீயைக் காண்பது நலமாயிருக்கும் என்று அந்தத்துரைசானி எண்ணி ஒருநாள் அவளையும் கூட்டிக்கொண்டு வியாதியஸ்தி வீட்டுக்குப் போனாள் வியாதியஸ்தி ஐந்தாம் மெத்தையிலே வாசம் பண்ணினாள். முதலாம் மெத்தைக்கு அவர்கள் ஏறினபொழுது அவள் தன் சட்டையை ஒதுக்கிக்கொண்டு, இது எவ்வளவு இருட்டும் அழுக்குமாய் இருக்கிறது. என்றாள். மேலே நன்றாய் இருக்கும்

என்று துரைசானி சொன்னாள். இரண்டாம் மெத்தைக் குப் போனார்கள், அதுவும் நன்றாய் இருக்கவில்லை. அவள் திரும்பவும் குறை சொன்னாள். இன்னும் மேலே நன்றாய் இருக்கும் என்று துரைசானி சொன்னாள். மூன்றும் மெத் தையோ முந்தினவைகளிலும் கேடாய் இருந்தது. அவள் குறை சொல்லிக்கொண்டு போகப்போக துறைசானியும் இன்னும் மேலே நன்றாய் இருக்கும் என்று சொல்லிக் கொண்டு போனாள். கடைசியாய் அவர்கள் ஐந்தாம் மெத்தையைச் சேர்ந்தார்கள். வியாதியஸ்தியின் அறை யைச் சேர்ந்தபோது தளத்திலே நேர்த்தியான ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது; ஜன்னலில் பூச்செடி கள் இருந்தன; சிறு பட்சிகள் கீதம் பாடிக்கொண்டிருந் தன. அங்கே நெடுநாள் வருத்தமாய்க்கிடந்த தேவஊழி யக்காரியின் முகம் சந்தோஷத்தினால் பிரகாசிக்கிறதைக் கண்டார்கள். அவள் தேவன் தமது ஆலயத்துக்கு ஒப்பி டும் ரத்தினங்களில் ஒன்றுபோல் இருந்தாள். அம்மா அவ ளைப் பார்த்து நீ இங்கே கிடப்பது உனக்கு மிகவும் வருத்த மாய் இருக்குமே என்றாள். அவள் புன்னகை கொண்டு மேலே நன்றாய் இருக்குமே என்றாள். ஆம் என் சிநேகிதரே காரியங்கள் இங்கே நமக்கு நஷ்டமாய் இருந்தால் மேலே நலமாய் இருக்கும் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்.

சில வருஷங்களுக்கு முன்னே நான் சிக்காகோ நகரில் இருந்து நியூ ஓர்லின்ஸ் நகருக்குப் போனேன்; என்னுடன் வண்டியில் இரண்டு துரைசானிகளும் வந்தார்கள்; இவர் கள் கைறோ நகருக்குச் சேருமுன்னமே ஒருவருக்கொருவர் சிநேகிதமானார்கள். ஒருத்தி கைறோவில் வாசஞ்செய்பவள். மற்றவள் நியூஓர்லின்ஸுக்குப் போகிறவள். கைறோவில் தரிப்பவள் மற்றவளைப்பார்த்து: உனது சிநேகம் எனக்குப் பிரியமாயிருக்கிறது; சில நாட்களாய் நீ இங்கே என்னு

டன் இரு என்றாள். எனக்கும் தங்கப்பிரியந்தான், எனது சாமான்கள் எல்லாம் பெட்டியில் போட்டு எனக்கு முன்னே போய்விட்டன; நான் அணிந்திருக்கிற சட்டைகளன்றி வேறே இல்லை; அவை பயணத்துக்குப் போதும்; வீடுகளில் சிநேகிதர் கூட்டங்களில் அவைகளை உடுக்க வெட்கப்படுவேன் என்றாள். அதுதான் கிறிஸ்தவனின் நிலைவரம். அவனுக்கு வீடு இங்கே இல்லை. அவனுடைய பொக்கிஷம் முன்னே போய் விட்டது எதுவும் பயணத்துக்குப் போதும். இங்கே காரியங்கள் செவ்வையாய்ச் செல்லா விட்டால் நாம் அக்கறைப்பட வேண்டியதில்லை. அவை பயணத்துக்குப் போதும். மோக்ஷத்தில் நமது பொக்கிஷம் இருந்தால் நமது இருதயமும் அங்கே இருக்கும். பூமியிலே அந்நியரும் பரதேசிகளுமாய் ஜீவிப்போம்.

இன்னும் ஒன்று சொல்லுவேன். என்ன? விக்றேரியா ராணி அவர்கள்இன்றைக்குத் தமது சிங்காசனத்தை விட்டால் மோட்சத்தில் அமளி உண்டாகுமா? விக்றேரியா ராணி அவர்கள் தமது சிங்காசனத்தை விடுகிறார்கள் என்றால் பூமியின் ஜாதிகளுக்குள் அமளி உண்டாகும்; முழு உலகமும் அதைஅறியும். மோக்ஷத்தில் அது கவனிக்கப்படுமோ எனக்குத் தெரியாது. ஆனால் இன்றைக்கு இங்கே ஓர் சிறுபிள்ளை மனந்திரும்பினால் அது மோக்ஷத்தில் கவனிக்கப்படும். "மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்திலே சந்தோஷம் உண்டாகும்"என்று இயேசுகிறிஸ்து சொன்னார். எனது அருமையான சிறுவனே! மேய்ப்பனானவர் பராமரித்து விசாரணை செய்கிற அவருடைய ஆட்டுக்குட்டியாகும்படி நீ விரும்பவில்லையா? எனது அருமையான சிறு பெண்ணே! நீ மோக்ஷத்தின் புத்திரியும் கிறிஸ்துவின் பணிவிடைக்காரியும் ஆக விரும்பவில்லையா?

ஒருவேளை இந்த நிமிஷத்திலே மோக்ஷத்தின் கொத்தளங்களில் இரட்சிக்கப்பட்டோர் திரளாய் வந்து நிற்கக்கூடும். ஒரு பரிசுத்த மாதா தன் மகளுக்காக காத்திருக்கலாம், மகளே! அவளை நீ காணவில்லையா? உத்தமதேசத்துக்கு வா என்று உனக்குச் சமிக்கை காட்டுகிறார். வெகு நாளுக்கு முன் உனக்காகப் பல முறையும் பிரார்த்தித்து வந்த அந்தக்குரல் கேட்கிறதே. நீ மறுமொழி ஒன்றும் சொல்லுகிறதில்லையா? வாலிபனே! உமக்குச் சொல்லுகிறேன். உனக்காகப் பிரார்த்தித்த குரல்கள் இல்லையா? உம்மை இம்மையில் சந்தியாவிட்டால் மறுமையில் சந்திப்பேன் என்று நீ வாக்குப் பண்ணினவர்கள் இல்லையா? பிதாக்களே! மாதாக்களே! உங்களில் யார் நீங்கள் நேசித்தவர்களும் கர்த்தருடன் மகிமை பொருந்தியவர்களாய் என்றென்றைக்கும் வாசம்பண்ணும்படி உங்களுக்கு முன் போனவர்களுமான உங்கள் சிறுபாலர்களின் சத்தத்தைத் தேவதூதர்களின் கீதங்களுக்குள் கேட்கிறீர்கள்? ஆ! நாம் உலகத்தை விட்டுத்திரும்பி நம்முடைய முழங்கால்களில் நின்று நமது நாமங்களை ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதும்படி கிறிஸ்து மூலமாய்த் தேவனைப் பிராத்திப்போமாக. அப்பொழுது நாமும் நாம் நேசித்தவர்களும் என்றென்றைக்கும் கர்த்தருடன் பிழைப்போம். அல்லேலூயா!

டாஸ் பிரஸ், நாசரேத்; 25—10—'62.

அந்த இருண்ட உலகத்துக்குத் திரும்பிபோய் அந்த மனி தரை எச்சரித்து என்னைக்குறித்தும்,என்இராஜ்ஜியத்தைக் குறித்தும், தேவனுடைய ஜனங்களுக்கு இருக்கும் இளைப் பாறுதலைக் குறித்தும் சொல்லப் போகிறாயோ என்றார். அந்த மனுஷன் அதன் பின்பு ஒருக்காலும் தான் மரிக்க வேண்டும் என்று விரும்பவில்லை; தான் ஜீவிக்கக்கூடிய காலமெல்லாம் ஜீவிக்கவும் மனிதருக்கு கிறிஸ்துவையும், மோட்சத்தையும் குறித்துச் சொல்லவும் வாஞ்சையுள்ள வனாய் இருந்தான். அதுதான் நாம் செய்ய வேண்டும். என்று தேவன் விரும்புவது. இனிமேல் இளைப்பாறுவோம் இளைப்பாற நித்திய காலம் இருக்கிறது.

சபையானது வேலை செய்தற்கான இடம்; அதிலே நமது வேலை முடிந்தவுடனே உயர வாருங்கள் என்ற அழைப்பு நமக்கு வரும். மோட்சத்திலே உள்ளவைகள் இம்மாத்திரம் அல்ல, நமது கிரீடத்தை அங்கே பெற்றுக் கொள்வோம். 2. தீமோ. 4. 8-ல் "இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" என்று வாசிக்கிறோம். தேவனுடைய பிள் ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு கிரீடம் வைக்கப்பட்டிருக் கிறது; தேவன் அப்படி வாக்குப் பண்ணியிருக்கிறார். "மரண பரியந்தம் உண்மையாய் இரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" பவுல் என்னத்திற்காக ஓடினார்? ரட்சிப்புக்காகவா? பதினாயிரம் முறை இல்லை என்கிறேன். அதைச் சிலுவை அண்டையிலே பெற்றுக் கொண்டாரே! அது காரியம் வெகு காலத்துக்கு முன் தீர்ந்தாயிற்று. பவுல் ஒரு கிரீடத்துக்காக ஓடினார். மோட் சத்தில் அநேகர் பிரவேசிப்பார்கள், அவர்களுக்குக் கிரீடம்

இராது. ஐயோ! கிரீடமில்லாத கிறிஸ்தவர்கள் நான் பவுலின் சரித்திரத்தை வாசிக்கும் போதெல்லாம் அவருடைய பெயரைக் கேட்கும்போதெல்லாம் என்னைக்குறித்து வெட்கப்படுகிறேன். சாத்தான் பவுலை மேற்கொள்ளவில்லை, சாத்தான் ஒரு போதும் அவரைச் சரியான வழியில் நின்று விலக்கவில்லை. அவர் தன் கண்ணைக் கிறிஸ்துவிலே வைத்தபடியே ஓடினார். இப்பொழுது கிரீடத்தைத் தரித்திருக்கிறார். பவுலே! நீர் என்னத்துக்காக ஆசைப்பட்டீர்? ஒரு பெயருக்காகவா? நீர் இவ்வளவு சொல்லரிய வாஞ்சையாய் இருந்ததென்ன? என் கிரீடத்துக்காக என்று பவுல் சொல்லுகிறார். உம்மைப் பற்றி அவர்கள் சொல்லுகிறதைக் கேட்டீரோ? உலகத்தை மேல் கீழாய்த் திருப்பப் பிரயாசப்படுகிற வாயாடி என்கிறார்கள்; உம்மை கொலை செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள்; யூதர் உமக்கு விரோதமாய் எல்லா வசையும் சொல்லுகிறார்கள் என்கிறோம். எனக்குத் தெரியும், அவைகளில் ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன் என்று அவர் சொல்லுகிறார்,

அவர் பக்கமாய் வந்து நில்லுங்கள். முப்பத்தொன்பது அடி அவரை அடித்தார்கள், நாலுதரம் மிலாறுகளால் அடிபட்டார், திரும்பவும் அடிக்கப்போகிறார்கள் பவுலே! இந்த வில்லங்கத்தினின்று நீர் விலகும்பொழுது என்ன செய்வீர்? "செய்வதா?' ஒன்று செய்கிறேன். "தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று பவுல் சொல்லுகிறார். அடிகளைக் குறித்துக் கவலைப்படுவாரோ? இந்த அற்பமான உபத்திரவங்கள் என்னைத் தடுக்கும் என்று நினைக்கிறீர்களோ என்கிறார். ஆ! ஒரு அடி நமது முதுகில் பட்டால் எவ்வளவு சஞ்சலப்படுவோம்! அதைக் குறித்து எத்தனை புஸ்தகங்கள் எழுதுவோம் என்று எனக்குத்

தெரியாது. நம்மை இரத்தச்சாட்சிகள் என்று சொல்ல விரும்புவோம்; பவுல் அவைகளை அற்பமான உபத்திரவங்கள் என்கிறார்.

இன்னும் பார்ப்போம். அவரைக் கல்லால் எறிந்தார்கள். அவர் சரீரம் முழுதும் நொறுங்குண்டு இரத்தம் சொரிகின்றது. அந்த யுத்த வீரன் திரும்பவும் எழுந்து தனது ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளுகிறார். என்ன செய்யப் போகிறார்? பவுலே! இதற்குத் தப்பிக்கொண்டீர்! இனி என்ன செய்யப் போகிறீர் என்றால், செய்கிறதா? ஒன்று செய்கிறேன்; பந்தயத்துக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். எனது கிரீடத்தை இழந்துபோவேனே என்கிறார். ஆகையினாலே அவர் ஒருக்காலும் வலது இடது புறமாகத் திரும்புகிறதில்லை; தனது கண்களைக் கிரீடத்தின் மேலே வைத்துக்கொள்கிறார். "இதுமுதல் வாடாத ஒரு கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" என்கிறார்.

அவரைத் திரும்பவும் பாருங்கள். அவர் மக்கெதோனியாவுக்குப் போகிறார். பிலிப்பி பட்டணத்தில் அவருக்குக் கிடைக்கும் முதற்காரியம் ஜெயில். பத்தொன்பதாம் நூற்றாண்டாகிய தற்காலத்தில் ஒரு கிறிஸ்தவனுக்கு அது நேரிடுமாகில் எவ்வளவு கூக்குரல் உண்டாகும்! மறியல் கூடத்துக்குள் எவ்வளவு புலம்புதல் இருக்கும்! அதை விட்டு விலகும்படி எவ்வளவு யோசனை உண்டாகும்! நஷ்டத்துக்கு எவ்வளவு வழக்குகள் வரும். இந்த முதிர்ந்த யுத்த வீரன் அப்படிக் கவனிக்கவில்லை. அவர் ஒரு நடு ராத்திரியில் சீலாவே! என்று கூப்பிட்டு, நமது சாயரட்சை ஆராதனைக்கு நேரம் வந்துவிட்டது என்கிறார். அங்கே அந்த மறியல் வீட்டிலே முதுகில் ரத்தம் வடிய, கால்கள்

விலங்கில் மாட்டியிருக்க அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டு களைப் பாடினார்கள். அது ஸ்தோத்திர கீதம் பாட நாம் ஒருபோதும் நினைக்கமாட்டாத இடம்; நாம் பாடினால் ஒரு புலம்பல் பாடுவோம். பவுலோ அப்படி நினைக்கவில்லை. நான் பிலிப்பிய மறியல்கூட வழியாய் மோட்சத்துக்குப் போவது தேவனுக்குச் சித்தமானால் எனக்கு வித்தியாசம் இல்லை. சீலாவே! சந்தோஷப்பட்டுக் களிகூர். "இயேசு வின் நிமித்தம் நாங்கள் பாடுபடுகிறதற்கு பாத்திரராய் எண்ணப்பட்டதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத் துகிறேன்" என்கிறார். அவர்கள் ஸ்தோத்திர பாட்டைப் பாடினபொழுது மற்ற மறியல்காரர் கேட்டார்கள்; அதி லும் விசேஷமாக கர்த்தர் கேட்டார். மறியல் வீடு அதிர்ந் தது; சங்கிலிகள் கழன்றன; அவர்கள் விடுதலை ஆனார்கள். மகா அலெக்சாண்டர் தனது சேனைகளால் உலகத்தை நடுங்கப்பண்ணினார் என்று பேசுகிறோம். இங்கே ஒரு சிறிய கூடாரம் தைக்கிற மனுஷன் சேனைகள் இல்லாமல் உலகத்தை நடுங்கப்பண்ணுகிறான்.

அப்பால் அவருடைய சத்துவமான ஜீவியத்தின் முடிவைப் பாருங்கள். அவர் ரோமையிலே இருந்தார். சொல்லப்படுகிற காலம் சமீபமானபொழுது "நான் தேகத்தைவிட்டுப் பிரியுங்காலம் வந்தது; நல்ல போராட் டத்தைப் போராடினேன்; விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று தீமோத்தேயுவுக்கு எழுதினார். விசு வாசத்தைக் காத்துக்கொண்டார், தேவனுக்கு ஸ்தோத் திரம். அவர் பிரிந்துபோய் பொய் உபதேசத்தைப் போதிக்கவில்லை கிறிஸ்து மரித்தார், இரட்சிப்படைய மனுஷர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்கிற பழைய நல்ல சுவிசேஷத்தை விசுவா